Vol.6, Issue 2 | Annual Subscription ₹ 480

@NewsRotary

/RotaryNewsIndia

ஜூலை 2023

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

ADVT.




## BRING HOME THE TRUE HEARTBEAT OF HEALTH IN THE USA

IDHAYAM is the very definition of an edible oil that's good for you, made from the highest quality ingredients and with the best manufacturing processes.

When shopping for IDHAYAM Sesame oil, make sure to check the authenticity of the product, so you get the true and ultimate benefits of sesame oil that you deserve.

Always look for the brand ambassador Ms.Jyothika's picture on the label and make sure that the address printed on the label is. V.V.V & Sons Edible Oils Limited, 443, Bazaar, Virudhunagar - 626 001.

HAPPY SHOPPING... HEALTHY LIVING.

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS



Scan QR code to watch

Important message from Idhayam

Idhayam Factory Tour

LEKHA ads/July 2023/RJ-01

**IDHAYAM** | www.idhayam.com | office@idhayam.com | Whatsapp : 99447 66661

# உள்ளே


12
நம்பிக்கைகளை செயல்படுத்துவோம்!

20
RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரியுடன் ஒரு சந்திப்பு

30
வெளிப்படையாக பேசும், புத்திசாலியான RI இயக்குநர்

39
ரோட்டேரியன்கள் "மாற்றத்தின் சாம்பியன்கள்"

40
நாங்கள் ஒரு பூங்காவை அல்ல, ஒரு முழு வனத்தை உருவாக்க விரும்புகிறோம்

48
மகாராஷ்டிரக் கிராமத்துக்கு, சுற்றுச்சூழலுக்கு இதமான அடுப்புகள்

50
புனேவில் இதய விழிப்புணர்வு பிரச்சாரம்

52
மகிழ்ச்சி பள்ளிகளிலிருந்து மகிழ்ச்சியான மாணவர்கள் வரை

56
ரோட்டரிக்கு கை கொடுத்தவர்!

58
ரோட்டரியின் முன்னாள் தலைவர் மஜியாக்பே மறைவு

60
துருக்கிக்கு கதைகள் மூலம் நிதி திரட்டுதல்

64
உங்கள் பயணம் நிலையானதாக இருக்கட்டும்!

68
OP நய்யர்: மகிழ்ச்சியின் இசையமைப்பாளர்

76
கோடை மற்றும் மழைக்காலங்களில் உடல் ஆரோக்கியம்




## RI தலைவர் மெக்கினலிக்கு நல்வாழ்த்துக்கள்!




*கொல்கத்தாவில் நடைபெற்ற லட்சியா சந்திப்பில் எடுக்கப்பட்ட RIPE கோர்டன் மெக்கினலி மற்றும் ஹெதர் இருவரின் அழகான புகைப்படத்தைப் பார்த்து ரசித்தேன். அந்த ஜோடி குடும்பத்துடன் இருக்கும் படங்களும் அழகாக இருந்தது. புதிய தலைவருக்கு வளமான ஆண்டு காத்திருக்கிறது. RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதலாக 150 மில்லியன் டாலர்களை வழங்கியுள்ளார். அவர் விடைபெறும் செய்தியும், சிறப்பாக இருந்தன. தேவைப்படும் இடங்களில் தமது கருத்துக்களை ஆசிரியர் தைரியமாக வெளிப்படுத்தியுள்ளார்.*

*RID மகேஷ் கோட்பாகி தமது பிரியாவிடை செய்தியில் கடமைகளை செய்வதில் திருப்தி அடைந்ததாகவும், சக ஊழியர்கள் முழு ஆதரவு கொடுத்ததாகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். RID A S வெங்கடேஷ், பெரிய திட்டங்களை எடுத்து செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். உறுப்பினர் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் TRF பணிகள் குறித்து உறுப்பினர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அறங்காவலர் தலைவர் இயன் ரைஸ்லி ரோட்டேரியன்கள் TRF-க்கு தாராளமாக நிதியுதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். பெரிய கனவு காண்பதற்கு வெட்கப்படாதீர்கள், மற்றவர்களிடம் பரிவு காட்டுங்கள் போன்ற கட்டுரைகள், மும்பையில் மெக்கினலி ராஜஸ்ரீ பிர்லாவை சந்தித்தது, டாக்டர்களுக்கான ரோட்டரி சங்கம், உலகில் அன்புதான் நம்பிக்கையை விதைக்கும், திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை வெளிப்படுத்துதல், நாக்பூரில் மூத்த குடிமக்களுடன் ஒரு நாள், நைல் நதியால் ஆசீர்வதிக்கப்பட்ட எகிப்து உள்ளிட்ட கட்டுரைகள் படிப்பதற்கு தகுதியானவை மற்றும் உண்மைகள் நிறைந்தவை. R D பர்மன் கட்டுரை படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருந்தது. பற்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள் கட்டுரையும் பயனுள்ளதாக இருந்தது. இந்த இதழ் அருமையான பதிப்பு என்றால் மிகையாகாது.*

M T *பிலிப் முல்லப்போன்,*
RC *திருவனந்தபுரம் புறநகர்* — D 3211

*ஜூன் இதழ் ஒருபுறம் பதவி விலகும் ரோட்டரி தலைவரை பற்றியும், மறுபுறம் புதிய தலைவரின் எழுச்சி பற்றியும் விவரிக்கிறது. (மெக்கினலியை பொருத்தவரை ரோட்டரி என்பது தொடர்ச்சி மற்றும் இதயம் பற்றியது.)*

*மியூஸிக் அண்ட் மெலடி (S R மது), வேர்ட்ஸ் வேர்ல்டு (சந்தியாராவ்), மருத்துவம்-சுகாதாரம் (பரத் மற்றும் ஷலன் சாவர்), எல்.பி.டபிள்யூ (T C A ஸ்ரீனிவாசராகவன்) ஆகிய வழக்கமான கட்டுரைகள் படிப்பதற்கு சுவையாக இருக்கின்றன. உங்கள் பணி தொடரட்டும்.*

*சஞ்சய் பாட்டியா,* RC *சண்டிகர் மிட்டவுன்* — D 3080

### எகிப்தின் அழகைக் கண்டு வியந்தேன்!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு மேலான நாகரீகத்தை வளர்த்த பாலைவனச் சோலை எகிப்து பற்றிய தகவல்கள் படிப்பதற்கு சுவையாக இருந்தது. எகிப்து நாட்டிற்கே சென்று வந்தது போல உணர்ந்தேன்.

நாங்கள் எல்லோரும் நடிகை கிளியோபாட்ராதான் அழகி என நினைத்திருந்தோம். ஆனால், ஃபாரோ ராமேஸஸ் 2-ன் மனைவி ராணி நெஃபெர்டரி அவரைவிட அழகானவர் என்பது கட்டுரையை படிக்கும்போதுதான் தெரிந்தது. புகழ்பெற்ற மன்னர் துட்டன்காமுனின் மாற்றாந்தாய் அவர் என்பது நல்ல தகவல்.

மன்னர் ராமேஸஸ் 2 காலத்தில் கட்டப்பட்ட அபு சிம்பெல் கோயில் வரலாறு பிரமிக்கவைத்தது. நைல் நதியின் குறுக்கே அஸ்வான் அணை கட்டப்பட்டபோது இந்த நினைவுச் சின்னங்கள் இடமாற்றம் செய்யப்பட்ட செய்தியை படித்தபோது மலைக்க வைத்தது. பொறியாளர்களின் திறமையை பாராட்டத்தான் வேண்டும்.

மன்னர்கள் பள்ளத்தாக்கில் அரச குடும்பத்திற்காக அமைக்கப்பட்ட அழகிய சுவரோவியங்கள் மற்றும் வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட கல்லறைகள் பார்ப்பதற்கே ரம்மியமாக இருந்தது.

V R T துரைராஜா,
RC திருச்சிராப்பள்ளி — D 3000.

### சிந்திக்க தூண்டும் தலையங்கம்!

நிமிர்ந்து நில் துணிந்து சொல் என்ற தலைப்பில் வெளிவந்த ஆசிரியரின் தலையங்கம் சூப்பர். அவரது வெளிப்படையான கருத்துக்களுக்கு பாராட்டுகள். தேவைப்படும் சூழ்நிலை ஏற்பட்டால் மக்கள் துணிச்சலுடன் பேச வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். அப்படிச் செய்தால் வரும் காலத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். சொல்ல வேண்டியதை சுருக்கமாக சொல்லும் திறன் அவருக்கு இருப்பது பாராட்டுக்குரியது. அவர் எதையும் மென்மையாகவும் அழுத்தமாகவும் கூறுவதால் அதை வாசகர்கள் புறக்கணிக்க முடியாது. தலையங்கத்தில் அவர் கூறும் விஷயங்கள் பொருத்தமாக உள்ளதாக சிலர் மட்டுமே நினைக்கலாம். ஆனால், என்னை பொறுத்தவரை அவை அனைத்து ரோட்டோரியன்களுக்கும் பொருத்தமானதாகும். ஏனெனில்

நாம் அந்த தொழிலில் தலைவர்களாக நம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளோம். தொழில் வாழ்க்கையில் நாம் சவால்களை சந்திக்க வேண்டுமானால், நாம் வலுவானவர்களாகவும் சுயசார்பு உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் சமூக உணர்வை தட்டியெழுப்ப முடியும்.

R ஸ்ரீனிவாசன்
RC பெங்களூரு ஜே.பி.நகர் — D 3190

நிமிர்ந்து நில் துணிந்து சொல் என்ற ஆசிரியரின் தலையங்கம் என்னை மிகவும் கவர்ந்தது. இதுபோன்ற தலையங்கத்தை எழுதவும் துணிச்சல் வேண்டும்.

ரத்து செய்யப்பட்டவர்களுக்கான சங்கம் பற்றிய கட்டுரை விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதற்காக பமீலா பரேஸ்கிக்கு நன்றி. சிந்தனைக் குற்றவாளிகள் மாற்றத்தை ஏற்படுத்துவதால் அவர்கள் வரவேற்கப்படுவார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற அவுட் ஆஃப் பாக்ஸ் சங்கங்களை ஏற்படுத்துவோம்.

யாஷிகா ஜெயின்,
RC சண்டீகர் அப்டவுன் — D 3080

உங்கள் தலைமையில் ஆசிரியர் குழுவினர் ரோட்டரி சங்கங்களின் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் திட்டச் செயல்பாடுகளை திறம்பட பதிவு செய்து வருகின்றனர். அதற்காக ஆசிரியருக்கும், ஆசிரியர் குழுவினருக்கும் எங்களது பாராட்டுகள்.

கர்னல் விஜயகுமார்,
RC ஆலப்புழை பெருநகர — D 3211

PDG சகாதேவனுக்கு சர்வதேச போலியோ விருது தொடர்பான கட்டுரையில், சிறந்த ரோட்டேரியன் என்பதற்கு அவர் ஒரு சிறந்த உதாரணம். உன்னதமான சிறந்த எண்ணங்களைக் கொண்டவர் அவர். அவருடைய நண்பராக இருப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

ராஜசேகர் சிவசாமி,
RC கரூர் டெக்ஸ்சிட்டி — D 3000

ரோட்டரி புற்றுநோய் மருத்துவ மனைக்கு நிதி திரட்ட நடைபெற்ற மராத்தான் கட்டுரை ஒரு சிறந்த திட்டமாகும். இதர ரோட்டரி சங்கங்களும், ரோட்டேரியன்களும் இதுபோன்ற பெரிய திட்டங்களை செயல்படுத்த முன்வர வேண்டும். மாநில அரசுடன் இணைந்து செயல்படுவது பாராட்டத் தக்கது. RID 3203-க்கு உட்பட்ட திருப்பூர் ரோட்டரி சங்கத்துக்கு வாழ்த்துக்கள்.

விவேக் D கனடா,
RC அவுரங்காபாத் எலைட் — D 3132

**அட்டையில்:** RI தலைவர் கோர்டன் மெக்கினலி

**புகைப்படம்:** மோனிகா லொசின்ஸ்கா

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

## ரோட்டரி இன்டர்நேஷனல் நடத்தை நெறிமுறைகளில் பிணைப்பை ஏற்படுத்த வேண்டும்

*எனது குடும்பம் ரோட்டரியுடன் ஏறத்தாழ 17 ஆண்டுகாலமாக தொடர்புகொண்டது. எங்களின் குழந்தைகள் இன்டராக்டர் களாகவும் ரோட்ராக்டர்களாகவும் உள்ளனர். எனது மனைவி வெற்றிகரமான சங்கத்தின் தலைவராக நல்ல திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.*

*பல சங்கங்கள் நடத்தை நெறிமுறைகளை சரிவர பின்பற்று வதில்லை என கேள்விப்படுகிறேன். சங்கத் தலைவர்களும், சர்வேதச பரிவர்த்தனை மாணவர்கள் துன்புறுத் தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. தாங்கள் துன்புறுத்தப்படுவது பற்றி புகார் அளிக்க ரோட்டேரியன்களுக்கு அசாத்திய தைரியம் வேண்டும். பெரும்பாலான சங்கங்கள் இது போன்ற புகார்களை மூடி மறைத்து விடுகின்றன.*

*ரோட்டரி வாரியத்தால் பலமுறை திருத்தியமைக்கப்பட்ட நடத்தை நெறிமுறைகள் ரோட்டரி சங்க நிர்வாக குழு உறுப்பினர்களை நிறுவும் போதும், புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் போதும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.*

*உள்வரும் சங்கத் தலைவர்கள், ஆளுநர்கள், பிராந்திய தலைவர்கள் மற்றும் இயக்குநர்களுக்கு ரோட்டரியின் கொள்கைகள் மற்றும் நடத்தை நெறிமுறைகள் குறித்து ஒவ்வொரு ஆண்டும் PETS மற்றும் சர்வதேச அசெம்பிளி கூட்டத்தின் போது பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.*

*ஜெகன்னாத் சான்ட்ரா*
RC ஜாம்ஷெட்பூர் — D 3250

# செயல்பட அழைக்கிறேன்



நாம் புதிய, தீவிரமான சவால்களைச் சந்திக்கிற இந்த நேரத்தில், ரோட்டரி தன் உறுப்பினர்களை, நாம் சேவை புரிகிற மக்களைக் கவனித்துக்கொள்கிறது, நீடிக்கும் அமைதியை உருவாக்கப் பணியாற்று கிறது, செய்யும் ஒவ்வொன்றிலும் சேர்ந்திருத்தல், உள்ளடக்குதலை இணைக்கிறது. அதனால்தான், உலகில் நம்பிக்கையை உருவாக்குவதற்கு ரோட்டரியில் உள்ள அனைவரையும் நான் அழைக்கிறேன்.

இந்த ஆண்டு, மன நலனை ஆதரிக்கும் திட்டங்களுக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். தனிப்பட்டமுறையில் இந்த முயற்சி எனக்கு மிகவும் முதன்மையானது. ஒருவர் அமைதியாகத் துன்பப்படுவதைப் பார்ப்பது எப்படிப்பட்ட கொடுமை என்று நான் அறிவேன். தனிப்பட்ட இணைப்புகளின் ஆற்றல், உணர்வு மற்றும் மன நலனை விவாதித்தல், தடுத்தல் பராமரிப்பு மற்றும் சிகிச்சையின் உயிர் காக்கும் தாக்கத்தையும் நான் கண்டுள்ளேன்.

அன்பான செயல்களைச் செய்வது நம்முடைய நலனைப் பாதுகாக்க உதவக்கூடிய செயல்திறன் மிக்க வழி என்று ஆராய்ச்சி சொல்கிறது. நமக்குள் அமைதியை உண்டாக்குவதன் மூலம், நாம் உலகில் அமைதியைக் கொண்டுவருவது எளிதாகிறது.

அமைதியைக் கட்டமைப்பது ரோட்டரியின் சாரமாகும். நம்முடைய பல சேவைத் திட்டங்கள் நேர்வித அமைதிக்கான சூழல்களை வளர்க்கின்றன. இணைப்பு மற்றும் நம்பிக்கை எண்ணங்கள் ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினருக்கும் ஊக்கம் அளிக்க வேண்டும். சங்கத் தலைவர்கள் மிகச் சிறந்த சங்க அனுபவத்தை அளிப்பதில் கவனம் செலுத்தும் போது, நாம் இன்னும் கூடுதல் உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்கிறோம், இன்னும் பலரை உறுப்பினர்களாக்குகிறோம். நம் சங்கங்களை நம்மால் இயன்ற அளவுக்கு வரவேற்பவையாக, ஊடாடுபவையாக நாம் ஆக்க வேண்டும்.

நம்முடைய இலக்கு, நம் சங்கக் கூட்டங்களில் தொடங்கி நம் சேவைச் செயல்பாடுகள்வரை அனைத்திலும் சேர்ந்திருத்தல் உணர்வை உருவாக்குவது.

அடுத்த ஆண்டில், நம்முடைய பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்குதல் பயணத்தைத் தொடர்வதில் நான் கவனம் செலுத்து வேன். இதன்மூலம், நாம் சேவை யாற்றுகிற சமூகங்களை ரோட்டரி பிரதிபலிப்பதையும், மனிதத் திறமைகள் மற்றும் அனுபவங்களின் முழு வீச்சையும் அணுகுவதற்குக் குறிப்பிடக்கூடிய படிநிலைகளைத் தொடர்ந்து எடுப்பதையும் உறுதி செய்யலாம். அதன்மூலம், நாம் மனிதகுலத்துக்கு இன்னும் சிறப்பாகச் சேவை புரியலாம். நாம் பெண்கள், சிறுமிகளுக்குள் ஏற்கெனவே உள்ள சாத்தியங்களை வெளிப்படுத்த அவர்களுக்கு உதவுவதன் மூலம் அவர்களுக்கு ஆற்றல் அளிப்பதையும் தொடர்வோம்.

நாம் இந்தப் பயணத்தை ஒன்றாகத் தொடங்குகிற இந்த நேரத்தில், ஸ்காட்லாந்தின் தேசியக் கவிஞர் ராபர்ட் பர்ன்ஸ் அவர்களிடமிருந்து நான் ஊக்கம் பெறுகிறேன். 18ம் நூற்றாண்டில் அவர் ஒட்டு மொத்த உலகமும் உடன் பிறந்தவர்களாகத் தங்களை எண்ணிக்கொண்டு, “உணர்வையும் மதிப்பையும் உலகம் முழுவதும்” முன்னிறுத்த வேண்டும் என்று பேசினார். இதைத்தான் நான் நெடுநாட்களாகச் செய்துவருகிறேன், செய்யத் தூண்டுகிறேன், அதை இப்போது உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ரோட்டரியின் எதிர்காலத்தைப் புதிதாகக் கற்பனை செய்வோம், மகிழ்ச்சியாகச் சேர்ந்து பணியாற்று வோம், உலகில் நம்பிக்கையை உருவாக்குவோம்.

R **கோர்டன்** R **மெக்கினலி**
RI தலைவர்



# புதிய தொடக்கத்தை வரவேற்போம்!

புதிய ரோட்டரி ஆண்டு தொடங்குகிறது. சங்கம், மாவட்டம், மண்டலம் மற்றும் சர்வதேச அளவில் பதவியில் இருக்கும் தலைவர்கள் அடுத்து புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு வழிவிடுவார்கள். ரோட்டேரியன்களும் ரோட்ராக்டர்களுடன் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் புதிய தலைவர்கள்மீது பார்வையை திருப்புவார்கள். இது பணிபுரியும் இடத்தில் புதிய தலைமையை பெறுவதற்கு ஒப்பானதாகும். புதிய தலைவர் அவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி புதிய நம்பிக்கையை கொண்டுவருவார். அது சிலசமயங்களில் நமது எதிர்பார்ப்புக்கு மேலாகவும் இருக்கும் சில சமயங்களில் அவை நமக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும் ஏமாற்றம் அளிக்கும் வகையிலும் இருக்கலாம். முதல் இரண்டு வாரங்களுக்கு ஒவ்வொரு அளவிலும் புதிய தலைமையின் செயல்பாடுகள் உன்னிப்பாக கவனிக்கப்படும். சங்கம் அல்லது மாவட்டம் இனி எப்படிச் செயல்படப்போகிறது. அது உற்சாகம் அளிக்கும் வகையிலும், ஊக்குவிக்கும் வகையில் இருக்குமா? எல்லாவற்றுக்கும் மேலாக சமபங்கு, உள்ளடக்கம் மற்றும் ஒருமைப்பாடு இவற்றை பின்பற்றி தலைமைச் செயல்படுமா என்ற கேள்வியும் இருக்கும்.

வெகு சில தன்னார்வ அமைப்புகள் மட்டுமே ரோட்டரி செய்வது போல சங்கம் மற்றும் மாவட்டத் தலைவர்களுக்கு பயிற்சி அளிப்பதை முக்கியமானதாக கருதும். எனவே GETS, PETS, SETS மற்றும் இதர பயிற்சித் திட்டங்கள் ரோட்டரி உலகம் முழுவதும் திட்டமிடப்பட்டு கடந்த சில மாதங்களில் திறமையாகச் செயல்படுத்தப்பட்டன.


இப்போது பயிற்சிகள் முடிந்துவிட்டன. இனி தலைவர்கள் செயல்படுவதற்கான நேரம் வந்துவிட்டது. தலைமைத்துவம் பல்வேறு சாயல்களில் வருகிறது. சில தலைவர்கள் முன்னோக்கி வழிநடத்துகிறார்கள். அதாவது அவர்களே களத்தில் இறங்கி செயல்படுகிறார்கள். அதை மற்றவர்கள் பின்பற்றுகிறார்கள். வேறு சிலர் சேவைத் திட்டங்கள், இதர திட்டங்கள் மற்றும் சங்கத்திற்கு நன்மதிப்பைத் தரும் நிகழ்வுகள் உள்ளிட்டவற்றை எப்படி நடத்துவது என்று வழிகாட்டுவதுடன் நிறுத்தி கொண்டு குழுவினரை முழுமையாக செயல்பட அனுமதிக்கிறார்கள். அவர்கள் பணிகளை தொடங்கிவைத்து பின்னாலிருந்து இயக்குவார்கள். தங்களது உதவி தேவை என்றால் மட்டுமே தலையிடுவார்கள்.

தலைவர்கள் மேலாதிக்கம் மற்றும் ஆதிக்கம் செலுத்து பவர்களாக இருக்கலாம். அது முந்தையவர்களுக்கு கட்டுப்பாடு போலவும், பிந்தையவர்களுக்கு கொடுங் கோலாட்சி போலவும் இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் அடிமட்டத்தில் சில தலைவர்கள் எந்த அக்கறையும் இல்லாமல், திறமையற்றவர்களாக அல்லது அலட்சியமானவர்களாக இருப்பார்கள்.

ஆனால், நாம் நேர்மறையாக சிந்திப்போம். உங்களை சுற்றிப்பாருங்கள். உங்கள் சங்கம் அல்லது மாவட்டத்துக்கு ஒரு நல்ல தலைவர் செய்த வித்தியாசமான காரியத்தை நீங்கள் உணர்வீர்கள். இதுபோன்ற தலைவர்களின் தனித்துவம் என்னவென்றால், அவர்கள் பதவிக்காலம் முடிந்தாலும், அவர்கள் தலைமையும், செயல்பாடுகளும் என்றும் மறையாது. அதனால்தான் சில PDG-க்கள் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு, வியத்தகு திட்டங்களை செயல்படுத்தி மாவட்டத்துக்கு நல்லபெயர் எடுத்துத்தருவார்கள். தலைவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு பக்கபலமாக இருங்கள். அவர்களுக்கு தோள் கொடுங்கள். அதன் பின் பார்த்தால் நம்மை சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது தெரியவரும். கவலையும் மன அழுத்தமும் கொண்டவர்கள் முகத்திலும், ஏதும் இல்லாதவர்களுக்கு நம்பிக்கை அளிப்பதும், அவர்கள் முகத்தில் புன்னகையை வரவழைப்பதும் ஒரு பெரிய வேலையே இல்லை என்பது புரியவரும்.

ஒருசில அதிர்ஷ்டசாலிகளுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு கிடைக்கும். எனவே உங்களுக்கு தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தால் அல்லது உங்களது சங்கம் அல்லது மாவட்ட குழுவில் இடம்பெறும் வாய்ப்பு பெற்றிருந்தால் அதை இந்த ஆண்டில் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் சமூகத்துக்கு சேவை செய்யவும், உங்களைவிட வசதி குறைந்த ஏழைகளுக்கு உதவவும் முன்வாருங்கள். மன உறுதியுடன் சேவை செய்தால் மாற்றத்தை உருவாக்க முடியும்.

திறமையாகச் செயல்பட்டு உங்கள் பெயரை நிலைநாட்டுங்கள்.



ரஷீதா பகத்

# சிங்கப்பூரில் சந்திப்போம்!



2024 ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டை நடத்தவுள்ள சிங்கப்பூருக்கும் ரோட்டரிக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. எடுத்துக் காட்டாக, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள இந்தத் தீவு நாடு பல பண்பாடுகளை ஒருங்கிணைப்பது, தொழில் இணைப்புகள், புதுமைச் சிந்தனைகளைக் கொண்டாடுவது.

ரோட்டரி இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தபோது, “பன்னாட்டுத் தொழில், அறிவு மையமாகிய சிங்கப்பூர் இதற்குச் சிறந்த இடம்” என்றார் அப்போதைய RI தலைவர் இயான் ரைஸ்லி. “நம்முடைய பன்னாட்டு நோக்கம், பண்பாட்டுப் பன்முகத்தன்மைக்கு நம் உறுதிப்பாடு ஆகியவற்றால், நம் மாநாடுகள் ‘சிறு ஐக்கிய நாடுகள் அவை’ என்று அழைக்கப்படுகின்றன.”

வெப்பமண்டல, சூரிய ஒளி நிறைந்த சிங்கப்பூரில், பல நாடுகளில் வேரூன்றிய பண்பாடு களைக் கொண்ட மக்கள் நிறைந்துள்ளார்கள். இதைப் பிரதிபலிக்கும்வகையில் இங்கு நான்கு அலுவல் மொழிகள் (ஆங்கிலம், மலாய், மான்டரின் சீனம், தமிழ்) உள்ளன.

சிங்கப்பூர் சுற்றுச்சூழல் வளங்குன்றா நிலைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ரோட் தீவைவிடச் சிறிய, அழகான அதன் முதன்மைத் தீவில் கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி பசுமை, பொது இடங்களில் செழிப்பான செடிகொடிகள், நவீன, பெரிய கட்டடங்களுக்கு நடுவில் நேர்த்தியான பூங்காக்கள்.

இங்குள்ள பல பெரிய, மனிதர்களால் உருவாக்கப்பட்ட அருவிகள் (முதன்மை விமான நிலையத்திலும் இப்படி ஓர் அருவி உள்ளது) போன்ற ஈர்ப்பான இடங்களில் இயற்கையும் தொழில்நுட்பமும் சிறப்பாக ஒருங்கிணைகின்றன.

இந்த மாநாடு மே 25 முதல் 29 வரை மரீனா பே சான்ட்ஸ் கண்காட்சி மாநாட்டு மையத்தில் நடைபெறும். பொது நிகழ்வுகள் தேசியத் திடலில் நடைபெறும். எங்களுடன் இணையுங்கள், உலகுடன் நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**மேலும் தெரிந்துகொள்ள**
**பதிவு செய்ய:**
convention.rotary.org

**ஆளுநர் குழு**

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலின்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹுராலால் யாதவ்

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரைகளை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

**அறங்காவலர் குழுவினர்**

அனிருதா ராய்சௌத்ரி RID 3291
RI இயக்குனர் மற்றும்
RNT தலைவர்

T N சுப்ரமணியன் RID 3141
RI இயக்குனர்

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF அறங்காவலர்
துணை தலைவர்

ராஜேந்திர K சாபூ RID 3080

கல்யாண் பானர்ஜி RID 3060

சேகர் மேத்தா RID 3291

அசோக் மஹாஜன் RID 3141

P T பிரபாகர் RID 3232

Dr மனோஜ் D தேசாய் RID 3060

C பாஸ்கர் RID 3000

கமல் சங்வி RID 3250

Dr மகேஷ் கோட்பாகி RID 3131

A S வெங்கடேஷ் RID 3232

குலாம் A வஹன்வதி RID 3141

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

ஸ்வாதி ஹெர்கல் RID 3132
தலைவர், ஆளுநர் குழு

ஹீராலால் யாதவ் RID 3291
செயலாளர், ஆளுநர் குழு

முத்தையா பிள்ளை RID 3212
பொருளாளர், ஆளுநர் குழு

மிலின்த் குல்கர்னி RID 3142
ஆலோசகர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

**இதழ்**



# புதிய சவால்கள், வாய்ப்புகள் மற்றும் கடந்த கால ஞானத்தைத் தழுவுவோம்



என் அன்பான ரோட்டேரியர்களே

2023–24 புதிய ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், மிகுந்த உற்சாகத்துடனும், ஆழ்ந்த பொறுப்புணர்வுடனும் இன்று நான் உங்களுக்கு எழுதுகிறேன். நம் நிறுவனத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட குழுவின் ஒரு பகுதியாக இருப்பது எனக்கு உண்மையில் ஒரு மிகப்பெரிய மரியாதை. தனிநபர்கள் பகிரப்பட்ட குறிக்கோள் மற்றும் கூட்டு மனப்பான்மையுடன் ஒன்றிணைந்தால், அவர்கள் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்த முடியும்.

உலகெங்கிலும் நேர்மறையான மாற்றங்களைச் செய்வதற்கான நம் அமைப்பின் திறன் கடந்தகால தலைவர்களால் கட்டப்பட்ட வலுவான அடித்தளத்தில் உள்ளது. அந்தப் பணியைப் போற்றி, அந்த வெற்றியைத் தொடர வேண்டியது நமது கடமை. அந்த மரபை தொடர்வதில் இங்குள்ள நம் ஒவ்வொருவருக்கும் முக்கிய பங்கு உள்ளது. நம்மைச் சுற்றியுள்ள மாறும் மற்றும் எப்போதும் பரிணாம மாற்றமடையும் உலகில் நாம் பயணிக்கும்போது, தலைமைத்துவத்தில் மாற்றம் மற்றும் தொடர்ச்சி ஆகிய இரண்டின் முக்கியத்துவத்தையும் அங்கீகரிப்பது அவசியம். மாற்றம் அதனுடன் புதிய வாய்ப்புகள், சவால்கள் மற்றும் முன்னோக்குகளைக் கொண்டுவர அதே வேளையில், தொடர்ச்சியானது காலப்போக்கில் பெற்ற வேகம், அறிவு மற்றும் அனுபவத்தை பராமரிக்க அனுமதிக்கிறது. இது தடையற்ற மாற்றத்தை உறுதிசெய்து, நம்முடைய தற்போதைய திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளைத் தக்கவைக்க உதவுகிறது.


உலகம் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியடைகிறது, புதிய சவால்களையும், வாய்ப்புகளையும் நமக்கு அளிக்கிறது. மாற்றத்தை உருவாக்குபவர்களாகிய நாம், புதிய யோசனைகளை ஊக்குவிக்கும், புதிய தொழில்நுட்பத்தை தழுவும், புதுமையான அணுகுமுறைகளை ஆராயும் சூழலை வளர்க்க வேண்டும். புதிய யுகத்தின் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுடன் கடந்தகால ஞானத்தை ஒருங்கிணைப்பதன் மூலம், நம் காலத்தின் பிரச்சினைகளை தீர்க்கவும், நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தவும் முடியும். மேலும், வருங்காலத் தலைவர்களின் வளர்ச்சியிலும், அவர்களின் திறனை வளர்த்து, ரோட்டரியின் விழுமியங்களை அவர்களுக்குள் புகுத்துவதற்கும் நாம் முதலீடு செய்ய வேண்டும். வளர்ந்து வரும் தலைவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு அளித்தல் நம் நிறுவனத்தின் நிலைத்தன்மைக்கான முதலீடாகச் செயல்படும்.

ரோட்டரி மீதான உங்கள் நம்பிக்கை, ஈடுபாடு மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு நன்றி. நாம் ஒன்றாக இணைந்தால் இந்த உலகில் நம்பிக்கையை தொடர்ந்து உருவாக்க முடியும்.

அனிருதா ராய்சௌத்ரி
RI இயக்குனர் 2023–25

இரு இயக்குனர்களும் தங்கள் செய்தியை மாற்று மாதத்தில் பகிர்ந்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.

# துணிச்சலான இலக்குகள்



முந்தைய ஐந்து ஆண்டுகளில், ரோட்டரி அறக்கட்டளை 100 மில்லியன் பேருக்கு நன்மை அளித்துள்ளது. இது வியப்பூட்டும் உண்மை.

ஆனால், தேவை அதைவிடப் பெரியது. நம்மிடம் வளங்கள் இருந்தால் நாம் எட்டக்கூடிய, ஆதரிக்கக் கூடியவர்கள் இன்னும் ஏராளமாக இருக்கிறார்கள். அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாம் இதுபோல் இருமடங்கு மக்களை எட்டலாம். உங்களுடைய சக ரோட்டராக்டர்களும் ரோட்டரியன்களும் இதில் உதவத் தயாராக உள்ளார்கள்.

அதனால், இந்த ஆண்டு, ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர்கள் $500 மில்லியன் வழங்குகிற துணிச்சலான இலக்கை அமைத்துள்ளார்கள். இது நாம் இதுவரை சாதிக்காத மிகப் பெரிய இலக்கு.

இதைப் பிரித்துப்பார்த்தால், நிதி நல்கைகளுக்கு உதவும் ஆண்டு நிதிக்கு $150 மில்லியன், இளம்பிள்ளை வாதத்தை நீக்குவதற்கு $50 மில்லியன். இத்துடன் பில் மெலின்டா கேட்ஸ் அறக்கட்டளை 2க்கு 1 என்ற விகிதத்தில் $100 மில்லியன் வழங்கும். நன்கொடை நிறுவல் நிதி மற்றும் நம்முடைய எதிர்காலத்துக்கு நாம் $60 மில்லியன் உடனடியாக வழங்கல், $80 மில்லியன் உறுதிப்பாடுகள் என மொத்தம் $140 மில்லியன் இலக்கு அமைத்துள்ளோம். நேரடி வழங்கல், பன்னாட்டு நல்கைகளுக்கான ரொக்கம், பேரிடர் எதிர்வினை நிதி நன்கொடைகள் போன்ற மற்ற பங்களிப்புகளில் நாம் $60 மில்லியன் திரட்ட விரும்புகிறோம்.

இவை அனைத்தும் நடக்கவேண்டுமென்றால், நீங்கள் அனைவரும் உதவவேண்டும். ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வொரு ரோட்டராக்டரும் உதவ வேண்டும்.


உங்களுக்குத் தெரியுமா? ரோட்டரி உறுப்பினர்களில் 80%க்கு மேற்பட்டோர் போலியோப்ளஸ்ஸுக்கு எந்தப் பங்களிப்பும் வழங்குவதில்லை. 60%க்கு மேற்பட்டோர் ரோட்டரி அறக்கட்டளைக்கு எந்த நன்கொடையும் வழங்குவதில்லை. இதன் பொருள், 1.4 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட நம் அமைப்பில் கிட்டத் தட்ட 1 மில்லியன் பேர் ஒவ்வோர் ஆண்டும் பங்களிப்பதில்லை.

அந்த 1 மில்லியன் பேரும் ஆண்டுதோறும் தலா 25 பங்களித்தால், அது எப்படிப்பட்ட பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும் என்று கற்பனை செய்துபாருங்கள். நம் அனைவராலும் நன்கொடை அளிக்க இயலும். அதனால்தான், இந்த ஆண்டு ரோட்டரி அறக்கட்டளைக்கு உங்களால் இயன்றதை வழங்கும்படி ஓர் இலக்கு அமைத்துக்கொள்ளும்படி உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**பாரி ரசின்**
TRF அறங்காவலர் தலைவர்



# வழங்குவதற்குச் சரியான நேரம், இப்போதுதான்



மிகச் சிறந்த சாதனைகள் அனைத்தும் ஒரு கனவிலிருந்து தொடங்குகின்றன. ரோட்டரி அறக்கட்டளை, ஆர்ச் கிளம்ஃப் என்ற ஒருவருடைய மனத்தில் கனவாகத் தொடங்கியது. அந்த எளிய தொடக்கத்திலிருந்து, இன்றைக்கு அது மனித குலத்துக்கு நன்மை செய்யும் முன்னணி அமைப்புகளில் ஒன்றாக ஆகியிருக்கிறது. இந்த அறக்கட்டளை மதிக்கப்படுகிற, விரைவான, சுறுசுறுப்பான மற்றும் உலகில் மிகவும் செயல் திறனுடன் நிர்வகிக்கப்படும் தொண்டு அமைப்புகளில் ஒன்றாக உள்ளது.

நோட்ரெ டேம் பல்கலைக்கழகத்தின் "தாராள மனப்பான்மையின் அறிவியல் திட்டம்", தாராள மனப்பான்மையை "பிறருக்கு நல்ல விஷயங்களைச் சுதந்தரமாகவும் நிறையவும் கொடுக்கும் பண்பு" என்று வரையறுக்கிறது. இந்த வரையறையில் மூன்று பகுதிகள் முதன்மையானவை. தாராள மனப்பான்மை என்பது, "நல்ல விஷயங்களை"க் கொடுப்பது, "சுதந்தரமாக"க் கொடுப்பது, "நிறைய"க் கொடுப்பது. நாம் TRFஐ ஆதரிக்கும் போது இவை அனைத்தும் நிகழ்கின்றன. நாம் TRFக்குக் கொடுக்கும்போது, அந்தப் பணம் மற்ற ரோட்டரியன்களால் அறிவார்ந்தமுறையிலும் நன்றாகவும் பயன்படுத்தப்படும் என்பதையும், நாம் ஒன்று சேர்ந்தால், தனித்தனியாகச் செய்யக்கூடியவற்றைவிட மிகக் கூடுதலாகச் செய்யலாம் என்பதையும் நாம் அறிவோம்.

'மகாபாரதத்தில்' நாம் அனைவரும் அறிந்த புகழ் பெற்ற ஒரு நிகழ்ச்சி. ஒருவர் யுதிஷ்டரிடம் பிச்சை கேட்கிறார். அவரை நாளை வரும்படி சொல்கிறார் யுதிஷ்டர். இதைக் கேட்டு பீமர் 'என்னுடைய அண்ணன் யுதிஷ்டர் மரணத்தை வென்றுவிட்டார்' என்று மகிழ்கிறார்! ஏனெனில், நாளை கொடுப்பதற்கு தான் இருப்போம் என்று யுதிஷ்டர் கருதுகிறார். பீமர் சொல்லும் செய்தியை யுதிஷ்டர் புரிந்துகொண்டார். நாளை கொடுப்பதற்குத் தாங்கள் இருப்போமா என்று யாருக்கும் தெரியாது. TRFக்குக் கொடுக்க மிகச் சிறந்த நேரம், இப்போதுதான்.

நாம் ஒரு புதிய ரோட்டரி ஆண்டைத் தொடங்கும் இந்த நேரத்தில், ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்குவதிலும், அதற்குச் சேவை புரிவதிலும், அதன் வழியாகச் சேவை புரிவதிலும் முன்னணியில் நின்று வழிகாட்டுவோம்.

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர் துணை தலைவர் 2022–26

# Rotarians!

Visiting Chennai for business?

Looking for a compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 37,183 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,283 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 13,527 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 12,886 |
| ரோட்டரியினர் | : | 1,201,101 |
| ரோட்டராக்டர்கள் | : | 175,301 |
| இன்டராக்டர்கள் | : | 311,121 |

As on June 15, 2023

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on June 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 137 | 6,350 | 6.99 | 73 | 492 | 31 | 255 |
| 2982 | 83 | 3,776 | 6.83 | 34 | 820 | 81 | 76 |
| 3000 | 132 | 5,554 | 10.30 | 104 | 1,639 | 168 | 215 |
| 3011 | 125 | 4,806 | 28.73 | 82 | 2,677 | 112 | 37 |
| 3012 | 152 | 3,848 | 23.44 | 74 | 1,296 | 75 | 61 |
| 3020 | 87 | 5,025 | 7.34 | 43 | 1,195 | 116 | 350 |
| 3030 | 101 | 5,572 | 14.95 | 122 | 2,032 | 447 | 383 |
| 3040 | 116 | 2,639 | 15.88 | 59 | 794 | 64 | 213 |
| 3053 | 71 | 2,892 | 16.32 | 35 | 576 | 42 | 128 |
| 3054 | 172 | 7,086 | 19.98 | 107 | 1,466 | 153 | 577 |
| 3060 | 105 | 5,130 | 15.79 | 68 | 2,396 | 52 | 144 |
| 3070 | 128 | 3,558 | 16.50 | 47 | 545 | 51 | 60 |
| 3080 | 108 | 4,375 | 12.87 | 121 | 2,268 | 108 | 117 |
| 3090 | 106 | 2,487 | 5.55 | 46 | 575 | 180 | 164 |
| 3100 | 112 | 2,387 | 13.87 | 15 | 137 | 30 | 151 |
| 3110 | 145 | 3,987 | 12.34 | 17 | 118 | 29 | 106 |
| 3120 | 89 | 3,803 | 15.93 | 36 | 411 | 25 | 55 |
| 3131 | 144 | 5,846 | 24.75 | 142 | 3,216 | 174 | 145 |
| 3132 | 91 | 3,705 | 13.55 | 37 | 527 | 100 | 168 |
| 3141 | 111 | 6,315 | 27.02 | 152 | 5,594 | 158 | 175 |
| 3142 | 102 | 3,937 | 21.54 | 92 | 2,985 | 72 | 88 |
| 3150 | 113 | 4,492 | 13.16 | 153 | 2,038 | 93 | 129 |
| 3160 | 78 | 2,726 | 8.88 | 32 | 234 | 80 | 82 |
| 3170 | 148 | 6,848 | 15.86 | 111 | 1,871 | 145 | 178 |
| 3181 | 87 | 3,710 | 10.62 | 39 | 480 | 76 | 117 |
| 3182 | 88 | 3,671 | 10.11 | 45 | 216 | 101 | 107 |
| 3190 | 170 | 7,212 | 20.58 | 223 | 5,286 | 191 | 74 |
| 3201 | 171 | 6,746 | 9.83 | 133 | 2,033 | 82 | 93 |
| 3203 | 94 | 4,971 | 7.81 | 86 | 1,183 | 118 | 39 |
| 3204 | 78 | 2,632 | 7.37 | 24 | 226 | 17 | 13 |
| 3211 | 158 | 5,245 | 8.33 | 10 | 133 | 19 | 133 |
| 3212 | 127 | 4,807 | 11.61 | 87 | 3,552 | 140 | 153 |
| 3231 | 97 | 3,517 | 8.25 | 37 | 400 | 39 | 417 |
| 3232 | 173 | 6,707 | 19.87 | 124 | 7,210 | 129 | 101 |
| 3240 | 110 | 3,729 | 16.87 | 71 | 1,306 | 60 | 226 |
| 3250 | 104 | 3,996 | 21.37 | 68 | 1,032 | 42 | 191 |
| 3261 | 101 | 3,571 | 23.91 | 17 | 70 | 20 | 45 |
| 3262 | 124 | 3,890 | 15.17 | 75 | 736 | 640 | 282 |
| 3291 | 152 | 4,021 | 25.09 | 135 | 2,039 | 54 | 708 |
| **India Total** | **4,590** | **175,569** | | **2,976** | **61,804** | **4,314** | **6,756** |
| 3220 | 72 | 2,173 | 16.34 | 98 | 5,224 | 71 | 77 |
| 3271 | 171 | 3,439 | 18.46 | 185 | 3,006 | 311 | 28 |
| 3272 | 162 | 2,261 | 15.30 | 74 | 1,017 | 14 | 48 |
| 3281 | 312 | 7,239 | 18.11 | 280 | 2,122 | 144 | 207 |
| 3282 | 184 | 3,650 | 10.05 | 203 | 1,590 | 29 | 47 |
| 3292 | 158 | 5,920 | 18.73 | 180 | 4,936 | 79 | 135 |
| **S Asia Total** | **5,649** | **200,251** | | **3,996** | **79,699** | **4,962** | **7,298** |

*Source: RI South Asia Office*

# நம்பிக்கைகளை செயல்படுத்துவோம்!

**டேவ் கிங்**

*ஸ்காட்லாந்தின் கோர்டன் மெக்கினலி, தனது தலைமைப்பதவியின் முன்னுரிமைகளை செயலுக்கு கொண்டு வருகிறார்.*

நாட்டுப்புற இசை, ஸ்காட்ச் விஸ்கி, ஸ்காட்லாந்தின் சிறந்த கவிஞரான ராபர்ட் பர்ன்ஸின் உற்சாகமான கவிதைகள் கொண்ட பாடல்கள் மற்றும் அசைவ உணவு மற்றும் உருளைக்கிழங்கு பொறியலுடன் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியில் பர்ன்ஸ் இரவு கொண்டாடப்படுகிறது.

இந்த இரவை அவர் தனது ஸ்காட்டிஷ் நண்பர்களுடன், தனது யெதோல்ம் வீட்டின் அருகே உள்ள கலாஷில்ஸ் நகரில் கொண்டாடுவார். 1997ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டுக்காக தயாரிக்கப்பட்ட பச்சை நிற கட்டம், அதில் வெளிர்நீலம் மற்றும் சிவப்பு கலந்த டார்டான் வண்ண ஆடையை 42 வயதான அவரது மனைவி ஹெதர் மெக்கினலி அணிந்திருந்தார். இசையில் பயிற்சி பெற்றவரும் பாடகருமான அவர், சிறுவயதில் கற்றுக்கொண்ட பர்ன்ஸின் பாடல்களை விரும்பிப் பாடுவார்.

ஹக்கிஸ் என்பது வேறு ஒன்றும் இல்லை. செம்மறி ஆட்டின் தலை, குடல், ஈரல் இவற்றை வெங்காயம், ஓட்ஸ், உப்பு, மிளகு மற்றும் இதர மசாலாபொருள்களைச் சேர்த்து அரைத்து சாதத்துடன் வேகவைக்கப்பட்டது. இந்த உணவு ருசியானது. இதை மெக்கினலி தம்பதிகள் தாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் ரோட்டரி சமூகத்தினரிடையே பரப்பி வருகின்றனர்.

பல மாநிலங்களுக்குச் செல்லும்போது ஹக்கிஸ் உணவு தயாரிப்பதற்கு தேவையான பொருள்களை உள்ளூரில் எப்படி பெற்றோம் என்பதையும் ஹோட்டல் அறையில் மைக்ரோ ஓவனில் அவற்றை சூடுபண்ணியதையும் ஹெதர் மெக்கினலி விவரிக்கிறார். நாங்கள் தங்கியிருக்கும் ஒருவாரம் வரை எங்கள் அறையில் ஹக்கிஸ் வாசனை இருக்கும். சிகாகோவில் இருந்த போது ரோட்டரி இன்டர்நேஷனல் வாரிய இயக்குநர்களுக்கு ஹக்கிஸ் சப்ளை செய்ததை அவர் பெருமையாக குறிப்பிட்டார். எல்லோரும் என்ன சாப்பிடுகிறோம் என்று தெரியாமலேயே அதை சுவைத்து சாப்பிட்டதாக அவர்கள் கூறினர்.

கோர்டன் மெக்கினலி எடின்பர்க்கில் கடலோரப் பகுதியான போர்டோபெல்லோவில் வளர்ந்தார். அந்த கடற்கரை பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். கடற்கரை மணல் வெளிர் நிறத்திலும், கரைகளில் மரத்தடுப்புகளும் போடப்பட்டிருக்கும். அவரது தாயார் தனியாக நர்சரியை நடத்தி வந்தார். தந்தை கிளென்மோரங்கிள் விஸ்கி வகைகளை தயாரிக்கும் மெக்டொனால்டு நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். மறைந்த சகோதரர் இயன் அவரைவிட மூன்று ஆண்டு இளையவர். இருவரும் தங்கள் குழந்தை பருவத்தில் ரக்பி





கோர்டன் மற்றும் ஹெதர் மெக்கினலி தென் குவின்ஸ் ஃபெரியில்.

விளையாடுவதையும் பார்ப்பதிலும் பொழுதை கழித்தனர்.

கோர்டன் மற்றும் ஹெதர் இருவரும் தங்களின் பதின்மவயதில் சந்தித்தனர். மேலும் எடின்பர்கில் உள்ள தனிப்பள்ளிகளில் ஒருங் கிணைந்த பாடகர்கள் குழுவுடன் இத்தாலியில் பிளாரன்ஸ் நகருக்கு பயணித்த போது அவர்களுக்குள் உறவு மலர்ந்தது. நாங்கள் ஒருவரை சார்ந்து மற்றொருவர் இல்லை. நாங்கள் நாங்களாக செயல்பட்டு வந்தோம் என்றார் ஹெதர் மெக்கினலி. ரோட்டரியில் கூட நான் பார்டர்லாண்ட்ஸ் பாஸ்போர்ட் கிளப்பைச் சேர்ந்தவள். (இது செல்கிர்க் ரோட்டரி சங்கத்திற்கு உட்பட்ட சிறிய சங்கம்) கோர்டன் சௌத் குயீன்ஸ்பெர்ரி சங்கத்தின் உறுப்பினராவார். எங்கள் வாழ்க்கை அப்படித்தான் இருந்தது. பெரும்பாலும் வேலை பொறுப்புகள் காரணமாக நாங்கள் வெவ்வேறு திசைகளில் செல்வோம். நாங்கள் சுதந்திரமாக செயல்படுபவர்கள். ஆனால், இரவில் வீட்டிற்கு வந்தவுடன் நாங்கள் என்ன செய்தோம் என்பதை ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வோம்.

அவளுடைய கணவரும் அதை ஆதரிக்கிறார். அந்த தம்பதிகளுக்கு ரெபக்கா மற்றும் சாரா என்று இரண்டு மகள்கள் மற்றும் ஐவி, பிளாரன்ஸ் என்று இரு பேரக்குழந்தைகள். ஹெதர் மிகவும் சகிப்புத்தன்மை கொண்ட பெண்மணி. பல ஆண்டுகளாக எனக்கு ஆதரவாக இருந்து வருகிறார் என்று விவரிக்கிறார் மெக்கினலி.

அவர் மேலும் கூறுகிறார்: அவள் தனக்கு மனதில் பட்டதை தைரியமாக எடுத்துக்கூறுவாள். நான் அவள் சொல்வதை நம்புவேன். நான் ஒரு விளக்க காட்சியில் பேசினால், எல்லோரும் என்னிடம் உங்கள் பேச்சு பாராட்டும்படி இருந்தது என்று கூறுவார்கள். ஆனால், ஹெதர் உண்மையைச் சொல்லிவிடுவார். அவளின் ஆதரவு இல்லாமல் எந்த வேலையையும் நான் சிறப்பாகச் செய்திருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்.

எடின்பர்கில் உள்ள கிரெய்க்ஸ் பாங்க் பாரிஷ் தேவாலயத்தில் அவர்கள் திருமணம் செய்து கொண்ட போது கோர்டன் மெக்கினலி ஸ்காட்லாந்து தேவாலயத்தின் உறுப்பினரானார். அதற்கு முன்னர் அவர் மெதடிஸ்ட் தேவாலயத்தின் உறுப்பினராக இருந்தார். இப்போது அந்த தேவாலயத்தின் மூத்த உறுப்பினர் மட்டுமல்ல, அதன் அறங்காவலராகவும் இருக்கிறார். பாரிஷ் திருச்சபையின் வாரியத்தின் தலைவராகவும், தேவாலய பொதுச் சபையின் ஆணையராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

எனது பெற்றோர் எனக்கும் மறைந்த எனது சகோதருக்கும் மற்றவர்கள் மீது அக்கறை செலுத்த வேண்டும் என்ற உணர்வை ஊட்டி வளர்த்தனர். அதை நான் மறக்கவில்லை. எனது தனிப்பட்ட நம்பிக்கை மற்றும் குடும்பத்தில் என்னை வளர்த்தெடுத்த விதமும் எனது வாழ்க்கையிலும், தொழிலிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றார் மெக்கினலி.

மெக்கினலி, ஸ்காட்லாந்து தலைநகரில் 30 வருடங்களுக்கு மேலாக பிஸியான பல்மருத்துவராக பணியாற்றி 2016இல் ஓய்வுபெற்றார். அவர் ஆசிரியர் மற்றும் தேர்வுத் துறையிலும் பணியாற்றினார். மேலும் பிரிட்டிஷ் பல்மருத்துவ சங்கத்தின் கிளைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். (இப்போது அது குழந்தைகள் பல்மருத்துவத்துறையாக செயலாற்றி வருகிறது.) சௌத் குயின்ஸ்பெர்ரியில் பல ஆண்டுகள் வாழ்ந்த பிறகு, ஸ்காட்டிஷ் எல்லைப் பகுதிக்கு இடம்பெயர்ந்தார்.

நான் பல் மருத்துவராக இருந்த காலத்தில் வீட்டை ஸ்காட்லாந்து



*கோர்டன் மற்றும் ஹெதர் மெக்கினலி தன் தோழர்களுடன் எடின்பர்கில் உள்ள ஒரு ரக்பி ஸ்டேடியத்தில்.*

எல்லைப் பகுதிக்கு மாற்றினால் நன்றாக இருக்கும் என்று நாங்கள் கூறினோம். ஏனென்றால் எனது முன்னோர்கள் அங்கிருந்து வந்தவர்கள்தான் என்றார் மெக்கினலி. என்னுடைய தாய்வழி குடும்பத்தினர் விவசாயிகள். எனது தாயார் இங்கிருந்து 15 மைல் தொலைவில் உள்ள ஒரு பண்ணை வீட்டில் பிறந்தார். நான் இங்கு வந்தபோது என்னுடைய டிஎன்ஏவும் இங்கு வந்துவிட்டதை போல உணர்ந்ததாக மக்களிடம் கூறினேன் என்றார்.

மெக்கினலியை பொருத்தவரை இரவு நேரங்களில், கலாஷில்ஸ் பள்ளி இளைஞர்களின் நடிப்பில் பர்ன்ஸ் படைப்புகளை பார்ப்பது, கேட்பது பிடித்தமானது. இளம் பப்பிலுன் ஹக்கிஸ் உரையை வாசிப்பார். பின்னர் பைப் இசை, பிடில் வாசிப்பு, மற்றும் குழுபாட்டு என தொடர்ந்து மனதை மயக்கும் ஆல்டு லாங் சைனே பாடலுடன் முடிவடையும்.

சில நாட்களுக்குப் பின்னர் மெக்கினலி அபோட்ஸ்ஃபோர்டு மாளிகைக்கு இடம் பெயர்ந்தார். அது எல்லைப் பகுதியில் நதியை ஒட்டி அமைந்திருந்தது. பார்வையாளர்களை அழைத்துச் செல்ல அது ஒரு அழகான இடம். மெக்கினலிக்கு விருப்பமான இடமும்கூட.

அப்போட்ஸ்ஃபோர்டு இல்லம் கவிஞரும் நாவலாசிரியரும் வரலாற்று ஆசிரியருமான சர் வால்டர் ஸ்காட் வாழ்ந்த இல்லமாகும். டார்டன் அணிவதை அவர்தான் பிரபலப்படுத்தினார். வரலாற்று நாவலை உருவாக்கினார். அவரது ரசிகர்களில் ராணி விக்டோரியாவும் ஒருவர். அப்போட்ஸ்ஃபோர்டு வீட்டின் கட்டிடக் கலை ஸ்காட்லாந்தில், ராணி இரண்டாம் எலிஸபெத்தின் கோடை வாசஸ்தலமான பால்மோரல் காஸில் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் உருவாக முன்மாதிரியாக இருந்தது. இப்போது ஸ்காட்டின் படைப்புகளான இவான்ஹோ மற்றும் ராப் ராய் ஆகியவற்றை பின்பற்றித்தான் திரைப்படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. 19ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பரோனியல் கட்டிடம் இன்றும் இருக்கிறது. ஆனால், மிகவும் தூசுகள் படிந்து இருப்பதால் பொதுமக்கள் பார்வைக்கு மூடப்



*ராக்ஸ்பர்க்ஷைரில் மெக்கினலி தம்பதியினர்.*

பட்டுள்ளது. அங்கிருந்த பர்னிச்சர்கள் தூசுபடிந்து காணப்பட்டன. ஒருவர் மட்டும் அங்கு அலமாரிகளில் வைக்கப்பட்டிருந்த 9,000-த்துக்கும் மேலான புத்தகங்களை தூசி தட்டி அடுக்கிக் கொண்டிருந்தார்.

ஸ்காட்டிற்கு 18 வயதில் போலியோ தாக்கியபோது அவருக்கு எல்லைகளில் தொடர்பு ஏற்பட்டது. போலியோவால் பாதிக்கப்பட்ட அவரின் வலது கால் செயலிழந்தது. எனவே அவரது பெற்றோர் ஸ்காட்டை கெல்ஸோவுக்கு வெளியே தாத்தாவின் பண்ணைவீட்டுக்கு பராமரிப்புக்காக அனுப்பிவைத்தனர். போலியோ காரணமாகவே வால்டர் எல்லைப் பகுதிக்கு வர நேர்ந்தது. அங்கு அவர் தனது எழுத்தை ஊக்குவிக்கும் கதைகள் மற்றும் பாடல்களைக் கேட்டார் என்று விளக்கினார் அபோட்ஸ்ஃபோர்டின் பாரம்பரிய அதிகாரி மேரி கென்னி. மெக்கினலியும் கென்னியும் ஸ்காட் ஒரு பெரிய ரோட்டரி

உறுப்பினராக வந்திருப்பார் என்பதை ஒப்புக்கொண்டனர்.

மெக்கினலியின் ரோட்டரி பயணம் அவரது 26வது வயதில் தொடங்கியது. குடும்பத்தின் தேவாலயத்தில் உறுப்பினராக இருந்த விவசாய நண்பரின் அழைப்பின் பேரில் அவர் சௌத் குயின்ஸ்பெர்ரி ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். தொடக்கத்தில் நான் நகரத்தில் நண்பர்களை உருவாக்குவதற்கும், சமூக மக்களுக்கு பயனளிக்கும் வழியாகவும் ரோட்டரியை பார்த்தேன். காலம் செல்லச் செல்ல உலகெங்கிலும் ரோட்டரி ஆற்றிவரும் சேவைகளை உணர்ந்து மேலும் ஈர்க்கப்பட்டேன் என்றார்.

துரதிருஷ்டவசமாக இப்போது மூடப்பட்டுள்ள கெல்ஸோ ரோட்டரி சங்கத்தில் 3 ஆண்டு காலம் உறுப்பினராக இருந்தது தவிர, அவர் சௌத் குயின்ஸ்பெர்ரி சங்கத்திலேயே உறுப்பினராக இருந்தார். 1997–98ல் அவர் மாவட்ட ஆளுநராக பணியாற்றினார். 2004–05ஆம் ஆண்டில் ரோட்டரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய போது அவர் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தின் சர்வதேச ரோட்டரி தலைவராக இருந்தார். RIBI தலைவராக வருவதற்கு சி றிது முன்னதாக, மெக்கினலி 1994 ருவாண்டா இனப்படுகொலை மற்றும் ஹெச்ஐவி-எய்ட்ஸால் அனாதைகளான குழந்தைகளுக்காக பணிபுரிய ருவாண்டா மற்றும் தென்னாப்பிரிக்காவுக்கு சென்றார். பின்னர் இருநாடுகளிலும் செயல்பட்டு வரும் ஹோப் மற்றும் ஹோம் ஃபார் சில்ட்ரன் அமைப்புகளுடன் RIBI கூட்டாண்மை திட்டத்தை ஏற்படுத்தி அங்குள்ள அனாதை குழந்தைகளுக்கு உணவு, தங்குமிடம், மருத்துவம் மற்றும் கல்வியுடனான எதிர்கால திட்டத்தை செயல்படுத்த உதவிக்கரம் நீட்டினார். ஹோப் மற்றும் ஹோம் ஃபார் சில்டரன் அமைப்பின் பெருமை மிகு புரவலராக இருக்கிறார். இப்போது அந்த அமைப்புகள் ருவாண்டா அரசு தேசிய குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்த ஆதரவளித்து வருகிறது.

ஆப்பிரிக்காவில் மெக்கினலி செய்துவந்த பணி பின்னர் கென்யாவுக்கும் பரவியது. கோவிட்-19 தொற்றுக் காலத்துக்கு சற்று முன்னதாக அவர் ஸ்காட்டிஷ் ரோட்டரி உறுப்பினர்கள் தலைமையிலான ஒரு முயற்சியின் ஒருபகுதியாக சேவை செய்ய கென்யா சென்றார். அங்கு நியும்பானி கிராமத்தில் பல் பரிசோதனை முகாம் நடத்தினார். அந்த கிராமம் ஒரு நிலையான நோக்கத்திற்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு கண்ணோட் டத்தில் உருவான கிராமமாகும். இந்த கிராமம் அனாதை குழந்தைகள் மற்றும் அவர்களின் பாதுகாவலர்களாக தாத்தா பாட்டிகள் வசிப்பதற்கான கிராமமாகும். இங்குள்ள குடியிருப்புகளை புதுப்பிக்கவும் மெக்கினலி உதவினார். மற்றவர்கள் மீது அக்கறை செலுத்தி அவர்களுக்கு உதவுவதற்கு ஒரு முக்கிய கருவியாக

*டார்டன் வகை துணி தயாரிப்பு ஆலையில் மெக்கினலி தம்பதியினர்.*



ரோட்டரி இருப்பதை நான் அறிந்து கொண்டேன். ரோட்டரியும் எனக்கு உலகம் முழுவதும் நண்பர்களை உருவாக்கி கொடுத்திருக்கிறது. அதன் விளைவாக நான் வாழும் உலகத்தை பற்றிய புரிதலையும் எனக்கு அளித்துள்ளது என்கிறார் மெக்கினலி. இவை அனைத்தும் தனிப்பட்ட வளர்ச்சியுடன் சேர்ந்து என்னை ஈர்க்கிறது மற்றும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது என்றார் அவர்.



*மகள்கள் சாரா வார்டல் (இடது) மற்றும் ரெபக்கா மெக்கினலியுடன், கோர்டன் மற்றும் ஹெதர் மெக்கினலி.*

மெக்கினலி தன் வீட்டிற்கு அருகிலேயே தங்கியிருந்த போதிலும் அவரது சகோதரர் இயன், எடின்பர்கில் உள்ள ஹிரியட் வாட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பிறகு லண்டனுக்க வெளியே வசித்து வந்தார். ரோட்ராக்ட் உறுப்பினராக இருந்தார். கணினி நிறுவனத்தில் பணிபுரிந்தபோது மனைவியை சந்தித்தார். இரண்டு சகோதரர்களும் குடும்பத்தினரும் பல ஆண்டுகளாக ஒருவரை ஒருவர் சந்தித்து வந்தனர். ஆனால், இயன் மனச்சோர்வு நோயால் பாதிக்கப்பட்டிருப்பது மெக்கினலிக்கு தெரியவரவில்லை. இந்த நிலையில் 2014ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் தேதி இயன் மெக்கினலி தற்கொலை செய்துகொண்டார்.

அந்த தருணத்தில் இயனை விரும்பியவர்களின் மனதில் மாற்றம் ஏற்பட்டது. அவர்கள் தொடர்ந்து தங்களுக்குள்ளேயே கேள்விகளை கேட்டுக் கொண்டனர். நாம் ஏன் அவரை தவறவிட்டோம். அவருக்காக இன்னும் நாம் என்ன செய்திருக்கலாம் என்ற கேள்வி அவர்கள் முன் எழுந்தது.

ஜனவரி மாதம் ப்ளோரிடாவில் நடைபெற்ற சர்வதேச அசெம்பிளி கூட்டத்தில் பேசுகையில் மெக்கினலி இதை நினைவுகூர்ந்தார். முதல் முறையாக தனது சகோதரர் தற்கொலை செய்து கொண்டது குறித்து பொது மேடையில் பேசினார். அவர் பேசும் போது மிகவும் உணர்ச்சிவசப்பட்டார். நான் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் உரையாற்றுவது ஒன்றும் எளிதாக இல்லை என்று அவர் கூறினார். அப்போதுதான் முதன் முறையாக அவர் உணர்ச்சி வசப்பட்ட போதிலும் மனம் உடையாமல் பேசினார்.

கதையைச் சொல்லி மற்றவர்களிடம் அனுதாபத்தை தேடுவது அவரது நோக்கமல்ல, ஆனால், மனநலப் பிரச்னைகள் பற்றி மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே இந்த சம்பவத்தை குறிப்பிட்டதாக மெக்கினலி கூறினார். பின்னர் பலரும் அவரிடம், உங்கள் கதையைப் போலவே என் கதையும் உள்ளது என்று தெரிவித்ததாக மெக்கினலி கூறினார்.

கடந்த ஆண்டு மெக்கினலி, பிரிட்டனின் பைபோலார் அறக்கட்டளையின் தூதுவரானார். அது RIBI உடன் கூட்டாண்மை வைத்துக்கொண்டது. அவரது சகோதரரின் அனுபவத்திற்கு பிறகு அவர் அந்த நிறுவனத்துடன் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தார். மேலும் தற்கொலை செய்துகொள்வதை தடுப்பது தொடர்பாக ஒரு மெய்நிகர் (ஜூம்) கூட்டத்தையும் நடத்தினார். மனநோயாளிகள் நிலை குறித்து விடியோ படத்தையும் தயாரிக்க உதவினார்.

தனது தலைமைப்பதவியின் முயற்சியாக மனநலத்துக்கும் அவர் முன்னுரிமை கொடுத்துள்ளார். ரோட்டரியில் இந்த புதிய முயற்சிக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். மனநோயிலிருந்து ஒருவர் விடுபட வேண்டும். மக்கள் நோயின்றி வாழ்வதற்கு உதவ வேண்டும். மீட்புக்கான பயணத்தில் அவர்களுக்கு உதவ வேண்டும் என்கிறார் மெக்கினலி.

ரோட்டரி மூலம் தனிப்பட்ட நெறிமுறைகளை செயல்படுத்த அவருக்கு மற்றொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. அபோட்ஸ்ஃபோர்டு வீட்டிற்கு பிறகு அவரது அடுத்த நிறுத்தம் கெல்சோ ரக்பி கால்பந்து மைதானமாகும். எல்லைப் பகுதி மக்களை இணைப்பது எதுவென்றால் அது ரக்பி விளையாட்டுத்தான். ஸ்காட்லாந்தின் இப்பகுதியிலிருந்து பல சிறந்த ரக்பி விளையாட்டு வீர்ர்கள் உருவாகி வெளிச்சென்று பிரபலமான பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் லயன் அணிக்காக விளையாடி யுள்ளனர்.

போட்டிக்கு முன்னதாக கிளப் ஹவுஸில் நடந்த விருந்தில் மெக்கினலி தம்பதிகளுடன் அவரின் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த 6 நண்பர்கள் பங்கேற்றனர். அதில் சூப் வகைகளும், சமைக்கப் பட்ட இறைச்சிகளும் இடம் பெற்றிருந்தன. சமீபத்திய செய்திகள் குறித்து நண்பர்களியே

## 2023–24 தலைமையின் முயற்சிகள்

*மனநலத்துக்கு முன்னுரிமை மனநோய் மற்றும் ஆரோக்கியமான உணர்வு குறித்தான பேச்சு சிலருக்கு சங்கடமாக இருக்கலாம். ஆனால், ஆனால், ரோட்டரியின் உலகளாவிய சமூகத்திற்கு இது இன்றியமையாதது. சங்கங்கள், மாவட்டங்கள் இந்த பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பது மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவது குறித்து சிந்திக்க வேண்டும். அதை நாங்கள் ஊக்குவிக்கிறோம் என்கிறார் RI தலைவர் கோர்டன் மெக்கினலி.*

*இதை செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராயுங்கள்: மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள், இது தொடர்பான தவறான எண்ணத்தை அழித்து விடுங்கள் மனநல சுகாதாச் சேவைகளை அணுகுவதற்கான வழிகளை ஏற்படுத்துங்கள். மெய்நிகர் பரிமாற்றங்கள் மூலம் அமைதியை கட்டியெழுப்புதல், தனிப்பட்ட தொடர்புகள் மூலம் அமைதிக்காக உழைத்த நீண்டகால வரலாற்றை ரோட்டரி கொண்டுள்ளது. ஆனால், கோவிட்-19 தொற்றுக்காலம் அதை நேருக்கு நேர் செய்வதை கடினமாக்கியது. இந்த காலத்தில் நாம் கற்றுக்கொண்டவைகளை மெய்நிகர் சந்திப்புகள் மூலம், நிகழ்ச்சிகள் மற்றும் செயல் நடவடிக்கைகள் மூலம் சங்கங்கள், மாவட்டங்கள் பகிர்ந்துகொள்வதை மெக்கினலி ஊக்குவிக்கிறார்.*

*தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள புதுமையான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் மேம்பட்ட கலாசார உரையாடல் விழிப்புணர்வு மற்றும் புரிதல் மூலம் அமைதியை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை உருவாக்கும் அதே வேளையில், ரோட்டரியின் உலகளாவிய சமூகத்தை அனுபவிக்கும் வாய்ப்பை அதிகமானவர்களுக்கு வழங்குவோம்.*

*ரோட்டரி இளைஞர் பரிமாற்றம் மற்றும் ரோட்டரி நட்பு பரிமாற்றங்கள் போன்ற பரிமாற்ற திட்டங்களில் இவற்றை சேர்த்து பராமரிக்கலாம்:*

*உறுப்பினர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு பிற கலா சாரங்களை அனுபவிப்பதற்கும், புதிய நண்பர்களை உருவாக்குவதற்கும், அவர்களிடையே உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.*

*பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் 201–22 ஆம் ஆண்டில் அப்போது RI தலைவராக இருந்த சேகர் மேத்தாவால் தொடங்கப்பட்ட பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் திட்டத்தை 2022–23 ஆம் ஆண்டில் தலைவராக இருந்த ஜென்னிஃப்ர் ஜோன்ஸ் தொடர்ந்து செயல்படுத்தினார். மெக்கினலியும் அதை தொடர உறுதிபூண்டுள்ளார். உலகெங்கிலும் உள்ள பெண்களின் குரல்கள் ஓங்கி ஒலிப்பதற்கும், சக்தியை வெளிப்படுத்துவதற்கும் இது வகை செய்கிறது. பெண்களின் ஆரோக்கியம், நல்வாழ்வு, கல்வி, பொருளாதார பாதுகாப்பு மற்றும் பெண்கள் அமைப்பை மேம்படுத்துவதற்கான வழிகளை கண்டறிய ரோட்டரி தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.*

*இது தொடர்பான தகவலுக்கு rotary.org/initiative23–24 என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.*

*ஸ்காட்லாந்து தி பிரேவ் என்னும் பல்லவியை இசைக்கருவியில் இசைத்துக்கொண்டே இளம் குழுவினர் ஹோட்டலின் விருந்து அறையிலிருந்து வெளியே வருகிறார். அவருக்கு பின்னால் சம்பிரதாயமான ஹக்கிஸை ஒரு தட்டில் ஏந்தி, நீலம், பச்சை, கறுப்பு மற்றும் மஞ்சள் டார்டன் அணிந்து 2023–24 ஆம் ஆண்டின் RI தலைவர் கோர்டன் மெக்கினலி வருகிறார்.*

*எனது பெற்றோர் என்னிடமும் மறைந்த எனது சகோதரரிடமும் மற்றவர்களிடம் பரிவுகாட்ட வேண்டும், அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தார். அது என் வாழ்நாள் வரை உடன் இருக்கும்.*

*மற்றவர்களை கவனித்துக் கொள்வது, அவர்களுக்கு உதவுவதற்கு ரோட்டரி ஒரு கருவியாக இருப்பதை நான் தெரிந்து கொண்டேன். ரோட்டரி எனக்கு உலகம் முழுவதிலும் நண்பர்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ரோட்டரி மூலம் நான் உலகைப் புரிந்து கொண்டுள்ளேன் என்று மெக்கினலி தெரிவித்துள்ளார்.*

நகைசுவை கலந்து உரையாடலும் இடம்பெற்றது.

முன்னாள் போலீஸ் அதிகாரி டக் போர்ஸித் நல்ல உள்ளுணர்வு கொண்டவர், புதிய பார்டலர்லாண்ட் பாஸ்போர்ட் கிளப்பில் சேருவது குறித்து கெல்ஸோ RFC தலைவர் நீல் ஹாஸ்டியை அணுகி பேசுவதற்கு இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டார்.

சமூகத்தில் ரோட்டரி என்றால் என்பதை அறிந்தவர் நீல். ஆனால், பாஸ்போர்ட் கிளப்பின் நெகிழ்வான அணுகுமுறையை அவர் விரும்புகிறார் என்றார் போர்ஸித். எங்களுக்கு வாராந்திர கூட்டங்கள் இல்லை, உணவு சந்திப்பும் இல்லை. நாங்கள் மாதம் ஒரு முறை சந்தித்து காஃபி மற்றும் ஸ்நாக்ஸ் சாப்பிடுவோம், திட்டங்களைச் செயல்படுத்துவோம். நாங்கள் ரோட்டரி குறித்து பேசுவதில்லை. ரோட்டரி வேலைகளைச் செய்கிறோம். ரோட்டரி துடிப்பாக செயல்பட வேண்டும். மற்றவர்களை கவரும் வகையில் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களின் நோக்கமாகும் என்றனர். அதை மெக்கினலி ஆமோதித்தார். இதுதான் நெகிழ்வான ரோட்டரி மற்றும் இதுதான் எதிர்காலம் என்று அவர் மேலும் கூறினார்.

மேஜையை சுற்றி அமர்ந் திருந்தவர்கள் RI தலைவராக பதவியேற்க உள்ளவரும், இரண்டாவது ஸ்காட்டிஷ் மற்றும் பிரிட்டனின் 6-வது நபர் பற்றியே பேசினர். சௌத் குயின்ஸ்பெர்ரி ரோட்டரி சங்கத் தலைவர் சாண்டி மெக்கன்ஸி, இந்த சாதனை குறித்து அனைவரும் பெருமைப்படுவதாக கூறினார். நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம் என்றார் மெக்கன்ஸி. அவர் ஒரு மகத்தான மனிதர் என்றும் குறிப்பிட்டார்.

மெக்கினலி எனக்கு 30 வருடங்களாக நெருங்கிய நண்பர்.

அவர் ரோட்டரி இன்டர்நேஷனலின் உச்சப்பதவியைத் தொடுவார் என்பது நான் அறிந்திருந்தேன் என்றார் கிளப் நண்பர் கதே கிப் என்ற பெண்மணி. எங்களின் குயின்ஸ்பெர்ரி பாரிஷ் தேவாலயத்தின் அமைச்சர் டேவிட் கேமரூனிடம் (முன்னாள் பிரதமர் டேவி கேமரூன் அல்ல) மெக்கினலி என்றாவது ஒருநாள் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக வருவார் என்று தாம் கூறியிருந்ததை அவர் நினைவுகூர்ந்தார்.

இதை உள்ளுணர்வு என்றுகூட சொல்லலாம். கோர்டன் மெக்கினலி சுயமரியாதை உள்ள, எளிமையான, கடினமான உழைப்பாளி. ரக்பி விளையாடும் காலங்களில் அவர் இரண்டாவது வரிசையில் முன்னோக்கி 8-வது இடத்தில் இருந்தார். ரக்பி ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் விளையாட்டு என்றாலும் அவருக்கு போதிய திறமை இல்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார். உணவுக்குப் பிறகு கெல்ஸோவில் இரு அணிகளுக்கு இடையே நடந்த ரக்பி விளையாட்டு போட்டியை அவர் நண்பர்களுடன் கேலரியில் முன்வரிசையில் அமர்ந்தபடி பார்வையிட்டார். அது ஒரு வேகமான ஆட்டம். வெற்றிக்கு பல முயற்சிகள் தேவை. பார்வையாளர்கள் அவ்வப்போது விளையாடுபவர்களுக்கு ஏதாவது அறிவுரை கூறிக்கொண்டே இருப்பார்கள். ரக்பி குடும்ப வாழ்க்கையில் ஒரு பகுதியாகும். மெக்கினலி பல்மருத்துவ சிகிச்சை அளித்துவந்த இடம் முர்ரே பீல்டு ரக்பி அரங்கத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் இருந்தது. 2016இல் அவர், அந்த மருத்துவ கிளினிக்கை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார். எனினும் ஸ்காட்லாந்து இன்டர்நேஷனல் போட்டிகள் நடக்கும்போது அங்கு கார்கள் நிறுத்த அவருக்கு அனுமதி இருந்தது.





*பேத்திகள் ஐவீ மற்றும் ஃப்ளோரன்ஸ் ஆகியோருடன்.*

கெல்சோவில் தொலைக்காட்சி கேமராக்கள் இருந்தபோது ஒரு நிகழ்வை ஹீதர் மெக்கினலி நினைவுகூர்ந்தார். அவர்களது வீட்டில் சிறுமி சாரா, மெக்கினலியுடன் ரக்பி விளையாட்டை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது புகழ்பெற்ற பிபிசி ரக்பி வர்ணனையாளர் பில் மெக்லாரெனின் பாடல் வரிகளை சாரா பாடியதாக கூறினார்.

காலா அணி, கெல்ஸோவை 36-க்கு 31 என்ற கோல் கணக்கில் வென்றது. இதில் இரண்டு பெனால்டி கோல்களும் அடங்கும். நாங்கள் மைதானத்தை விட்டு வெளியேற முயன்றபோது ஹெதர் இப்படி கூறினார்: கோர்டன், ரோட்டரி இன்டர்நேஷனல் தலைமைக்கு தேர்ந்தெடுக்கும் குழுவிலிருந்து ஒருவர் வருவார் என காத்திருப்பதாகவும், மன்னிக்கவும் நாங்கள் தலைவராக வர இருப்பவரை தவறாக அழைத்துவிட்டோம் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் நகைச்சு வையாக குறிப்பிட்டார். நாங்கள் ஸ்காட்லாந்தில் 500 பேர் வசிக்கும் சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், இப்போது நாங்கள் ரோட்டரி இன்டர்நேஷனலை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். நான் ஹெதர் தானா என்று என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன் என்றார்.■



**RI** அனிருதா ராய்சௌத்ரி
மனைவி ஷிப்ராவுடன்.

# RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரியுடன் ஒரு சந்திப்பு

**ரஷீதா பகத்**

RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி கொல்கத்தாவில் நடந்த லக்ஷ்யா பயிற்சி நிகழ்வின் மேடையில் பழைய மேற்கத்திய பாடல்களை பாடி நடனமாடுவதை பார்க்கும்போது நீங்கள் எவ்வளவு ஆச்சரியமடைந்தீர்களோ, அது போலவே அவர் "தினமும் மாலையில் என் நண்பர்களுடன் கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் கிசுகிசுப்பது எனக்கு மிகவும் பிடிக்கும்" என்று சொல்வதைக் கேட்டும் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அவர் ஒரு பெங்காலி, அரிசி மற்றும் மீன்களை விரும்புபவர், அதையே தனது பிரதான உணவாக மாற்றியதாகவும் அவரது மனைவி ஷிப்ரா கூறுகிறார்.

நான் அவருடனும் ஷிப்ராவுடனும் சென்னையில் சந்தித்து கலந்துரையாட, ரோட்டரியின் முன் இருக்கும் பல சவால்கள், இயக்குனராக தனது முன்னுரிமைகள் மற்றும் இந்தியாவில் ரோட்டரிக்கு அதிக பெண் உறுப்பினர்களை ஈர்க்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் மற்றும் அவர்களுக்கு எப்படி தலைமைத்துவ வாய்ப்புகளை வழங்க முடியும் என்பதையும் காண முயற்சிப்பேன் என்று தனது கருத்துக்களை அவர் வெளிப் படையாகப் பகிர்ந்துகொண்டார்.

அனிருதாவின் தந்தை இந்திய அரசாங்கத்தில் வானிலை ஆய்வு அதிகாரியாக பணிபுரிந்தவர், அவரது வேலையில் அடிக்கடி இடமாற்றம் செய்யப்பட்டதால், நாங்கள் வெவ்வேறு மற்றும் தொலைதூர இடங்களில் வாழ்ந்தோம். எனவே வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்திலிருந்தே நான் பலவிதமான கலாச்சாரங்கள், பிரதேசங்கள், மக்கள், சில சமயங் களில் தொலைதூர இடங்களிலும் பரிச்சயப்படுத்தப்பட்டேன்! நாங்கள் கடுமையான சூறாவளியை அனுபவித்திருக்கிறோம், அது என் மனதில் இயற்கையின் சீற்றத்தின் ஆழமான முத்திரையை விட்டுச் சென்றது.

அவர் சண்டிகரில் தனது முன்-பொறியியல் படிப்பை முடித்தார், மேலும் அவர் ஒரு சிறந்த கால்பந்து வீரராக இருந்ததால், தனது பல்கலைக்கழகத்திற்காக பஞ்சாப் முழுவதும் கால்பந்து விளையாடினார். அவரது விருப்பமான கால்பந்து வீரர் மெஸ்ஸி என்று யூகிப்பது சுலபமே. பின்னர் கல்கத்தாவில் மின் பொறியியலில் பட்டம் பெற்றார்.

### ஆரம்ப காலம்

தனது ஆரம்பகால வாழ்க்கை மற்றும் அவர் ரோட்டரியில் சேர்ந்த விதம் பற்றி அனிருதா கூறுகையில், நான் நடுத்தர வர்க்க குடும்பத்தில் இருந்து வந்தவன், பாரம்பரியமாக வங்காளிகளான நாங்கள் பெரும்பாலும் சேவையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தோம், ஒருவித பாதுகாப்பான வேலையில் இருக்க வேண்டும், அதனால் வணிகத்தை நாங்கள் விரும்பியதில்லை. அந்த நேரத்தில் வங்கி வேலை மிகவும் விரும்பப் படும் ஒன்றாக கருதப்பட்டது." எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் பட்டம் பெற்ற பிறகு, ED பாரி நிறுவனத்தில் சேர்ந்து, பெங்களூரில் சில காலம் பணிபுரிந்து, 1980ல் கல்கத்தா திரும்பினார்.

"ஆனால் தொழில் முனைவு மனப்பான்மை எனக்குள் இருந்தது. நான் ஏதாவது ஒரு தொழில் செய்ய விரும்பினேன்." அப்போது, பெங்கால் வர்த்தக சபையில் தலைமைப் பொருளாதார நிபுணராகப் பணிபுரிந்த அவரது கல்லூரியைச் சேர்ந்த மூத்தவர்களில் ஒருவர் ஒரு யோசனையை கூறினார் – நீங்கள் ஏன் திரைப்பட செயலாக்கத்தைச் செய்யக்கூடாது? 16MM மற்றும் 35MM புதிய வடிவம் இப்போது புதிதாக வந்திருக்கிறது. ஜனதா அரசாங்கம் அப்போது ஆட்சியில் இருந்தது, கல்கத்தா 16MM படங்களை செயலாக்குவதற்கான மையங்களில் ஒன்றாகத் தயாராக இருந்தது, 35MM படங்கள் சென்னை மற்றும் பம்பாய்க்கு சென்றது.

நான் 16MM ஃபிலிம் ப்ராசசிங்கில் இறங்கினேன். ஆனால் சற்று நாளிலே அரசாங்கம், கொள்கை மற்றும் தொழில்நுட்பம் மாறியது; 16MM படம் புழக்கத்தில் இருந்து நீங்கி வீடியோகிராபி வந்தது." அவர் தன் பாதையை மாற்ற வேண்டியிருந்தது, அவர் செயலாக்கம் மற்றும் அச்சிடலுக்கு மாறினார், ஆனால் முதல் தலைமுறை தொழில்முனைவோராக, அவர் நிதி பிரச்சினை உட்பட பல சவால்களை எதிர்கொண்டார். இருப்பினும், மேற்கு வங்க தொழில் வளர்ச்சிக் கழகம் அவரது தொழிலுக்கு ஆதரவளித்தது. நான் என் நிறுவனத்தைத் தொடங்கினேன்; நான் 16MM படங்களுடன் தொடங்கியதால் எனது பிராண்ட் Zoom 16 என்றழைக்கப் பட்டது என்று அவர் புன்னகைக்கிறார்.

இந்த நேரத்தில், அவர் ரோட்டரியில் சேர அழைக்கப் பட்டார், ஆனால் அவரது வணிகத்தில் பரபரப்பாக இருந்ததால்,

அவர் அப்போது சேரவில்லை. “ஆனால், உங்களைப் போன்றவர்கள் ரோட்டரியில் சேர வேண்டும் என்று எனது சக ஊழியர் ஒருவர் வலியுறுத்த 1994இல் நான் RC கல்கத்தா மெட்ரோ சிட்டியில் பட்டய உறுப்பினராக சேர்ந்தேன்.

### தலைமைப் பாத்திரங்கள்

ரோட்டரி நடவடிக்கைகளில் ஈடுபட அவருக்கு மேலும் மூன்று ஆண்டுகள் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் சேகர் (மேத்தா) கவர்னராக நியமிக்கப்பட்டார், மேலும் அவர் என்னை அவரது முக்கிய குழுவில் சேர தூண்டினார். நான் அச்சுத் தொழிலில் ஈடுபட்டிருந்ததால், அவர் என்னை அவருடைய பப்ளிகேஷன் குழுவின் இணைத் தலைவராக்கினார்.

ஒரு தலைமைப் பாத்திரத்தை ஏற்று, அதில் வெற்றி பெற்ற அனிருதா, 2000–01ல் சங்கத் தலைவராகவும், 2007–08 இல் மாவட்ட கவர்னராகவும் ஆனார்.

அவர் கவர்னராக இருந்த ஆண்டின் சிறப்பம்சங்களைப் பற்றி கேட்டபோது, RID 3290 மாவட்டம் ஒருங்கிணைந்து இருந்த கடைசி ஆண்டு அது தான் என்று கூறுகிறார்; இதில் மேற்கு வங்கத்தின் ஒன்பது வருவாய் மாவட்டங்கள், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவு மற்றும் நேபாளம் ஆகியவை அடங்கும். அடுத்த ஆண்டு அது 3291 மற்றும் 3292 ஆகப் பிரிக்கப்பட்டது. இது 187 சங்கங்களைக் கொண்ட ஒரு பெரிய மாவட்டமாக இருந்தது, எனது நோக்கம் இரண்டாக இருந்தது; இந்தியா மற்றும் நேபாளத்தில் உள்ள ஒவ்வொரு சங்கத்தின் உறுப்பினர்களையும் சென்று சந்திக்க வேண்டும். நான் இந்தியாவில் மூன்று வாரங்களையும் நேபாளத்திற்கு நான்காவது வாரத்தையும் செலவிட முடிவு செய்தேன், ஏனெனில் நேபாளம் தனியாக செல்லும் விளிம்பில் இருந்தது, மேலும் சுதந்திர மாவட்டமாக மாற அவர்களுக்கு நான் நிறைய ஆதரவை வழங்க வேண்டியிருந்தது என்று அவர் கூறுகிறார்.

### இயக்குனர் பதவி

RI இயக்குநராக ஆவது அவரது வாழ்க்கை குறிக்கோள்களில் ஒன்றாக இருந்ததா என நான் அவரிடம் கேட்க. இல்லை. இயக்குனராக ஆவது என் ரேடாரில் இருந்ததில்லை. ஒவ்வொரு முறை சேகரும் மற்றவர்களும் அதன் சாத்தியத்தை பற்றி விவாதிக்கும் போது, நான் எப்போதும் ‘இல்லை, இல்லை’ என்றே சொன்னேன். எனது வயது அதிகரித்து வருகிறது, அப்பதவியில் விரிவான சுற்றுப் பயணம் தேவைப்படும், எனவே இது எனக்கு சரியான பொருத்தமாக இருக்காது என நினைத்தேன். என்னால் அதற்கு நியாயமாக இருக்க முடியாமல் போகலாம். ஏனென்றால், நான் மேற்கொள்ளும் அனைத்து செயல்களிலும் முடிவடையும் வரை சரியாக செய்யப்பட வேண்டும் என்று நினைப்பவன் நான்.

ஆனால், ரோட்டரியில் இருந்த பல நண்பர்கள், அவர் பலவிதமான பொறுப்புகளை வகித்தமையால் இந்தப் பதவியையும் முயற்சிக்க வேண்டும் என்று கூறி அவரை வற்புறுத்தினார்கள்.

### இயக்குனராக அவரது முன்னுரிமைகள்

ரோட்டரி இந்தியாவில் நடக்கும் அனைத்து எதிர்மறையான விஷயங்களி லிருந்தும் விடுபடுவதை செயல் படுத்துவதே இயக்குனராக தனது முதல் முன்னுரிமை என்று அனிருதா கூறுகிறார். “ரோட்டரியின் அனைத்து அம்சங்களிலும் இந்தியா மிகவும் சிறப்பாக செயல்படுகிறது. ஆனால் இது நம் பெயரைக் கெடுக்கிறது.

எதிர்மறைகளை வரையறுக்கமாறு அவர் தூண்ட பட, தேர்தல் புகார்கள்; எந்த ஒரு சிறிய விஷயமும் மிகைப்படுத்தப்பட்டு, விவகாரங்கள் பெரிதாக்கப்படுகிறது மற்றும் மக்கள் RI தலைவருக்கு நேரடியாக அஞ்சல்களை அனுப்பி, மேலும் ஒரு குழப்பத்தை உருவாக்குகிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் நமது நற்பெயரையும், நாம் செய்யும் மகத்தான பணிகளையும், சேவைத் திட்டங்களையும் கெடுக்கிறார்கள். எல்லாவற்றையும் சங்கங்கள், மாவட்டங்கள் போன்ற பல மட்டங்களிலே தீர்த்துக் கொள்ளபடலாம். நான் இதில் தெளிவாக செயல்பட



# ஒரு குளோசப் பார்வை

**இசை:** சூஃபி இசை எனக்கு மிகவும் பிடித்தமானது; 2010 முதல் நான் அதை மிகவும் விரும்ப ஆரம்பித்தேன். அதன் பாடல் வரிகள் மற்றும் ட்யூன்கள் மிகவும் இனிமையான விளைவைக் கொண்டிருப்பதாக நான் உணர்கிறேன். அந்த இசை வாழ்க்கையின் தத்துவத்தை நமக்குள் புகுத்துகிறது. எனக்கு பழைய சினிமா இசையும் பிடிக்கும். ஹார்ட் ராக் மீது எனக்கு அதிக விருப்பம் கிடையாது, எனக்கு மெலடி மிகவும் பிடிக்கும்.



**உணவு:** இதற்கு ஷிப்ரா பதிலளிக்கிறார்: வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவு, பெரும்பாலும் சாதம் மற்றும் மீன் அதுவே அவரின் வழக்கமான மற்றும் பிடித்தமான உணவு!

**சமையல்:** நான் அதில் பெரிய பூஜ்ஜியம்!

**மதவாதம்:** நான் கோவில்களுக்குச் செல்பவன், ஆனால் மதத்தைப் பற்றி நான் பிடிவாதமாக இருப்பதில்லை. நான் என் பிரார்த்தனை மற்றும் மரியாதையை செலுத்தவே கோவில்களுக்கு செல்கிறேன்; நான் கடவுள் பக்தி உள்ளவன் ஆனால் இதற்காக திருப்பதிக்கோ அல்லது அதற்காக வேறு ஏதாவது கோயிலுக்கோ போக வேண்டும் என்று என்னை நான் கட்டாயப்படுத்திக் கொள்வதில்லை.

**படித்தல்:** நான் நிறைய படிப்பேன், குறிப்பாக தூங்குவதற்கு முன். ஆனால் இந்த நாட்களில் அதற்கு அதிக நேரம் கிடைப்பதில்லை. புத்தகங்களைப் பொறுத்தவரை, கற்றலுக்கு முடிவே இல்லை என்று நான் நம்புகிறேன், மேலும் நம் ஒவ்வொருவருக்கும் கற்றுக்கொள்வதற்கான எல்லையற்ற ஆற்றல் உள்ளது. சுய முன்னேற்றம் மற்றும் மனித வாழ்க்கையை மாற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கையாளும் புத்தகங்களை நான் விரும்புகிறேன். எனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் ஜாக் வெல்ச்.

**பயணம்:** வெளியூர்களில் எனக்கு அதிக மோகம் இல்லை. இந்தியாவில் பல கவர்ச்சிகரமான மற்றும் வரலாற்று இடங்கள் இருப்பதாக நான் நம்புகிறேன். நான் கான்கிரீட் காட்டில் வசிப்பதால், அமைதி மற்றும் அழகிய இயல்பு கொண்ட இடங்களை விரும்புகிறேன். ஜெய்ப்பூரின் நிறம் மற்றும் துடிதுடிப்பு காரணமாக நான் அதை நேசிக்கிறேன். ஊட்டி எனக்கு பிடித்த மற்றொரு இடம்... என் பேரன் அங்கே லாரன்ஸ் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான், அதன் மூலம் நான் அதை விரும்ப தொடங்கினேன். (ஷிப்ரா: வருடத்திற்கு ஒருமுறை பூரிக்கு செல்வதை நாங்கள் விரும்புகிறோம்.)

**பொழுதுபோக்கு:** நல்ல திரைப்படங் களைப் பார்ப்பது. மேலும், மாலையில் எனது நண்பர்களுடன் குறைந்தது 45 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை கிசுகிசுப்பது!

**உடற்பயிற்சி:** நான் தினமும் 45 நிமிட உடற்பயிற்சி முறையைப் பின்பற்றுகிறேன்; பெரும்பாலும் யோகா மற்றும் நடைபயிற்சி மற்றும் வேறு சில பயிற்சிகளை செய்கிறேன்.

**திரைப்படங்கள்:** நான் மனரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் வளர்ந்ததால் சினிமா மீதான எனது விருப்பம் ஒவ்வொரு தசாப்தத்திலும் மாறி வருகிறது. இப்போது OTT தளத்தில் இருக்கும் வலுவான செய்தியைக் கொண்ட குறும்படங்களை நான் விரும்புகிறேன். எனக்கு ஆக்க்ஷன் படங்கள் பிடிக்காது.


**ரோட்டரியில் வழிகாட்டி:** எனது பயிற்சியாளர் அஞ்சன் குமார், அவர் சேகரின் பயிற்சியாளரும் கூட. மற்றும் PRIP சேகர் மேத்தா.

வேண்டும். தற்போது, இயக்குனர்கள் வெங்கடேஷ் மற்றும் மகேஷ் இந்த பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள், நான் அதை அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சங்க மட்டத்தை விட, மாவட்ட அளவில் இந்த தகராறுகள் பெரிதும் நடைபெறுகின்றன என்கிறார். இதற்கு எல்லாம் தேர்தல் மற்றும் பதவிகள் தான் காரணம். நான் ஒரு வெற்றிகரமான தலைவனாக மாறினால், அந்த சக்தியை என்னால் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பது மனித உளவியல். எனவே பதவிகாலம் முடிந்தவுடன் அந்த நபர் என்ன செய்வதென்று




*RI அனிருதா ராய்சௌத்ரி, மருமகள் ஷாஸ்வதி, மகள் அருண்ததி, மருமகன் தனுராய், மனைவி ஷிப்ரா மற்றும் மகன் அரிண்தம் ஆகியோருடன்.*











தெரியாமல் நிற்கிறார், மேலும் அதிகாரத்தை விட்டுக்கொடுக்க தயங்குகிறார். ஆனால் ரோட்டரியின் கட்டமைப்பு மற்றும் விதிகள் உங்கள் பதவிக்காலம் முடிந்ததும், நீங்கள் பின்வாங்கி புதியவர்களை பொறுப்பேற்க அனுமதிக்க வேண்டும் என்பதே.

அவர் PDGகளை குறிப்பிடுகிறாரா என கேட்க? நிச்சயமாக, PDGகள் தான்! ரோட்டரி போன்ற மன்றங்களில் நடக்கக் கூடாத கொடூரமான முறையில் நடந்து கொள்ளும் PDGகளை நான் பார்த்திருக்கிறேன். நாம் அதை சரிசெய்ய வேண்டும்.

### திட்டங்களில் கவனம்

மேலும் இவர் சங்கங்களை திட்டங்களில் கவனம் செலுத்துமாறு சொல்கிறார். "நான் எப்போதுமே ஒரு திட்டத்தை மையமாகக் கொண்ட நபராக இருந்தேன், எனவே நான் சேவைத் திட்டங்களை அதிகரிக்க முயற்சிப்பேன். நம் சங்கம் மற்றும் மாவட்ட தலைவர்களிடம் பெரிய திட்டங்களை எடுக்கச் சொல்வேன். நல்ல திட்டங்களைச் செய்தால் பணத்துக்குப் பிரச்னை இருக்காது; அது எல்லா மூலங் களிலிருந்தும் வரும், மேலும் புதிய வளங்கள் அதற்காக திறக்கப்படும்."



இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாகவும், பல நிறு வனங்கள் சமூகத்திற்காக சேவை செய்வதில் ஆர்வம் காட்டு வதாகவும் அவர் மேலும் கூறினார். "மக்களின் மனம் மெதுவாக மாறிக் கொண்டிருக்கிறது, அவர்கள் மென்மேலும் சேவை செய்பவர்களாக மாறுகிறார்கள்; நல்ல பணிக்கு பணம் கேட்டால் அது நிச்சயமாக கொடுக்கப்படும்" என்கிறார்.

ஆனால் சமூக நலத் திட்டங் களுக்கு CSR நிதி இருக்கும் போதிலும் நாம் நம் சங்கங்களை ஒழுங்காக கட்டமைக்க வேண்டும். பல சங்கங்கள் ஒழுங்கமைக்கப் படவில்லை, அவற்றின் இருப்பு நிலைகள் சரியாக இல்லை. இன்று எந்தவொரு CSR பணிக்கும், நீங்கள் உங்கள் வருடாந்திர அறிக்கையை வழங்க வேண்டும், எனவே உங்கள் பதிவுகள் சரியாக இருக்க வேண்டும். நீங்கள் பொருத்தமான மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும், பதிவு செய்யாத நிறுவனங்களுக்கு கார்ப்பரேட்கள் உதவாது, ஏனெனில் அனைத்து வங்கிகளிலும் KYC கட்டாயமாகி விட்டது.

இந்தியாவில் ரோட்டேரியர்கள் அதிகம் பணியாற்ற வேண்டிய பகுதிகளை பற்றி பேசும் அனிருதா, அடிப்படை கல்வியறிவு மற்றும் கல்வியினை நாம் சிறப்பாகச் செய்துள்ளோம், ஆனால் நீர்வள பகுதியில் அதிக வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார். அவர் ESRAG (சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ரோட்டரி நடவடிக்கை குழு) உறுப்பினராக உள்ளார், மேலும் சுற்றுச்சூழலை மையமாகக்

கொண்ட திட்டங்களில் கவனம் செலுத்த உள்ளார். “இது இன்று ஒரு முக்கியமான பகுதியாகும், மேலும் இதனால் உங்கள் முழு சங்கத்தையும் ஈடுபாட்டுடன் வைத்திருக்க முடியும். ரோட்டரிக்கு உறுப்பினர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாடு மிகவும் இன்றியமையாதது. இது நடக்கவில்லை, அதனால் நல்ல வேலை செய்ய வாய்ப்புகள் கிடைக்காததால் மக்கள் வெளியேறுகிறார்கள். சுற்றுச்சூழலில், நாம் செய்யக்கூடியது நிறைய இருக்கிறது.

அவர் ஒரு சிறிய மரம் நடுதல் இயக்கத்தின் உதாரணத்தை தருகிறார்; வெறும் 30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறிய சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு மாதமும் ஒரு மரத்தை நட்டு அதைப் பராமரித்தால் ஒரு வருடத்தில் 360 மரங்களை நட்டிருப்பார்கள்; உறுப்பினர்களுக்கு நன்மை செய்கிறோம் என்ற ஒரு மகத்தான உணர்வை அது கொடுக்கும்.




PRID *நோராசெத் பத்மானன்த் மற்றும் அவர் மனைவி சோட்டிமா அவர்களுடன்* RID *அனிருதா மற்றும் அவர் மனைவி ஷிப்ரா* 2006*ம் ஆண்டு சண்டிகரில் நடைபெற்ற ரோட்டரி மண்டல மாநாட்டில்.*

## இந்தியாவில் ரோட்டரி

இந்தியாவில் ரோட்டரியை பற்றி பேசும் அவர், இங்கே பல நேர்மறைகள் உள்ளன; அதில் மிகப்பெரியது நமது மகத்தான மனித வளம் மற்றும் நம்மிடம் உள்ள திறமை. ஆனால் இந்த மாபெரும் திறமை குழுவின் முழுமையான ஆற்றல் இன்னும் சரியாக பயன் படுத்தப்படவில்லை. இந்த பகுதியில், பனிப்பாறையின் நுனியை மட்டுமே நாம் தொட்டுள்ளோம். இந்த மகத்தான வளத்தை நாம் உண்மையில் பயன்படுத்த முடிந்தால் இந்தியாவில் ரோட்டரி அதன் முழு திறனையும் வெளிப்படுத்தும்.

ரோட்டரி ஒரு அமைப்பாக மிகவும் வளர்ந்துள்ளது என்று அவர் சுட்டிக் காட்டுகிறார். இன்று அது “மாநிலம் அல்லது மையம் என எந்தவொரு அரசாங்கத்திற்கும் மிகவும் பயனுள்ள கூட்டாளராக இருக்க முடியும். ரோட்டரியை சிறிய நேர சேவை வழங்குனராக இனி பார்க்க முடியாது. அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக உழைக்கும் தேசத்தை கட்டியெழுப்புபவர்களாக நாம் பார்க்கப்பட வேண்டும்.



*ஒரு கல்வியறிவு கூட்டத்தில் சேகர் மேத்தா (வலது) ரஞ்சன் டிங்க்ரா மற்றும் மனோஜ் தேசாய் (இடது) ஆகியோருடன்.*

RI-இல் கூட, இந்தியா மரியாதையுடன் பார்க்கப்படுகிறது என்று அனிருதா கூறுகிறார். ஏப்ரல் 2023-இல் அவர் கலந்து கொண்ட வாரியக் கூட்டத்தின் உதாரணத்தை அவர் தருகிறார், அங்கு 2029 மாநாட்டிற்கான இடத்தை இறுதி செய்வது நிகழ்ச்சி நிரலில் இருந்தது. “துவாரகாவில் வரவிருக்கும் ஒரு

பெரிய மாநாட்டு மையத்தின் அனைத்து விவரங்களையும் கொடுத்து, நாங்கள் முன்மொழிந்த புது தில்லியின் பெயர் அந்த பட்டியலில் விடுபட்டிருப்பதைக் கண்டேன்.'' அவர் இந்த விஷயத்தை முன்னெடுத்து சென்று, 2030 மாநாட்டிற்கான சாத்தியமான இடங்களின் பட்டியலில் புது தில்லி இடம் பெறும் என்ற உத்தரவாதத்தைப் பெற்றார்.

“இந்தியா பொருளாதார ரீதியாக மிகவும் சிறப்பாக செயல்படுகிறது, நாம் TRFக்கு இரண்டாவது பெரிய பங்களிப்பாளராகவும், மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 2வது இடத்திலும் இருக்கிறோம். நாம் ஒரு பெரிய சக்தி, அதில் எந்த சந்தேகமும் இல்லை. லிஸ்பன் மற்றும் ஹாம்பர்க் போன்ற சிறிய இடங்களில் ரோட்டரி மாநாடுகளை நடத்தும் போது, ஏன் இந்தியாவில் நடத்தக்கூடாது'' என்று அவர் கேட்கிறார்.

**பெண்களின் உறுப்பினர் நிலை**

பெண்கள் உறுப்பினர் சேர்க்கைக்கு வர, அனிருதா இந்த அம்சத்தில் விஷயங்கள் திருப்திகரமாக இல்லை. உலகளவில், ரோட்டரியில் பெண்களின் உறுப்பினர் எண்ணிக்கை 23 சதவீதமாக உள்ளது, ஆனால் இந்தியாவில் இது 19 சதவீதமாக உள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் பெண் உறுப்பினர்களுக்கான RIன் இலக்கு 25 சதவீதமாக உள்ளது, எனவே அந்த திசையிலும் அந்த இலக்கை நோக்கியும் நாம் விரிவாகச் செயல் பட வேண்டும். அதிக பெண் உறுப்பினர்களை கொண்டு வருவதுமில்லாமல், அவர்களுக்கு தலைமைத்துவ வாய்ப்புகளையும் வழங்க நான் கடுமையாக உழைப்பேன்.





## ஷிப்ராவின் பங்கு

*அவரது ரோட்டரி பயணத்தில் அவரது மனைவி ஷிப்ராவின் பங்கு பற்றி கேட்டதற்கு, "ஷிப்ரா எப்போதும் மிகவும் அமைதியாகவும் கூச்ச சுபாவத்துடனும் இருப்பார், அதிகம் பேசமாட்டார், ஆனால் அவர் எப்போதும் எனக்குப் பின்னால் இருந்து அமைதியான ஆனால் வலுவான ஆதரவைக் கொடுத்தார். நான் மிகவும் பிஸியாக இருந்த போது, அவர் குழந்தைகளையும் எங்கள் வீட்டையும் கவனித்துக் கொண்டார். அவருடைய ஆதரவு இல்லாமல் நான் இன்று இருக்கும் இடத்தில் இருந்திருக்க முடியாது. என RID அனிருதா கூறுகிறார்*

*ஷிப்ரா மேலும் கூறுகையில், அவர் இந்த இயக்குனர் பதவியை அடைந்ததில் மிகவும் பெருமைப்படுகிறேன், அடுத்த இரண்டு வருடங்கள் மிகவும் சவாலானதாக இருக்கும் என்று தெரியும், அவர் எதைச் செய்தாலும் அதைச் சரியாகச் செய்ய முயல்வார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவர் கடைசி விவரம் வரை திட்டமிட்டு அதை சிறப்பாக செயல்படுத்துவார்.*

"முந்தைய நாள், RID 3211 PETS-ல், டினா ஆண்டனி DGND-ஆக பரிந்துரைக்கப் பட்டதையும், அந்த மாவட்டத்தின் முதல் பெண் கவர்னராக வருவதையும் அறிந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

அவரை கவலையடையச் செய்யும் மற்றொரு அம்சம் ரோட்டரியை பற்றி சிந்திக்கும் போக்கு பிராந்திய அளவிலேயே உள்ளது. இயக்குநராக எனது முக்கியமான கொள்கை ரோட்டரி பற்றி முழுமையாக சிந்திக்கச் செய்வது தான்.

### ரோட்டரி முன் உள்ள சவால்கள்

தற்போது ரோட்டரிக்கு முன்னால் உள்ள பல சவால்களை விவரிக்கும் அனிருதா, முதலாவது அதன் உறுப்பினர் எண்ணிக்கை, தலைமைத்துவத்தின் தொடர்ச்சி, புதிய அமைப்புகளுடன் உள்ள அனுசரிப்பு, நாம் நீண்ட நாட்களாக பேசிக்கொண்டிருக்கும் பிராந்தியமயமாக்கல், (RIBI பைலட் திட்டம் சரியாக இயங்கவில்லை என அவர் கூறுகிறார்) மற்றும் போலியோவுக்குப் பிறகு அடுத்த பெரிய திட்டத்தை அடையாளம் காண்பது ஆகியவற்றை குறிப்பிடுகிறார்.

தலைமையின் முழு கவனத் தையும் கோரும் பிரச்சினைகள் இவை. " மேற்கு அரைக்கோளத்தில், குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பிராந்தியங்களில் நாம் ஏன் உறுப்பினர்களை இழக்கிறோம்?" இந்த நாடுகள் பல தசாப்தங்களுக்கு முன்னரே போலியோவை ஒழித்ததால் தான் என்று அவர் நம்புகிறார், "மேலும் அவர்கள் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளவோ அல்லது தங்களுடன் தொடர்புபடுத்தவோ பெரிய காரணம் எதுவும் இல்லை. களத்தில் இறங்கி வேலை செய்வதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதால் சோர்வு ஏற்படுகிறது. 'போலியோவுக்குப் பிறகு என்ன' என்பது குறித்து RI தலைமையிடம் ஒரு திட்டம் தயாராக இருக்க வேண்டும். போலியோவை முழுவதுமாக ஒழிப்பதில் கவனம் செலுத்தினாலும், அடுத்த பெரிய திட்டத்தை நாம் தயார் செய்ய வேண்டும்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் சிறப்பு ஏற்பாடு

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

ADVT.



# Shri Vaishnav Vidyapeeth Vishwavidyalaya, Indore

**ADMISSIONS 2023-24**

**City Office:** Shri Vaishnav Vidya Parisar, 177 Jawahar Marg, South Rajmohalla, **INDORE**-2
**Campus:** Indore-Ujjain State Highway, **INDORE**-453111.
**Mob.:** 9303700163, 9303700164, 9303700165, 9303700166, 9303700168

## LEARN TO BE PROACTIVE WITH FUTURE READY SYLLABUS AND REAL-TIME INDUSTRY EXPOSURE.

**AFTER 10+2 or Graduation, know the option for tomorrow by asking experts today!**

Scholarships for the Meritorious Students | Relief for the Children of COVID-19 Warriors

## EXCELLENT TRACK RECORD

**Approved under Section 2(f) of the UGC Act, 1956**

↗ MoU with Hanyang University, South Korea ; St. Cloud State University, USA ; University of Science & Technology, Meghalaya for Student/Faculty Exchange and Joint Research. ↗ MoU with TCS for Technical Collaboration. ↗ MoU with NRDC (Ministry of Science & Technology) for transfer of technology to industry. ↗ MoU with NCSSS (National Cyber Safety and Security Standards) for Technical Collaboration. ↗ MoU with Tata Power Ltd. for Technical Collaboration. ↗ Agreement with CISCO Network Academy. ↗ Agreement with Bosch India. ↗ MoU with Microsoft Corporation (India) Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with IBM for Technical Collaboration. ↗ MoU with Red Hat for Technical Collaboration. ↗ Apple Authorised Training Centre Agreement for Education. ↗ MoU with Mitsubishi Electric India. ↗ MoU with ICT Academy ↗ MoU with Mahatma Gandhi National Council of Rural Education (MGNCRE), Government of India, Ministry of Education. ↗ MoU with Impetus Technology India Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with Manmade Textiles Research Association (MANTRA) for Technical Collaboration ↗ MoU with ICAR- Indian Institute of Soybean Research ↗ MoU with Trascender Services Private Limited (TSPL), Mumbai for high quality paramedical education to the students. ↗ Fees Structure is approved by the Government of Madhya Pradesh. ↗ Ranked jointly by Innovation Cell of the Ministry of Education (Government of India) and AICTE in Top 50 Most Preferred Institutions in 2021.

### ENGINEERING AND TECHNOLOGY

**B. Tech.** (4 years)
Agricultural Engineering/Automobile Engineering/ AE (Electric Vehicle Engineering)/ Civil Engineering/Electronics and Computer Science Engineering/Electrical Engineering (Solar Energy-Tata Power)/Electrical & Electronics Engineering/Electrical Engineering/ Electronics and Communication Engineering/ EC (Internet of Things)/ ME (Artificial Intelligence & Machine Learning)/ CE (Artificial Intelligence & Machine Learning)/ ECE (Artificial Intelligence & IoT)/ Electronics and Instrumentation Engineering/ Instrumentation & Control Engineering/ Mechanical Engineering/Mechanical Engineering (Plant Engineering-Tata Power)/ Mechatronics/ Railway Engineering/Robotics and Automation/Electronics (VLSI Design & Technology)

**M. Tech.** (2 years)
Civil (Geotechnical Engineering)/ Civil (Structural Engineering)/Civil (Transportation Engineering)/Civil (Water Resources Engineering)/Digital Communication/ Digital Instrumentation/ Embedded System & VLSI design/Industrial Engineering/ Mechanical (Thermal and Design Engineering)/ Power Electronics/Power System / Renewable Energy/ Virtual Instrumentation/ Construction Technology & Management/ Automation & Robotics

**Diploma Programs** (3 years)
Automobile Engineering /Civil Engineering/ Electrical Engineering /Electronics and Instrumentation Engineering/Electronics Engineering/Mechanical Engineering/ Mechatronics Engineering/ Solar Energy / Integrated Circuit (IC) Manufacturing

**B. Tech.** (4 years)
Computer & Communication Engineering/ Computer Science & Business Systems- (TCS)/ Computer Science Engineering/CSE (Mobile Applications)-Apple (AATCE)/ CSE (Artificial Intelligence - IBM)/ CSE (Big Data and Cloud Engineering-Impetus)/CSE (Data Science-IBM)/ CSE (Enterprise System- red hat)/ CSE (FullStack Development & Blockchain- IBM)/CSE (Information and Cyber Security-NCSSS)/ CSE (Artificial Intelligence and Machine Learning-Microsoft)/ Information Technology/IT (Data Science-IBM)/ IT (FullStack Development & Blockchain-IBM)/ CSE (Internet of Things-IBM)

**M. Tech.** (2 years)
Computer Science Engineering/ Computer Science Engineering (Big Data Analytics)/ Computer Communication Engineering/ Information Security

**Dual Degree Programs**

**B. Tech. + M. Tech.** (4+2 years)
Computer Science Engineering/ Computer Science Engineering (Big Data Analytics)/ Computer Science Engineering (Cloud Computing)/Computer Science Engineering (Cyber Forensic)/Information Communication Technology/ Information Technology.

**B. Tech. + MBA** (4+2 years)
Computer Science Engineering/ Information Technology

**Diploma Program**
**One-Year** Post Graduate Diploma in Computer Applications (PGDCA)
**Six-Months** Diploma in Computer Hardware and Networking (DCHN)

**B. Tech.** (4 years)
Garment & Fashion Technology/ Textile Engineering/ Technical Textiles

**M. Tech.** (2 years)
Textile Engineering/Textile Chemistry

**B. Sc.** (4 years) Fashion Design

**Diploma Program** (3 years)
Textile Engineering

### FORENSIC SCIENCE

**B.Sc. (Hons.)** (4 years)
Digital & Cyber Forensics

**B.Sc.** (3 years)
Forensic Science/ Forensic Psychology

**B.A./ B.Sc.** Criminology

**M.Sc.** (2 years) Forensic Science/ Forensic Psychology/ Cyber Forensics

**M.A./ M.Sc.** (2 years) Criminology

**Dual Degree Program**

**B.Sc.+ M.Sc.** (3+2 years)
Forensic Science/ Forensic Psychology

### ARCHITECTURE

**B.Arch.** (5 years)

**B.Des.** (4 years) Interior Design/ Product Design/Graphics & Animation

**M.Des.** (2 years) Interior Design

**M.Des.** Graphics & Animation

**Dual Degree Program**

**B.Des.+ M.Des.** (4+2 years)
Interior Design/ Product Design/ Graphics & Animation

### PLANNING

**B.Plan** (4 years)

**M.Plan** (2 years) (Urban Planning)

### MANAGEMENT

**MBA** (2 years)
Engineering Management/ Family Business & Entrepreneurship/ International Business/ Media Management/Agri-business/ Business Analytics/Advertising and Public Relations/Tourism/ Rural Management-MGNCRE/ Hospital & Healthcare Management/ Marketing/ Human Resource/ Finance/ Fintech

**BBA (Hons.)** (4 years)

**BBA** (3 years)

**BBA (Fintech)** (3 years)

**BBA (Rural)** (3 years)

**Dual Degree Programs**

**BBA + MBA** (3+2 years)
Marketing/HR/Finance/Operations/ Fintech/Rural Management-MGNCRE

**MBA** (2 years) (Industrial Management)
Open to Engineering Graduates only.

### JOURNALISM AND MASS COMMUNICATION

**M.A.** (2 years)
Journalism and Mass Communication/ Hindi Journalism

**Dual Degree Program**

**B.A. + M.A.** (3+2 years)
Journalism and Mass Communication

### FINE ARTS

**BFA** (4 years)
Painting/ Animation

**MFA** (2 years)
Painting/ Animation

### AGRICULTURE

**B.Sc. (Hons.)** (4 years) Agriculture
Horticulture / Agri-Business Management

**M.Sc.** (2 years)
**Agriculture/ Horticulture**
Genetics and Plant Breeding/ Entomology/ Plant Pathology/ Soil Science & Agricultural Chemistry/ Agronomy/ Horticulture (Fruit Science)/ Horticulture (Vegetable Science)/Agricultural Economics/ Agricultural Extention Education / Live Stock Production & Management

### SCIENCE

**B.Sc.** (3 years)
Physics/ Chemistry/ Maths/ Life Science/ Computer Science/ Biotechnology/ Electronics/ Instrumentation/ Statistics/ Economics

**B.Sc. (Hons.)** (4 years)
Physics/ Chemistry/ Maths/ Computer Science/Biotechnology/Electronics/ Instrumentation/Statistics/Economics

**M.Sc.** (2 years)
Physics/ Chemistry/ Maths/ Environmental Science/ Analytical Chemistry/Biotechnology

**Dual Degree Program**

**B.Sc. + M.Sc.** (3+2 years)
Physics/ Chemistry/ Maths/ Statistics

### COMPUTER APPLICATIONS

**BCA** (3 years) Big Data Analytics-IBM

**B.Sc.** (3 years) Data Science

**M.Sc.** (2 years) Computer Science

**MCA** (2 years) Banking Technology

**MCA** (2 years)

**Dual Degree Programs**

**BCA + MCA** (3+2 years)

**BCA + MCA** (3+2 years)
Banking Technology

### SOCIAL SCIENCES, HUMANITIES AND ARTS

**B.A.** (3 years)

**B.A. (Hons.)** (4 years)
Psychology/ Economics/ Public Administration/ English Literature/ Sociology/Political Science/ Anthropology/ History/ Hindi Literature/ Sanskrit

**B.S.W.** (3 years)

**M.A./M.Sc.** (2 years)
Psychology/ Applied Psychology/ Public Administration/ Clinical Psychology/ Counselling Psychology/ English Literature/ Sociology/ Economics/ Education/Anthropology/History/ Political Science/Hindi Literature/Sanskrit

**M.S.W.** (2 years)

**Dual Degree Program**

**B.S.W. + M.S.W.** (3+2 years)

**B.Lib. I.Sc. + M.Lib. I.Sc.**

**One- Year Advanced Diploma in French**

### COMMERCE

**B.Com (Hons.)** (4 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications

**B.Com** (3 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications

**M.Com** (2 years)

**Dual Degree Programs**

**B.Com+ M.Com** (3+2 years)

**B.Com + MBA** (3+2 years)

### LAW

**LL.B (Hons.)** (3 years)

**LL.M** (2 years) Business Law/ Criminal Law

**LL.M** (1 year)
(Business Law, Criminal Law, Human Rights)

**Integrated Programs** (5 years)

**B.A.LL.B (Hons.)**

**B.B.A.LL.B (Hons.)**

**B.Com. LL.B (Hons.)**

### HOME SCIENCE

**M.Sc.** (2 years) Food & Nutrition

**Dual Degree Program**

**B.Sc.+ M.Sc.** (3+2 years) Food & Nutrition

### PARAMEDICAL SCIENCES

**Bachelor of Medical Lab. Technician** (3 years)

**DIPLOMA PROGRAMS** (2 years)
X ray Radiographer Technician/ Medical Lab. Technician/ Cath. Lab. Technician/ Dialysis Technician/ Optometric Refraction/ Optometrist Contact Lens/ Anesthesia Technician/ Yoga/ Naturopathy

**Teaching Assistanceship (TA) of ₹12,400 (Rupees Twelve Thousand Four Hundred Only) for all GATE Qualified Candidates admitted in 02 years full time M.Tech Program, subject to MHRD/UGC/AICTE Guidelines**

**Note: (1) SVET (Shri Vaishnav Entrance Test) will be held on July 2 and 16, August 6 and 20, 2023. The seats in various programs will be filled on the basis of prescribed Tests/ SVET-2023.**

### FACULTY OF DOCTORAL STUDIES & RESEARCH

Management/ Physics/ Chemistry/ Maths/ Life Science/ Psychology/ Library Science/ Computer Applications/ Computer Science/ Computer Engineering/ Environmental Science/ Electronics Engineering/ Electrical Engineering/ Mechanical Engineering/ Textile Technology/ Civil Engineering/ IT/ Forensic Science/ English/ Journalism and Mass Communication/ Biotechnology/ Fine Arts/ Agriculture/ Horticulture/ Silviculture & Agroforestry/ Economics/ Political Science/Commerce/ Sociology/ Anthropology/ Public Administration /Design/ Education / Law / Fashion Design / History

**Toll Free: 1800 233 9111**
**Helpline: 1800 102 9191**

**SEPARATE HOSTEL FACILITY FOR BOYS & GIRLS.**

FOR VIRTUAL TOUR OF SVVV CAMPUS-
https://clickeffect.co.in/svvv/

FOR ONLINE WEBSITE-
Scan me

**For details, visit: www.svvv.edu.in admission@svvv.edu.in**



RI இயக்குனர்
ராஜு சுப்ரமணியன்
மற்றும் வித்யா.



# வெளிப்படையாக பேசும், புத்திசாலியான RI இயக்குநர்

ரஷீதா பகத்

இந்த நேர்காணலின் தொடக்கத்தில் அவரது மனைவி என்னிடம் கேட்கிறார்: அவர் நேர்மையானவராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?...” சரி, நான் எந்த பெயரையும் கொடுக்க மாட்டேன் என்று RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் நகைச்சுவையாக தெரிவித்தார். தம்பதிகளுக்கு இடையே நடந்த இந்த வேடிக்கையான உரையாடலின் போது தோழரும் உடன் இருந்தார். மும்பையில் அவர்களது வீடு மிகவும் பசுமையாகவும் விசாலமாகவும் இருந்தது.

அவர் நேர்மையானவர் என்ற குறிப்பு சமீபத்தில் RI இயக்குநர் பதவிக்கான தேர்தலின்போது மண்டலம் 4 மற்றும் 7 இல் நடந்த தகராறு மற்றும் தேர்தல் புகார்கள் தொடர்பானது. RIPE கோர்டன் மெக்கினலிகூட ரோட்டரி நியூஸிடம் கூறும்போது, ரோட்டரியில் இந்தியா சிறப்பான சேவைகளை செய்துவரும் நிலையில் அறைக்குள் யானை புகுந்தார்போல் தேர்தல் புகார்கள் வந்துள்ளன என்றார்.

ஒவ்வொரு அளவிலும் தேர்தல் நடைமுறைகளின்போது தலைவர்கள் தலையீடு நிறுத்தப்பட வேண்டும் என்பதை அவர் ஒப்புக்கொண்டார். என் மனம் தெளிவாக இருக்கிறது. எனக்கென்று வேட்பாளர்கள் யாரும் இல்லை. நான் யாரையும் முன்மொழியவில்லை. என்னுடைய இயக்குநர் பதவிக்காலத்தில் புகார்கள் வந்தால் நான் கடுமையாக இருப்பேன். எனினும் உயர் பதவிகளில் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் இந்த விவகாரத்தை ரோட்டரி இயக்குநர் வாரியத்துக்கு கொண்டு செல்வேன். ஏனெனில் இது ரோட்டரியின் வளர்ச்சியையும், ரோட்டரி இந்தியா மீதான நன்மதிப்பையும் பாதிக்கும் விஷயமாகும்.

ஆனால், எதிர்மறையானவற்றை எடைபோட்டால், இந்தியாவின் செயல்பாட்டின் பெருமைகள்தான் அதிகம். நாம் ஒரு காலத்தில் உதவி கேட்கும் நாடாக இருந்தோம். ஆனால், இன்றைக்கு கொடுக்கும் நாடாக உள்ளோம். TRF நன்கொடை அளிப்பதில் இரண்டாவது இடத்தில் உள்ளோம். தைவான், கொரியா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளை முந்துவது சாதனை அல்ல. இது நமது தனி சிறப்பு மிக்க சாதனையாகும்.

இரண்டு இந்திய ரோட்டேரி யன்கள், உலகில் அதிக எண்ணிக் கையில் மானிய உதவிகளை செய்து வருகின்றனர். நாம் 50 செய்தால், அடுத்த நாடு 5 அல்லது 6 தான் செய்ய முடிகிறது மானியங்கள் உதவியில் நாம் முன்னிலையில் இருக்கிறோம். இதனால் பலரும் பயன்பெறுகின்றனர். எனவே நாம் செய்யும் சேவைக்கு அருகில் யாரும் நெருங்க முடியாது. ஆனால், நிதிகளைச் செலவிடுவதில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். அது சில இடங்களில் இல்லை. நாம் உண்மையை மறைக்க வேண்டியதில்லை. நாம் அதை சரி செய்ய வேண்டும். அறங்காவலர் துணை தலைவர் பரத் பாண்ட்யா, அனிருத்த ராய் சௌத்ரி மற்றும் நான் மூவரும் இந்த விஷயத்தை மேற்பார்வையிடுவதில் கடுமையாக இருக்கப்போகிறோம் என்றார்.



*ராஜு மற்றும் வித்யா (இடமிருந்து) மருமகன் ரோஹித், மகள்கள் ரோஹிதா, அஷ்விதா, மருமகன் அஜய் மற்றும் பேரன் நிகில் ஆகியோருடன்.*

ரோட்டரி ஒரு அற்புதமான அமைப்பாகும். புதிய பரிமாணங் களுடன் அதை மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். போலியோவை ஒழிக்க முடியும் என்றோ அல்லது ஜாம்பியாவில் மலேரியாவை ஒழித்து பலரின் உயிரை காப்பாற்ற முடியும் என்றோ யார் நினைத்தார்கள்?

ராஜு பம்பாயில் வளர்ந்தார். அவரது தந்தை ஷிப்பிங் தொழிலில் ஈடுபட்டு வந்தார். முதலில் அவர், தனது மாமாவுடன் இணைந்து தொழில் செய்து வந்தார். அவசர நிலையின் போது சட்ட மாணவர் என்ற முறையில் நீதிமன்றம் செல்லும்போது கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம், தனிஉரிமை, மனித உரிமைகள் உள்ளிட்ட வழக்குகளை அவர் பார்த்தார். இந்த வழக்குகளில் ராம் ஜெத்மலானி உள்ளிட்ட பெரிய வழக்குரைஞர்கள் வாதிட்டனர். இந்த தொழிலையே தேர்ந்தெடுத்தால் என்ன என்று நினைத்தேன். ஏனெனில் அப்போது தான் சுதந்திரமான சிந்தனையுடனும், சுதந்திரமான மனதுடனும் ஒரு வழக்குரைஞராக துடிப்புடன் செயல்பட முடியும்.

1976-இல் மும்பையில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் பட்டம்பெற்ற அவர், அடிப்படையில் சிவில் மற்றும் கார்ப்பொரேட் சட்ட ஆலோசகராக இருந்து வருகிறார்.

ரோட்டரியில் சேர்ந்தது ஏன் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், 1981-ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடந்தது. அதன் பிறகு பெற்றோர் இருந்த இடமான பாந்த்ராவிலிருந்து தியோனருக்கு குடிபெயர்ந்தோம். அங்கு எங்களுக்கு யாருடனும் தொடர்பு இல்லை. நண்பர்களும் இல்லை. சந்திரகாந்த் மிர்ஜி என்பவர் அப்போது ரோட்டரி மாவட்ட ஆளுநராக இருந்தார். அவர் புதிய சங்கத்தை தொடங்க விரும்பினார். அந்த இளைஞர் பூர்வாங்க கூட்டத்திற்கு அழைக்கப்பட்டார். 1986-இல் தியோனர் ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்ட போது அதன் நிறுவன உறுப்பினராக வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி புதிய நண்பர்களை பெற விரும்பினார். இப்போது அந்த சங்கத்துக்கு 36 வயதாகிறது. நட்புதான் என்னை ரோட்டரிக்குள் இழுத்தது என்றார் அவர். 2001-இல் வித்யா இன்னர்வீல் சங்கத்தில் சேர்ந்தார். அதன்பின் அவர் 2018–19-இல் இன்னல் வீல் சங்கத்தின் தலைவரானார். இப்போது வித்யா RC தியோனர் தலைவராக உள்ளார். அவர் அதே சங்கத்தின் ஸார்ஜன்ட்-அட்-ஆர்ம்ஸ்-ஆக உள்ளார்.

1996-ஆம் ஆண்டில் ராஜு, சங்கத்தின் தலைவராக இருந்தார். 2009–10-ஆம் ஆண்டில் ஆளுநராக இருந்தார். அவரது பயணம் எளிதாக இருந்ததா? உண்மையில் சொல்லப்போனால் ஆளுநராக எனக்கு விருப்பம் இல்லை. ஏனெனில் தலைவர் பதவியே எனக்கு பெரும் சுமையாக இருந்தது. எனது தொழிலை சரிவர செய்ய முடிய வில்லை. ஆனால், பரத் பாண்ட்யா மற்றும் ராகுல் திம்பாடியா (PDG) இருவரும் என்னை சமாதானம் செய்து மாவட்ட செயலர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பதவியை ஏற்கச் செய்தனர். அதன் பிறகுதான் நான் மாவட்டத்துக்கு தலைமையேற்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தேன். இதையடுத்து ஆளுநர் பதவிக்கு போட்டியிட்டேன்.

மாவட்ட ஆளுநர் என்ற முறையில் அமைதியாக வேலைசெய்தவர்களை அவர் அங்கீகரித்தார். அந்த வகையில் பாலியல் தொழிலில் உள்ள பெண் ஒருவர் மற்றும் ஒரு திருநங்கை அவரது மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டனர். DEI தாரக மந்திரம் ரோட்டரியில் இடம் பெறுவதற்கு முன்னரே இது நடந்தது.

ஹாம்பர்க் மாநாட்டில், பரத் மற்றும் PRID கமல் சங்வி இருவரும் என்னை இயக்குனர் பதவிக்கு போட்டியிட கூறினர். நான் பின்னர் அதற்கு சம்மதித்தேன். ஆனால், நான் தோற்றால் தேர்தல் புகார் வராது என்பதை தெளிவாக அவர்களிடம் கூறினேன். நான் இயக்குநர் ஆக வேண்டும் என்றால் அது தொடர்பான முடிவை ஆண்டவனிடம் விட்டுவிடுவேன் என்றேன்.

ஆனால், இறுதியில் தேர்தல் முறையாக நடைபெறவில்லை. நான் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தேன். காரணம் மூத்த தலைவர்களின் தலையீடுதான். அதுதான் உண்மை. விவகாரம் ரோட்டரி வாரியம் வரை சென்றது. இது நல்லதல்ல.

ஏனென்றால் நாம் பல நல்ல பணிகளை செய்கிறோம்.

**அவரது பதவிக்காலத்தில் முன்னுரிமைகள்**

இயக்குநராக தமது முன்னுரிமைகள் குறித்து ராஜு கூறுகிறார்: சமூகத்திற்கு நன்மை என்றால் அதை தொடர்ந்து செய்யலாம். தோ சம்மாச் கம், சார் கதம் கே என்னும் உடல் ஆரோக்கியம் குறித்த முயற்சியை பரத் தொடங்கினார். 30 மற்றும் 50-வயதுக்கு இடைப்பட்டவர் களிடையே நீரிழிவு நோய் மற்றும் கொலஸ்டிரால் பாதிப்பு அதிகரித்து வருகிறது. உயிர்களை காப்பாற்றும் அத்திட்டத்தை தொடர விரும்புகிறேன்.

எனது பதவிக்காலத்தில் DGs மற்றும் DGEs-களுக்கு நான் சொல்லும் செய்தி இதுதான். DGs மாவட்ட திட்டங்களை முன்னெடுக்கக்கூடாது. அதை சங்கங்கள்தான் செய்ய வேண்டும். மாவட்ட ஆளுநர்கள் அவர்களுக்கு வழிகாட்டி ஆதரவு தெரிவிக்கலாம். குறிப்பிட்ட சமூகத்தினருக்கு



*ராஜு மற்றும் வித்யா மருமகன் ரோஹித் மற்றும் மகள் ரோஹிதாவுடன்.*

# வித்யா பேசுகிறார்

ரோட்டரி கணவரின் நேரத்தை அதிகம் பறித்தது குறித்து வருத்தமா? என்று நான் வித்யா ராஜுவிடம் கேட்டேன். அதற்கு அவரது பதில்: சரியான கேள்வி. இதற்கு ஆம் இல்லை என்று இரண்டு விதமான பதில் உண்டு. குறிப்பாக குழந்தைகள் வளர்ப்பின் போது. அவர் வழக்கறிஞர் என்பதால் அதிலேயே அவர் பெரும்பாலான நேரத்தை செலவிட வேண்டியிருந்தது. அவர் மும்பையிலிருந்து அடிக்கடி வெளியூர்களுக்கு பயணம் செய்தபடி இருப்பார். அவர் வெளியூரிலிருந்து திரும்பும்போது என்ன செய்யலாம் என்று திட்டமிடுவோம். ஆனால், வெளியூரிலிருந்து வந்ததும் ரோட்டரி பணிகளை கவனிக்கச் சென்றுவிடுவார் அல்லது வேறு ஏதாவது வேலைகள் வந்துவிடும்.

இரண்டு பெண் குழந்தைகளும் வெளியில் சாப்பிட விரும்புவார்கள். அவர் தில்லியிருந்து வந்ததும் வீட்டில் சாப்பிட விரும்புவார். ஆனால், அவர் ஒரு அற்புதமான தந்தை. அவருக்கு குழந்தைகள்தான் உலகம்.

வித்யா ஒரு மாற்று திறனாளி குழந்தைகளுக்கான கல்வியாளர். மகள்கள் சிறு வயதினராக இருந்ததால் நான் அதை கைவிட்டேன். சில நேரங்களில் அந்த வேலை மனச்சோர்வை ஏற்படுத்தியது.

ராஜுவிற்கு இயக்குநர் பதவி கிடைத்த போது உங்கள் தனிப்பட்ட கருத்து என்ன என்று கேட்டபோது, தோள்களை குலுக்கியவாறே இப்படிக் கூறினார்: அவர் இன்றும் என் கணவர் மற்றும் என் ராஜு. மக்கள் அவரை 'Sir' என்று அழைப்பது விசித்திரமாக இருக்கிறது. அப்படி அழைப்பதை அவர் ஒருபோதும் விரும்பமாட்டார்.

வித்யா மேலும் கூறுகிறார்: நிச்சயமாக நான் அவரைப் பற்றி பெருமைப்படுகிறேன். ராஜு குறுக்கிடுகிறார். நான் செய்தது சரி என்று எத்தனை முறை நிரூபித்திருக்கிறேன் என்று அவளிடம் கேளுங்கள். வழக்குரைஞர் என்ற முறையில் நீதிமன்றத்தில் உளவியலை நாங்கள் கற்றுக்கொண்டுள்ளோம். எனவே நான் ஒருவரை பார்த்து கைகுலுக்கும்போதே அவர் உண்மையானவரா அல்லது போலியான நபரா என்பது தெரிந்துவிடும்.

நான் விதிகளை பின்பற்றுபவன். ஒருவேலையை செய்வதற்கு திறமைதான் முக்கியம் என்று நினைப்பவன். தகுதியின் அடிப்படையில் செயல்படாததுதான் கடந்த காலங்களில் ரோட்டரிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றார்.



ராஜு மற்றும் வித்யா மகள்கள் ரோஹிதா, அஷ்விதா மற்றும் பேரன் நிகில் ஆகியோருடன்.

என்ன தேவை என்பதை சங்கத் தலைவர்கள் நன்கு அறிவார்கள். எனவே பொதுவான அளவில் ஏதாவது ஒன்றை திணிப்பது சங்கத் தலைவரின் தலைமையை பறிப்பதுபோலாகும். அது பேரழிவை ஏற்படுத்தும். உறுப்பினர் சேர்க்கை, திட்டங்கள் மற்றும் TRF-க்காக நாம் சங்க அளவிலான தலைவர்களை உருவாக்க வேண்டும். அந்த தலைமையை துண்டிப்பதன் மூலம் நாம் அமைப்பை வளர்ப்பதற்கு பதில் கெடுதல் செய்கிறோம் என்று அர்த்தம்.

DGs மற்றும் DGEs என்ன செய்யலாம் என்றால் திட்டங்கள் குறித்த தாக்கத்தை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். இது சுவர் விளம்பரங்கள் மற்றும் செய்தித்தாள் விளம்பரங்களை விட முக்கியமானது. பொது மக்களிடம் உருவாகும் நன்மதிப்பு என்பது வேறு. விளம்பரம் என்பது வேறு. மக்கள் மனதில் நம்மை பற்றிய நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த வேண்டும். திட்ட நிகழ்வுகளுக்கு எங்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பதைவிட தொழில் முனைவோர், வர்த்தகர்கள் அல்லது அரசியல்வாதிகளை சிறப்பு விருந்தினர்களாக அழைக்குமாறு மாவட்ட ஆளுநர்கள் சங்கத் தலைவர்களிடம் அறிவுறுத்த வேண்டும். அப்போதுதான் திட்டத்தின் தாக்கம் மற்றவர்களைச் சென்றடையும். இதன் மூலம் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். மேலும் CSR ஆதரவு அதிகரிக்கவும் வழிவகுக்கலாம்.

போலியான சங்கங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை தேவை. உறுப்பினர்களிடமிருந்து பணத்தை வசூலித்த பிறகு RI நிலுவைத் தொகையை



**மேலே:** TRF *அறங்காவலர் துணை தலைவர் பரத் பாண்டியாவுடன்* RI *இயக்குனர் ராஜு சுப்ரமணியன்.*




ஒரு குளோசப் பார்வை

**உணவு:** அடிப்படையில் நான் தென்னிந்தியர். எனக்கு தென்னிந்திய உணவு வகைகள் பிடிக்கும். மேலும் நான் இப்போது மகாராஷ்டிரியன். குஜ்ஜு உணவுகள் பிடிக்கும். அவை அதிகம் எண்ணெய் இல்லாமல் இருந்தால்.

**சமையல்:** ஆஹா நான் சமைத்தால் யாரும் சாப்பிடமுடியாது. ரசம் வைத்தால் என்ன பருப்பு போடவேண்டும் என்றுகூட எனக்குத் தெரியாது.

**மதவாதி:** எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. நான் தினமும் கோவிலுக்குச் செல்வதில்லை. நான் கடவுளை எல்லா இடத்திலும் பார்க்கிறேன். ரோட்டரி என்னும் கோவிலுக்கு சேவை செய்யும் நான், கோவிலுக்கு செல்லவேண்டியதில்லை என நினைக்கிறேன். ஆனால், கடவுள் மீது எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. தினமும் வீட்டில் பூஜை செய்கிறேன். நான் கிறிஸ்துவ தேவாலயத்துக்கும், மசூதிக்கும் சென்றிருக்கிறேன். எந்த வழிபாட்டுத் தலத்துக்கும் செல்வதற்கு எனக்கு தடை இல்லை. எந்த பெயரால் அழைக்கப்பட்டாலும் கடவுள் ஒருவர் தான் என்று நான் நம்புகிறேன்.

**பயணம்:** பயணம் செய்வது எனக்கு ரொம்ப பிடிக்கும். எனக்குப் பிடித்த நகரங்களில் பல உள்ளன. ஆனால், அதில் ஒன்று காஷ்மீர். அந்த நகரின் அழகு என்னை பிரமிக்கவைக்கிறது.

**படித்தல்:** (சிரிக்கிறார்) எனக்கு எதாவது கிடைக்கும் என்றால் அதை படிப்பேன். இதர விஷயங்களையும் படித்து தெரிந்து கொள்வதுண்டு. மனது: மர்மங்களும் கட்டுப்பாடும் என்ற சுவாமி சிவானந்தரின் புத்தகம் எனக்கு பிடித்த புத்தகமாகும்.

**பிடித்த எழுத்தாளர்:** அயன் ராண்ட்

**இசை:** பாரம்பரியமான கிளாசிக்கல் இசை எனக்கு பிடிக்கும். பழைய பாலிவுட் பாடல்களை நாம் விரும்பி கேட்பேன்.

**திரைப்படங்கள்:** திரைப்படங்கள் பார்ப்பதில் எனக்கு ஆர்வம் இல்லை. (வித்யா: அவரை திரைப்படங்களுக்கு அழைத்துச் செல்லாமல் இருப்பது நல்லது. தியேட்டருக்கு சென்றால் அவர் படம் பார்க்காமல் குறட்டைவிட்டு தூங்கிவிடுவார். ஆனால், நாங்கள் நாடகங்களுக்குச் செல்வோம். சமீபத்தில்கூட நீடா அம்பானி கலாசார மையத்தில் நடைபெற்ற சவுண்ட் ஆஃப் மியூசிக் நாடகம் பார்த்தோம்.)

**ரிலாக்ஸ்:** (இதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள் ராஜு. எனக்கும் இதற்கு விடை தெரிய வேண்டும்.) நான் எதைச் செய்தாலும் அதை சரிவர செய்ய வேண்டும் என்று நினைப்பவன். (நான் தலைமை தாங்கிய) இந்தூர் இன்ஸ்டிடியூட் முடிந்த 15 நிமிடங்களுக்குள் கணக்கு வழக்குகளை முடித்து விற்பனையாளர்களுக்கு பணம் கொடுத்துவிட்டு அரை மணி நேரத்தில் நானும் பரத்தும் விமானநிலையம் சென்றுவிட்டோம். இதில் பிரச்சனை என்னவென்றால், மற்றவர்களும் இதேபோல் செயல்பட வேண்டும் என்று நினைப்பவன். ஆனால், அது நடப்பதில்லை. (வித்யா: அவர் ஆளுமை நிறைந்தவர்.).

**உடற்பயிற்சி:** காலையில் நடை பயிற்சிக்கு செல்வேன். ஆனால், தினமும் அதைச் செய்ய முடியவில்லை.

**எதிர்காலக் கனவு:** எனக்கும் எனது குடும்பத்தினருக்கு ஆரோக்கியமான வாழ்வு காத்திருக்கிறது. குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் நேரத்தை செலவிட விரும்புகிறோம். எங்கள் கனவிலேயே இருந்துவிட்ட சில இடங்களுக்கு செல்ல வேண்டும் என்பது ஆசை. கம்போடியா மற்றும் வியட்நாமுக்கு விரைவில் செல்லவிருக்கிறோம்.

**சட்ட ஆலோசனை தொடரும்:** அவசர வேலை இருந்தாலொழிய மற்றபடி திங்கள் முதல் வியாழக்கிழமை வரை வேலையில் கவனம் செலுத்துவேன். வெள்ளி முதல் ஞாயிறு வரை ரோட்டரிக்காக ஒதுக்கிவிட்டேன்.

**விளையாட்டு:** பொதுவாக எனக்கு கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் அதிகம். BCCI வழக்குகளுக்காக நான் ஆஜராகி இருக்கிறேன். கிரிக்கெட் தவிர டென்னிஸ் மற்றும் கால்பந்து விளையாட்டும் எனக்கு பிடித்தமானது. இளம் வயதில் பேட்மிண்டன் விளையாடி இருக்கிறேன்.

**ரோட்டரியில் பெண்கள்:** பெண்கள் தனித்துவமான தலைவர்கள் என்பது எனது கருத்தாகும். நான் மாவட்ட ஆளுநராக இருந்தபோது 23 பெண் தலைவர்கள் இருந்தார்கள். அவர்களில் இருவர் தயக்கம் காட்டினாலும், சிறப்பாக பணியாற்றினார்கள். இந்தியாவில் பெண்களுக்கு எந்த ஒரு பொறுப்பு கொடுத்தாலும் அதை சிறப்பாகச் செய்வார்கள். அவர்களை நாம் வளர விடவேண்டும். ஒவ்வொரு ரோட்டேரியனும் அவர் எந்த சாதி, மதம், இனம், பாலினத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் வளர வேண்டும்.

**வித்யாவின் பங்கு:** அற்புதம்! அவளுடைய ஆதரவு இல்லாமல் நான் இவ்வளவுதூரம் வந்திருக்க முடியாது. நான் தேர்வு செய்யப்பட்டதற்கு எதிரான புகார்கள் வந்த போது ஏப்ரல் 22ல் நான் CoL துணை தலைவராக இருந்தேன். அதை படித்துவிட்டு, அவள் என்னைக் கூப்பிட்டு சொன்னாள்: ராஜு, இனியும் இந்த இந்த அமைப்பில் நீடிப்பது மதிப்புக்குரியது என நான் நினைக்க வில்லை. நாம் இருவருமே ராஜிநாமா செய்துவிடலாம். எந்த விதமான குற்றச்சாட்டு என பாருங்கள். அவர்கள் தரவுகளை திருடிவிட்டு பொய்யான குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளனர். நான் ஒரு கிரிமினல் வழக்கு பதிவு செய்திருக்கலாம். காவல்துறையில் உள்ள எனது நண்பர்கள் என்ன நடந்திருக்கிறது என்னிடம் சொல்லி யிருப்பார்கள். ஆனால், அதை நான் செய்திருந்தால், ரோட்டரிக்கு தீங்கு விளை வித்திருப் பேன். நீங்கள் ராஜிநாமா செய்யுங்கள், நாம் சேர்ந்து போராடுவோம் என்றாள். அந்த புகாரில் உண்மையில்லை. அதை புரிந்து கொண்ட அவள் என் பக்கம் நின்றாள். அவள் தான் என் சிறந்த விமர்சகர். பல நேரங்களில் நீங்கள் மேடையில் இருந்து வெளியேறும் போது நீங்கள் நன்றாகப் பேசினீர்களா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், மக்கள் எப்போதும் உங்களை சிறந்தவர் என்றே கூறுவார்கள். ஆனால், அவள் எப்போதும் நேர்மையான விமர்சனத்தையை முன் வைப்பாள். அதைவிட சிறப்பானதை நான் கேட்டிருக்க முடியாது.■

செலுத்துவதில் நேர்மையாக செயல்படுவதும் கவனிக்கப் பட வேண்டிய விஷயங்கள். DGs ஈகோக்களுக்கு விடைகொடுத்து விட்டு எப்போதும் பணிவு, மென்மை மற்றும் எளிமையை கடைப்பிடிக்க வேண்டும். மாவட்ட ஆளுநர்கள் மற்றும் மூத்த தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தேர்தலில் தலையிடாமல் ஒதுங்கியிருக்க வேண்டும். இது மோதல்களை குறைப்பதற்கும் சேவை புரிவதற்கான நல்ல சூழலை உருவாக்குவதற்கும் உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள ரோட்டேரியன்கள் காசநோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுப்பதிலும் சிகிச்சை அளிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் அவற்று அதிக தேவை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சேவைத் திட்டங்களுக்கு கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதியை பயன்படுத்துவதற்கு சரியான வாய்ப்புகள் உள்ளன. ஆனால், இதில் உள்ள ஒரு குறைபாடு என்னவெனில் குடும்ப நிறுவனங்களின் நிதியிலிருந்து மட்டுமே நிதியுதவி பெற அனுமதி உள்ளது. இந்தியாவில் குடும்ப நிறுவனத்திற்கு சட்டத்தில் வாய்ப்பு இல்லை. இங்கு அவை பிரைவேட் லிமிடெட் அல்லது பப்ளிக் லிமிடெட் நிறுவனங்களாகவே உள்ளன. இதில் அறக்கட்டளை சில மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். இது விஷயத்தில் நான் பரத்திடம் கலந்து பேசி செயல்படவிருக்கிறேன்.

ஒரு நல்ல ரோட்டரி தலைவராக இருப்பதற்கு தேவையான குணங்கள் பட்டியலில் ராஜு முதலிடத்தில் வைப்பது நல்ல நெறிமுறைகள், இணக்கமான செயல்பாடு மற்றும் நேர்மறையான சிந்தனை ஆகியவற்றைத்தான். ஒரு தலைவர் அக்கறையுடனும், கருணையுடனும் ஒரு கண்ணோட்டத்துடனும், நம்பிக்கைக்கு உரியவராகவும் இருக்க வேண்டும். ரோட்டரி தலைவர்கள் தங்கள் நிறுவனத்தை முன்னிலைப்படுத்த வேண்டுமே தவிர தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ளக்கூடாது. தன்னலமற்ற சேவை புரிபவராக இருக்க வேண்டுமே தவிர, சுயநலத்துக்கு பின்னர் தான் சேவை என்று இருக்கக்கூடாது.

மேலும் அவர் DEI பற்றி கூறுகையில், சிலரின் மனநிலை காரணமாக அது பல்வேறு பகுதிகளில் நடப்பதில்லை. ஓரினச் சேர்க்கையாளர்கள், திருநங்கைகள் நம்மிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. அவர்களும் கடவுளின் குழந்தைகள் தான். அவர்களையும் இதில் ஈடுபடுத்தி, அவர்களுக்கு மதிப்பளித்து கவனித்துக் கொள்ள வேண்டும்.



படங்கள்: ரஷீதா பகத்
மற்றும் சிறப்பு ஏற்பாடு

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# ரோட்டேரியன்கள் "மாற்றத்தின் சாம்பியன்கள்"

V முத்துகுமரன்



RIPN *ஸ்டீபனி உர்சிக்*

ரோட்டரி மாவட்டம் 3232-க்கு உட்பட்ட மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் வாராந்திர கூட்டத்தில், இங்கிலாந்தில் அவரது உதவியாளர் PDG டாம் கம்ப் (RID 5950) உடன் இணைந்து மெய்நிகர் முறையில் கலந்துகொண்டு சங்கத்தின் செயல்பாடுகளை மாற்றியமைப்பது தொடர்பான தலைப்பில் RIPN ஸ்டீபனி உர்சிக் பேசினார். மக்கள் சங்கத்திலிருந்து வெளியேறு கிறார்களே தவிர ரோட்டரியிலிருந்து அல்ல, அதற்கு காரணம் அவர்கள் இருக்கும் சங்கத்தின் செயல்பாடுகள் அல்லது சேவைகள் அவர்களுக்கு திருப்பதியளிக்கவில்லை என்பது தான்.

எனவே புதிய உறுப்பினர்களை சேவையில் ஈடுபடுத்தும் போது அதில் சில மாற்றங்களை கொண்டுவருவது அவசியமாகும். திரும்பத்திரும்ப ஒரே மாதிரியான செயல்பாடுகளில் நாம் ஈடுபடக் கூடாது. ரோட்டரியின் சர்வதேச திட்டங்கள் மக்களைச் சென்றடைவதன் பின்னணியில் நமது செயல்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கிறது என்றார். ஒரு சங்கம் ஒரு நல்ல திட்டத்தை செயல்படுத்தும் போது அதன் உறுப்பினர்கள் அறக்கட்டளைக்கு பங்களிப்புச் செய்கிறார்கள். அதன் மூலம் சர்வதேச மானிய உதவி பெறப்படுகிறது. அதன் அடிப்படையில் சங்கம் சுமுகமாக இயங்குகிறது. அதன் உறுப்பினர்களும் ஒன்றுபட்டு பலம் சேர்க்கிறார்கள்.

ஆனால், சங்கங்கள், தங்களது உறுப்பினர்கள் பற்றிய ஆழமான மதிப்பீடு செய்வது முக்கியமானது. அவர்களுக்கு எதில் ஈடுபாடு இருக்கிறது, அவர்கள் ரோட்டரிக்கு என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதை கண்டறியவேண்டும். முதலில் ஒருவர் ஏன் அதிருப்தியில் இருக்கிறார், அவருக்கு என்ன பிரச்னை என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்றார் உர்சிக். பன்முகத்தன்மை மற்றும் மாற்றத்தை தழுவுதல் மூலம் விதம்விதமான அனுபவங்களை எதிர்நோக்கும் இளைஞர்களை உறுதியாக ஈர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### புதிய சங்கங்களை தொடங்குங்கள்

புதிய காரண அடிப்படையிலான சங்கங்கள் ரோட்டரி விரைவாக வளர உதவும் என்றார் PDG டாம் கம்ப். இதுபோன்ற சங்கங்கள் புதிய உறுப்பினர்களை நீண்டநாள் தக்கவைக்க முடியும். பல்வேறு தொழில்களில் உள்ள இளஞர்களை ஈர்ப்பதன் மூலம் ரோட்டேரியன்கள் மாற்றத்திற்கான சாம்பியன்களாக இருப்பார்கள். அது ரோட்டரியை முன்னெடுத்துச் செல்வதற்கான கிரியா ஊக்கியாக இருக்கும் என்று உர்சிக் கூறினார்.

ரோட்டரியின் மாற்றம் குறித்து ஐந்து அம்சங்களை உர்சிக் விளக்கினார். மதிப்பீடு, (உறுப்பினர்கள் மற்றும் அவர்களது பிரச்னைய மதிப்பீடு செய்தல்), வடிவமைப்பு, (அதாவது சங்கத்தின் வெற்றிக்கான பார்வை), கட்டமைத்தல், (தொடர்பு உத்தி), செயல்படுத்துதல், (எதிர்ப்பு தெரிவிக்கும் உறுப்பினர்களுடன் பேசி மாற்றத்தை உருவாக்கி, அவர்களுக்கு சரியான முறையில் பதிலளிப்பது) இறுதியாக வளர்ச்சியை தக்கவைத்தல், (கட்டமைப்பை உருவாக்கி, தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல்) ஆகியவை முக்கிய மானவை. ரோட்டரியின் முக்கிய குறிக்கோளான சேவை, நட்புறவை, நான்குவழி சோதனை ஆகியவற்றை நாம் தொடரந்து தக்கவைத்தால் இளைஞர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நெகிழ்வாக நாம் செயல்பட முடியும் என்றார் டாம் கம்ப்.

மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஜெயஸ்ரீ ஸ்ரீதர் பேசுகையில், தமது சங்கம் அடுத்த ஆண்டு 95-வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.■

# நாங்கள் ஒரு பூங்காவை அல்ல, ஒரு முழு வனத்தை உருவாக்க விரும்புகிறோம்

ரஷீதா பகத்

சமீபத்தில் கொல்கத்தாவில் DGE மற்றும் DGN-களுக்கான பயிற்சி நிகழ்வான லக்ஷ்யாவின் சிறப்பம்சங்களில் ஒன்று RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி தலைமையில் சுற்றுச்சூழல் குறித்த அமர்வு. TRF இன் மிகப்பெரிய நன்கொடையாளர் ரவிசங்கர் டகோஜு, தான் முன்னாள் தலைவராக இருந்த RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸின் தலைமையில், கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் உள்ள KGF டவுன்ஷிப்பின் சயனைடு கழிப்பு பகுதிகள் எவ்வாறு ஒரு நச்சு நரகத்திலிருந்து மரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் நிறைந்த பசுமையான பகுதியாக மாற்றப்பட்டது என்பதை விளக்க அதை பார்வையாளர்கள் ஆர்வத்துடன் கேட்டனர்.

ஆங்கிலேயர்கள் கோலார் தங்க சுரங்கங்களில் இருந்து தங்கத்தை பிரித்தெடுத்ததாக அவர் விளக்கினார்; “சுரங்கத்தில் இருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்க சயனைடைப் பயன்படுத்தி தங்கத்தை சேற்று குழம்பிலிருந்து பிரிக்க வேண்டும். ஆங்கிலேயர்கள் வெளியேறியதும், சுரங்கத்தில் தோண்டுதல் நிறுத்தப் பட்டது மேலும் முழு பகுதியும் வறண்டது, காற்றால் வீசப்பட்ட எஞ்சிய சயனைட் தூசி KGF நகரத்தில் உள்ள மக்களின் ஆரோக்கியத்தை நாசமாக்கியது. புற்றுநோய், காசநோய் மற்றும் பிற நோய்களை ஏற்படுத்தியது.

ரோட்டரி இதில் தலையிட்டு உள்ளூர் அரசாங்கத்துடன் ஒரு கூட்டாண்மையை உருவாக்கி அதன் நம்பிக்கையைப் பெறும் வரை, அந்த பகுதியை மேம்படுத்துவது ஜெயிக்க முடியாத கனவாகவே கருதப்பட்டது. இப்பகுதியை பசுமையாக்க, வெவ்வேறு நிலை களில் அகழிகளை தோண்டினோம், ஒவ்வொரு அகழியும் 14x2x2 அடி. சுமார் 14,000 அகழிகள் வெவ்வேறு நிலைகளில் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு அகழியிலும் மரங்கள் மற்றும் கற்றாழை, காட்டு புல்லுடன் சேர்த்து நடப்பட்டன. புல் ஈரப் பதத்தைத் தக்கவைத்து மண்ணை இறுக்கமாக்குகிறது.

மரங்கள் வளர ஆரம்பித்து, ஒரு கட்டத்தில் கரடுமுரடான பகுதியைத் தொட இறக்கத் தொடங்கியது. அங்கே பசுமை செழித்து உயிர்வாழ உரம் தேவைப்பட்டது.

“சொன்னால் நம்பமாட்டீர்கள், துர்நாற்றம் வீசும் எருவை கொண்டு செல்ல அனுமதிக்கப்படாததால், பெங்களூரில் இருந்து கோலார் வரை நாங்கள் உரத்தை ‘கடத்த’ வேண்டியிருந்தது. பெங்களூரிலிருந்து கோலாருக்கு கொண்டு வரப்பட்ட 700 டன் உரம் மூலம் 14,000 அகழிகளையும் நிரப்பினோம்” என்று டகோஜு கைதட்டலுக்கு மத்தியில் கூறினார்.

ரோட்டேரியர்கள் 1.2 லட்சம் மரக்கன்றுகளையும் 15,000 கற்றாழைகளையும் நட்டனர், நாங்கள் அதை வனப்பகுதியாக மாற்ற விரும்புகிறோம். நாங்கள் சிங்கப்பூர் செர்ரிகளை பயிரிட்டுள்ளோம், இப்போது பறவைகள், பாம்புகள், முயல்கள் மற்றும் புல்வாய் மான்கள் போன்றவை அங்கே வருகின்றன.

PDG சுரேஷ் ஹரியுடன் இணைந்து, தற்போது RC




**வலதிலிருந்து:** RIDE அனிருதா ராய்சௌத்ரி; மிருத்யுஞ்சய் சுவார், KIIT இன்குபேட்டர் தலைவர்; ரவிசங்கர் டகோஜு; RID மகேஷ் கோட்பாகி; ESRAG தலைவர் மீனாட்சி வெங்கட்ராமன் மற்றும் லஷ்யா தலைவர் PDG E K சகாதேவன்.

பெங்களூரில் சேர்ந்துள்ள டகோஜு, ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளார், கர்நாடகாவின் வறண்ட பகுதிகளில் ஒன்றில் ஒரு சிறிய வனத்தை உருவாக்க 1,500 ஏக்கரை நாங்கள் பெற்றுள்ளோம். 5 லட்சம் மரங்களை நட்டு, இரண்டு ஏரிகளை புனரமைக்கவும், புல்வெளிகளை அமைக்கவும், விலங்குகளை பாதுகாக்கவும் மற்றும் அப்பகுதியில் உள்ள 8,000-க்கும் மேற்பட்ட பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ரூ.26 கோடி செலவில் செயல்படுத்தப் படும் இது ஒரு லட்சியமான மற்றும் விரிவான திட்டமாகும். ESRAG (சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ரோட்டரி நடவடிக்கை குழு) திட்டப் பணிகளின் இயக்குனர் மீனாட்சி வெங்கடராமன் எங்களுக்கு உதவு கிறார். மரங்களை மட்டும் நடாதீர், புல்வெளிகளையும் மேம்படுத்துங்கள் என்று அவர் எங்களிடம் கூறுகிறார்.

"இது தான் பெரியதாக சிந்திப்பது என்று அழைக்கப்படுவது... நாங்கள் ஒரு பூங்காவையோ தோட்டத்தையோ அமைக்க விரும்பவில்லை, ஒரு முழு வனத்தை உருவாக்க விரும்புகிறோம், இதன் மூலம் கிரகத்திற்கு ஏதாவது ஒன்றைத் திருப்பிச் செய்ய விரும்புகிறோம்," என்றார் டகோஜு.



ரஷீதா பகத்

கூட்டத்தில் உரையாற்றிய மீனாட்சி, "ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய இரு கண்டங்களிலும் உள்ள ரோட்டேரியர்கள் அங்கு ஏற்படும் சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் ; கடந்த ஆண்டு பாகிஸ்தான் திடீர் வெள்ளத்தைக் கண்டது மற்றும் இலங்கை அதன் விவசாய கட்டமைப்பு வீழ்ச்சியடையும் ஆபத்தை எதிர்கொண்டது என்று கூறினார்.

சுற்றுச்சூழல் திட்டங்களுக்கு நிதி கிடைக்கப் போகிறது என்று கூறிய அவர், மகரந்தச் சேர்க்கை, ஆற்றை தத்தெடுப்பது, சுற்றுச் சூழலில் இருந்து கார்பன் மற்றும் மீத்தேன் குறைப்பு உள்ளிட்ட திட்டங்கள் பற்றி பேசினார். "மண்ணில், சதுப்புநிலங்கள் மற்றும் பவளப்பாறைகளில் வேலை செய்வதன் மூலம் அந்த வாயுக்களை நாம் மூன்று வழிகளில் குறைக்கலாம்." RI தலைவர் சேகர் மேத்தா, காலநிலை மாற்றம் குறித்த ஐ.நா மாநாட்டில், சதுப்புநிலங்களை வளர்ப்பதில் ரோட்டரி பெரிய திட்டங்களை செய்யும் என்று அறிவித்திருந்தார். இந்த திட்டங்களுக்காக 30 உலகளாவிய மானியங்கள் தயாராக உள்ளன என்று பங்கேற்பாளர்களிடம் மகிழ்ச்சியுடன் கூறினார்.

ரோட்டேரியர்கள் செய்த திட்டங்களின் தரவுகள் இல்லாதது குறித்து கவலை தெரிவித்த RC நீலகிரி வெஸ்ட்டின் உறுப்பினரான மீனாட்சி, ரோட்டேரியர்களாகிய நமது தாக்கத்தை நாம் கணக்கிட வேண்டும், மரங்களை நடுவதற்கான இயன் ரைஸ்லியின் சவாலை எதிர்கொள்ள நாம் அனைவரும் எழுந்தோம், ஆனால் எத்தனை மரங்கள் நடப்பட்டன என்பது யாருக்கும் தெரியாமல் போனது.

RID 3141-இன் DG சந்தீப் அகர்வாலா, தனது மாவட்டத்தில் தான் உறுப்பினராக இருக்கும் சங்கமான RC பாம்பேவின் தலைமையில், பம்பாய் பல்கலைக் கழகத்தில் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உயிரியல் பன்முகத்தன்மை பூங்காவின் விவரங்களைத் தெரிவித்தார். "அங்கு நாங்கள் மூங்கில் மரங்கள் வளரும் ஒரு ஜென் தோட்டம், ஒரு கலையரங்கம், மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட் களிலிருந்து ஒரு பெரிய வானவில் ஆகியவற்றை அமைத்துள்ளோம் மற்றும் அங்கிருந்த ஏரியை புதுப்பித்துள்ளோம்." மரங்கள் QR குறியீடு செய்யப்பட்டுள்ளது, அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்தப் பூங்காவின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பில் ரோட்டேரியர்கள் ஈடுபடுவார்கள். "நாங்கள் ஒரு இயற்கை ஆர்வலரை நியமித்துள்ளோம், மேலும் பள்ளிக் குழந்தைகளை 40–50 பேர் கொண்ட குழுக்களாகப் பெறத் தொடங்கினோம், அவர்கள் இயற்கை ஆர்வலர்களுடன் 4 முதல் 5 மணி நேரம் வரை பூங்காவைச் சுற்றிச் சென்று இயற்கையோடு தொடர்பு கொள்கிறார்கள்."

அடுத்த 10 ஆண்டுகளுக்கு பூங்கா அவர்களின் பராமரிப்பில் இருக்கும். அதனால், "நாங்கள் அதை படிப்படியாக மேம்படுத்த போகிறோம்.

KIIT இன்குபேட்டரின் தலைவரான மிருத்யுஞ்சய் ஸ்வார், "சமுதாயத்திற்கான தீர்வுகளை சிந்திக்கும் 380க்கும் மேற்பட்ட இளம் மனங்களின் நிறுவனங்களை ஊக்குவிக்கும் 'இன்குபேட்டர்' எனப்படும் புதுமை கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பை கொண்டு வரும் பல்கலைக்கழகத்தில் இருந்து வருபவன் நான்" என்றார்.

கிராமப் புறங்களில் உள்ள தண்ணீரின் குடிநீர்த் திறனைச் சோதிப்பதற்கான மிக மலிவான தொழில்நுட்பத்தை அவர் உதாரணம் காட்டினார்; "அவற்றை பெற சில பைசாக்கள் மட்டுமே செலவாகும்."

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை குறித்து ரோட்டேரியர்கள் மேற்கொண்டுள்ள பல திட்டங்களுக்குப் பாராட்டு தெரிவித்த இயக்குநர் கோட்பாகி, கார்பன் உமிழ்வைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சதுப்புநிலங்களை வளர்ப்பது ரோட்டரியின் அற்புதமான திட்டமாகும், என்றார். ■

விளம்பரம்

# District 3110



**Prachi & Pawan Agarwal**
District Governor, RID 3110
(2022-23)

## District 3110 Crossing the Magical Figure of US $ 1 Million

They say that the records are made to be broken. This record of District 3110 needs to be broken, year after year. And no-one will ever complain. The District which had no respectable standing in TRF giving, has suddenly discovered its potential, which is immense and abound. Rotarians of 3110 have utilized the leveraging power of TRF for doing meaningful and impactful projects throughout the year. As a result, the total giving to TRF this year has crossed the magical figure of $ 1 Million. Congratulations to the generous donors of the District!



Pawan & Prachi Agarwal

*Congratulations*
All the members of District 3110
for
crossing TRF contribution of
**US $ 1 Million**
1st Time Ever in District 3110
Thanks to Generous Donors for this monumental achievement !!

## AKS Member (Chair Circle)

It is an honor for District 3110 and RC Kashipur that District Governor Pawan Agarwal and First Lady, Prachi Agarwal have become AKS Member (Chair Circle) by a total accumulated contribution of $ 500,000 to TRF. Rtn Pawan Agarwal is the first ever serving District Governor in India to achieve the recognition of both AKS Member (Trustee Circle) & AKS Member (Chair Circle) in the year of service as DG.



*Congratulations*
DG Pawan Agarwal and First Lady Prachi Agarwal
for becoming
AKS Member (Chair Circle)
by donating
US $ 500,000
to The Rotary Foundation

## Approval of 9th Global Grant Projects in Current Year

*Congratulations*
**RC ALIGARH**
for approval of District's 9th Global Grant this year

Total Cost : USD 53,000
The Grant aims to provide opthalmic equipment for eyecare services and surgeries



PDG Devendra Kumar Agarwal
ARRFC



PDG Sharat Chandra
DRFC



Rtn. Vinay Krishna
Chair, District Grants Committee

It's a matter of great pride and pleasure for the District to get approval for its 9th Global Grant Project in the current year. The project proponent is RC Aligarh, which is one of the oldest clubs and the largest club of the District. The project aims to provide "Ophthalmic Equipment for Eyecare Services and Surgeries". The total cost of the project is USD 53,000. This is the biggest ever Global Grant project in Aligarh in terms of cost.



## Approval of 13th CSR Project in Current Year

Naini Papers (P) Ltd. contributed USD 22,777 (Rs 18,67,714) for a CSR Project which aims for "Establishing Eight Women Vocational Training Centres for Stitching" in association with RC Kashipur. This is the 13th CSR project by our District in the current year. The Managing Director, Rtn Pawan Agarwal and Mrs Prachi Agarwal have become "AKS Member (Chair Circle)" by this contribution to TRF.

NAINI

*Congratulations*
RC KASHIPUR
for approval of CSR Grant for
establishing 8 Women Vocational Training Centres for Stitching
at a project cost of
USD 22,777
in association with CSR partner
Naini Papers Limited



## Major Donors



*Congratulations*
Rtn Dr. Varun Kumar Gupta & Rtn. Namrata Gupta
RC Aligarh Central
for the generous & benevolent contribution to
The Rotary Foundation
as
MAJOR DONORS
2022-23


## Participation of DG & First Lady in RI Convention, Melbourne


With RI President Jennifer Jones


With PRIP KR Ravindran


With IPRIP Shekhar & Rashi Mehta


With RID A.S. Venkatesh


TRF Unity Ball Dinner of AKS Members



Registration Counter at MCEC



"End Polio Now Booth" at House of Friendship

## Break-Out Session by DG Pawan Agarwal






## Distribution of Baby Warmers







MELBOURNE 2023

# மெல்போர்ன் மாநாட்டில் தெற்காசிய வரவேற்பு






PRIP K R *ரவீந்திரன் மற்றும் அவர் மனைவி வானதி.* RI *தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்,* RIDE T N *சுப்ரமணியன் மற்றும் வித்யாவுடன்.* PDG *ஜான் டேனியல் மற்றும்* PRID *மிக்கேல் ஆல்பர்க் ஆகியோரும் உள்ளனர்.*



Rtn *ரவிசங்கர் டகோஜு மற்றும் அவர் மனைவி பௌலா* RIPE *கோர்டன் மெக்கினலி மற்றும் ஹெதருடன்.*





**மேலே:**
*வினிதா,* Rtn J K *தாமஸ்,* RID *விக்கி புலிட்ஸ்,* RID 3211 *துணை ஆளுநர் சூசன் கோஷி மற்றும்* RID *வெங்கடேஷ்.*

**இடது:**
RI *இயக்குனர்* A S *வெங்கடேஷ் மற்றும் அவர் மனைவி வினிதா* South Asia Reception *விருந்தினரை வரவேற்கின்றனர்.*

**வலது:**
RI *தலைவர் ஜோன்ஸ் மற்றும்* RID *வெங்கடேஷ்.*





South Asia Reception *தலைவர்* PDG M *முருகானந்தம்* RIDE *அனிருதா ராய்சௌத்ரி மற்றும் அவர் மனைவி ஷிப்ரா ஆகியோரை கௌரவிக்கிறார்.*



PRIP *சேகர் மேத்தா மற்றும் ராஷியுடன்,* RID 3220 PDGs *பாஷ்குமார் ராஜன், க்ரிஷ் ராஜேந்திரன் மற்றும் கௌரி ராஜன்.* **இடதில்** *அமிதா கோட்பாகியும் உள்ளார்.*



இடமிருந்து: RIDs வெங்கடேஷ், ஃபய்ஸ் கிட்வாய், RI தலைவர் ஜோன்ஸ், TRF அறங்காவலர் அஜிஸ் மேமன், அனில் ஸ்ரீவத்ஸா மற்றும் அவர் மனைவி திபாலி, PRIP மேத்தா, PRID கமல் சங்வி, TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, RID மகேஷ் கோட்பாகி மற்றும் DG N நந்தகுமார்.



PDG *முருகானந்தம் TRF அறங்காவலர் பாண்ட்யா மற்றும் அவர் மனைவி மாதவி அவர்களை கௌரவிக்கிறார்.*



**மேலே:** *(வலதிலிருந்து) பௌலா டகோஜு,* PDG *சுரேஷ் ஹரி, ஆஷா மற்றும் நீரஜ் பட்னாகர்.*



**வலமிருந்து:** PDG J *ஸ்ரீதர், சுமேதா நந்தகுமார்,* TRF *அறங்காவலர் கீதா மனேக்,* PDG *ராஜீவ் சர்மா, ஸ்ரீவத்ஸா, மிதிலேஷ் ஜா மற்றும்* PDG R *பரத்.*





RIDs வெங்கடேஷ் மற்றும் கிட்வாய்.



PRIP K R ரவீந்திரனுடன் RID வெங்கடேஷ்.



PRID மனோஜ் தேசாய் மற்றும் அவர் மனைவி ஷர்மிஷ்தா PDG முருகானந்தம் அவர்களுடன்.



SA Reception விருந்தனர்கள் RI தலைவர் ஜோன்ஸ் அவர்களை வரவேற்கின்றனர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

# மகாராஷ்டிரக் கிராமத்துக்கு, சுற்றுச்சூழலுக்கு இதமான அடுப்புகள்

ஜெய்ஸ்ரீ




RC பன்வெல் எலைட் தலைவர் சுவாதி லிகிட்டே (வலது) மகாராஷ்டிர கிராமத்தில் ஆதிவாசி பெண்களுடன்.

மகாராஷ்டிர மாநிலம் பன்வெல் அருகில் வராவனே என்ற மலைக் கிராமத்தில் 10 ஆதிவாசிக் குடும்பங்களுக்குத் தனித்துவமான, புகை இல்லாத அடுப்புகளைத் தரும் மாற்றத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது பன்வெல் எலைட் ரோட்டரி சங்கம், RID 3131. பன்வல் ராக்கெட் அடுப்பு (PRS) என்று அழைக்கப்படும் இந்த அடுப்புகள் மரத்துக்குப் பதில் குச்சிகளை எரிக்கிறது, குறைந்த நேரத்தில் உணவைச் சமைக்கிறது. “PDG தீபக் சிகார்பூர் இந்த மாதிரியை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். வழக்கமான அடுப்புகளில் எரிப்பதற்கென மரங்கள் கூடுதலாக வெட்டப்படுவதைத் தடுத்து மரங்களைக் காப்பதற்கு மிகச் சிறந்த தீர்வு இது என்று நாங்கள் தெரிந்து கொண்டோம்’’ என்கிறார் சங்கத் தலைவர் சுவாதி லிகிட்டே.

இந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஆறு பெண்களும், அடுப்பைத் தயாரிக்கும் அப்லின்னோவா நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களும் இந்தக் கிராமத்துக்குச் சென்று, ஒரு பள்ளியில் கூடியிருந்த 50 பெண்களுக்கு அதை இயக்கிக் காண்பித்தார்கள். தொழில்நுட்ப வல்லுனர்கள் பள்ளி வளாகத்திலிருந்த மரம் ஒன்றின்கீழ் விழுந்திருந்த சில குச்சிகளைத் திரட்டினார்கள், அடுப்பைப் பூட்டினார்கள், குச்சிகளைக் கொண்டு அதை ஏற்றிவைத்தார்கள். “ஒட்டு மொத்தச் செயல்முறையும் பார்வையாளர்களுக்கு வியப்பை அளித்தது. ஆறு பேருக்குப் போது மான சாதம் வெறும் 15 நிமிடங்களில் சமைக்கப்பட்டதைக் கண்டு அவர்கள் வியந்தார்கள். முக்கியமாக, மூச்சு முட்டும் புகை இல்லாதது மிகச் சிறப்பானது என்று அவர்கள் தெரிவித்தார்கள்’’ என்றார் சுவாதி.

இந்தச் சங்கம் சுற்றுச்சூழலுக்கு இதமான இந்தத் திட்டத்தை வெள்ளோட்ட அடிப்படையில் தொடங்கியுள்ளது. ஆனால், “மற்ற குடும்பங்களிடமிருந்தும் கோரிக்கைகள் பெருகியதைக் கண்டு நாங்கள் வியந்தோம். எனினும், இந்தக் கிராமத்தில் இதன் வெற்றியை மதிப்பிட்டுவிட்டுதான் நாங்கள் அடுத்த கட்டத்துக்கு நகரவுள்ளோம்.’’ இதற்கு முன் இந்த அடுப்புகள் உத்தராகண்ட் மற்றும் ஹூப்ளி ரோட்டரி சங்கங்களால் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ரூ.3,080 விலை

# அடுப்பைப்பற்றி

*‘ராக்கெட் அடுப்பு’ என்ற கொள்கையின்படி செயல்படும் இந்த அடுப்பு, குறைந்த விட்டம் கொண்ட மரத்தை எரிபொருளாகப் பயன்படுத்து கிறது. பாதுகாக்கப்பட்ட நெட்டுக்குத்துப் புகைபோக்கியைக் கொண்ட ஓர் எளிய எரித்தல் அறையில் இது எரிக்கப் படுகிறது, சுடர்கள் சமைக்கும் பரப்பை எட்டுவதற்குள் முழு எரித்தல் நிகழ்வது உறுதிசெய்யப்படுகிறது. பன்வல் ராக்கெட் அடுப்பின் சிறப்பு அம்சங் களாகத் தயாரிப்பாளர் இணையத் தளத்தில் (applinnova.com) குறிப்பிடப் பட்டுள்ளவை இவை:*

*PRS–v5 என்பது, புகை இல்லாத, சிக்கனமான, உயிரியல் பொருள் அடுப்பு ஆகும். இது மரங்களிலிருந்து விழுந்த குச்சிகளைப் பயன்படுத்தி 5 முதல் 6 பேருக்கு உணவு சமைக்கிறது. சில உலர்ந்த புற்கள், இலைகள் அல்லது தாளைத் தூண்டியாகப் பயன்படுத்தி இதை எளிதில் ஏற்றலாம், வழக்கமான அடுப்புகளைப்போல் இதில் காற்றை ஊதவோ மண்ணெண்ணெய் ஊற்றவோ வேண்டியதில்லை.*



*இதில் சுமார் 6 முதல் 8 குச்சிகளைப் பயன்படுத்தி (சுமார் 150 கிராம் மரம்) 15 நிமிடங்களில் 20 கோப்பை தேநீர் போடலாம், 8 முதல் 10 குச்சி களைக் கொண்டு 1 கிலோ அரிசியைச் சமைக்கலாம், 12 முதல் 15 குச்சிகளைக் கொண்டு 30 நிமிடங்களில் 10 ரொட்டி களைச் சமைக்கலாம்.*

*இந்த அடுப்பின் உயரமான உடல் பகுதி ஒரு புகைபோக்கியைப் போல் செயல்படுகிறது, அடுப்பின் வழியாக ஒரு வலுவான, இயற்கையான காற்றோட்டத்துக்கு வழிசெய்கிறது, இதன் செயல்பாட்டு ஆற்றல் வீச்சு முழுவதும் கிட்டத்தட்ட புகை இல்லாமல் இதைச் செயல்பட வைக்கிறது.*

*நெருப்பை அணைக்காமல் அல்லது சமைத்தல் செயலை நிறுத்தாமல் சாம்பலை வெளியில் தள்ளலாம். இதற்கு அவர்கள் எரியும் குச்சிகளை அவற்றின் இடத்தில் பிடித்தபடி எரிபொருள் தட்டை வெளியில் இழுத்தால் போதும். இப்படிச் செயல்பாட்டுக்கு நடுவில் சாம்பலை நீக்குவதால், தொடர்ந்து நெடுநேரம் சமைக்கலாம். இந்த அடுப்பைப் பூட்டுவது எளிது, இதை எங்கும் கொண்டு செல்லலாம், மகிழ்ச்சிப் பயணம் செல்லும் போது முகாம் அடுப்பாகக்கூடப் பயன்படுத்தலாம்.■*



*PRS அடுப்பு தயாரிக்கும் நிறுவனத்திலிருந்து ஒரு அதிகாரி அடுப்பை பற்றி கிராமத்தினருக்கு விவரிக்கிறார்.*

உள்ள ஒவ்வோர் அடுப்பும் ரூ.2,500க்குப் பெறப்பட்டது. ஒவ்வொரு தொகுப்பையும் தயாரிக்க 21 நாட்கள் ஆகும் என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ரோஷன் பள்ளிக்குப் பின்னால் இருக்கும் ஒரு சிறு குன்றைப் பற்றிய தன்னுடைய குழந்தைப் பருவ நினைவுகளை நினைவு கூர்ந்தார், “அப்போதெல்லாம் இந்த மலையின் வளைந்து நெளிந்த பாதைகளின் அருகில் மிகப் பெரிய மரங்கள் இருக்கும். ஆனால், நான் வளர்ந்த போது, அவை அனைத்தும் விறகுக்கெனப் படிப்படியாக வெட்டி வீழ்த்தப்பட்டதைக் கண்டேன். இன்று, அது இன்னொரு வெற்று நிலம்தான்.’’ என்றார்.

பழைய அடுப்புகளிலிருந்து வரும் புகையைச் சுவாசிப்பது நுரையீரல்களுக்குப் பாதிப்பை உண்டாக்குவது எப்படி என்று ரோட்டரியன்கள் கிராமத்து மக்களுக்கு விளக்கினார்கள். குச்சி களை எரிபொருளாகப் பயன்படுத்துகிற, புகை இல்லாத அடுப்புகள் நச்சுப் புகை இல்லாமல் இதயங்களையும் வீடுகளையும் கதகதப்பாக்கும், செயல்திறன் மிக்க சுற்றுச்சூழல் பராமரிப்புக்கு இது ஓர் உள்ளூர் தீர்வு என்கிறார் சுவாதி.■

Rotary PEOPLE OF ACTION

# புனேவில் இதய விழிப்புணர்வு பிரச்சாரம்

## ரோட்டரி செய்திக் குழு

இதய ஆரோக்கியத்தை மேம் படுத்தவும், பொது மக்களிடையே கார்டியோ பல்மனறி ரீசசிடேஷன் (CPR) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஏப்ரல் 7, உலக சுகாதார தினத்தன்று, RC புனே லக்ஷ்மி ரோட் மற்றும் ரிவைவ் ஹார்ட் அறக்கட்டளை இணைந்து ப்ராஜெக்ட் தட்கன், புனேவின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படவிருந்த மூன்று வார CPR விழிப்புணர்வுத் திட்டத்தை தொடங்கி வைத்தது. MLA சித்தார்த்த ஷிரோலே அத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த திட்டமானது புகழ் பெற்ற இருதயநோய் நிபுணர்களான Dr ஜகதீஷ் ஹிரேமத், Dr சுனில் சாத்தே மற்றும் RHF-இன் Dr கிஞ்சல் கோயல் ஆகியோரின் வழிகாட்டுதலைக் கொண்டிருந்தது என்று சங்கத்தின் முன்னாள் தலைவரான திட்ட இயக்குநர் கேதன் ஷா கூறினார்.

*காவல் துறையினருக்கு ஒரு CPR விழிப்புணர்வு அமர்வு.*



திடீரென மாரடைப்பு ஏற்பட்டு இறக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. 40 வயது உள்ள உடல் ஆரோக்கியமான சிலரும் திடீர் மாரடைப்புக்கு ஆளாகின்றனர். இத்தகையவர்களை உடனடி CPR மூலம் உயிர்ப்பிக்க முயற்சிப்பதன் முக்கியத்துவம் பல்வேறு அமர்வுகளின் போது வலியுறுத்தப்பட்டது.

12 ரோட்டரி சங்கங்கள், PYC டெக்கான் ஜிம்கானா மற்றும் பல நிறுவனங்கள் மற்றும் 12 இருதய நோய் நிபுணர்களின் ஈடுபாடு இந்த விழிப்புணர்வு மற்றும் கல்வித் திட்டம் ஆயிரக்கணக்கான புனே குடிமக்களை சென்றடைந்ததை உறுதி செய்ததாக ஷா மதிப் பிடுகிறார். ஒவ்வொரு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்விற்குப் பிறகு, குழு மராத்தி மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் இலவச சிறு புத்தகங்களை விநியோகித்தது, CPR-ஐ நிர்வகிப்பது மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களை உயிர்ப்பிக்க தேவையான இயந்திரங்களை இயக்குவது பற்றிய விரிவான வழிகாட்டுதலை வழங்கியது.

திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், ஐந்து AED இயந்திரங்கள் நிறுவப்பட்டன. பாலிவுட் நட்சத்திரங்களான கஜோல், அஜய் தேவ்கன், ஷில்பா ஷெட்டி மற்றும் அபிஷேக் பச்சன் ஆகியோர் இந்த திட்டத்திற்கு தங்கள் சமூக ஊடகங்களில் ஆதரவு தெரிவித்தனர்.■

ADVT.

www.iisuniv.ac.in

# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

FORMERLY **ICG**



**BHAAVIKA THANVI**
B.A. (HONS.)-PSYCHOLOGY, 2020 BATCH

**UPSC CIVIL SERVICES 2022**
**RANK - 100**

## Admissions Open 2023-24

UG/PG/Ph.D./D.Litt./D.Sc. & Professional Programmes

### Undergraduate Programmes

- B.A. ▸ B.Sc. ▸ B.Com.
- B.A./B.Sc./B.Com. Hons.
- B.A./B.Sc./B.Com. - Research
- B.A./B.Sc./B.Com. Hons. - Research

### Specialized Programmes

- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA UK

### UG-Professional Programmes

- **B.A.** (J.M.C.) ▸ **B.F.A.** ▸ **B.C.A.**
- **B.Sc. Hons.** (Forensic Science)
- **B.Sc. Hons.** (Data Analytics & AI)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc. Hons.** (Fashion Design)
- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.Sc. Hons.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **B.B.A.** (Aviation & Tourism Management)
- **B.Voc.*** *UGC Approved

### Integrated Programmes

- **B.A. B.Ed.*** ▸ **B.Sc. B.Ed.***
  *NCTE Approved
- **B.Sc. M.Sc.** (Nano Science & Technology)

### Post Graduate Programmes

- M.A. ▸ M.Sc. ▸ M.Com. ▸ M.F.A.
- M.S.W. ▸ M.Sc. Home Science
- M.B.A. (Semester Based)
- M.A./M.Sc. in Yogic Sciences
- RCI approved professional diploma in Clinical Psychology

### DISTINGUISHING FEATURES

- Extra & Co-curricular Activities
- Placement Support
- Wi-Fi enabled campus
- Conveyance / Hostel Facility
- NCC, NSS, Sports

### Co-Educational Programmes

**@ IISU Block, ISIM Campus,**
**Mahaveer Marg, Mansarovar**

- **B.C.A.** ▸ **B.B.A.** ▸ **B.Lib.Sc.**
- **M.A.** (Digital Media & Communication)
- **M.C.A.**
- **M.B.A.** (Dual Specialization, Trimester based)
  MBA/MCA AICTE Approved

### Short Term Courses

- Cyber Security and Cyber Law (Online)
- Certificate Course in Textile Design

### Research Programmes

- **Ph.D.** (Admission through Research Entrance Test.)

Research Entrance Test : **22 July 2023**

### Preparatory Classes along with UG/PG Programmes

- Civil Services ▸ NET ▸ USCMA

### College of Physiotherapy & Allied Health Sciences

(Co-Educational) & IIS Sitapura Campus

- B.P.T. ▸ M.P.T. ▸ Ph.D.

FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT

**9358819994**
ARTS & SOCIAL SCIENCES

**9358819995**
SCIENCE

**9358819996**
COMMERCE & MANAGEMENT


**8949322320**
PHYSIOTHERAPY

or mail at : **admissions@iisuniv.ac.in**

### SOME OF OUR DISTINGUISHED ALUMNAE




Padmini Solanki, IAS | Aruna Rajoria, IAS | Yasha Mudgal, IAS | Darshika Rathore Ajinkya, Endpoint, Middle East, UAE



Laxmi Tatiwala, Chartered Accountant | Shweta Sirohi Gupta, Careflight, Sydney, Australia | Beenu Dewal, 8th Rank, RAS 2018 | Manvi Soni, International Shooter



Priyanka Raghuvanshi, RPS | Fg. Lieutenant Swati Rathore, Indian Air Force | Vasundhara Singh, Dietician, AIIMS, New Delhi | Fg. Off. Shivanshi Pathak, Indian Air Force



Bhawana Garg, RAS | Maj. Komal Rathore, Indian Army | Lt Karnika Singh, Indian Army | Sqn. Ldr. Unnati Sahera, Flying Officer

Gurkul Marg, SFS, Mansarovar, Jaipur, Rajasthan-302020
+0141 2400160 / 161, 2397906 / 07
Toll Free No. : **1800 180 7750**

# மகிழ்ச்சி பள்ளிகளிலிருந்து மகிழ்ச்சியான மாணவர்கள் வரை

ரஷீதா பகத்



கோவாவில் மே மாதம் ஒரு இதமான மாலை நேரம், பனாஜி ஜிம்கானா மைதானம், ஸ்மார்ட்டாக உடையணிந்த பள்ளி மாணவிகள் நிறைந்திருந்ததால் பரபரப்பாக இருந்தது.

மாணவிகள் புதிய பிங்க் நிற சைக்கிளுடன் தங்கள் சக்தியை காட்ட தயாராக இருந்தனர். இதற்காக பனாஜி மிட்டவுன் ரோட்டரியின் (RID 3170) திட்டத்திற்குதான் நன்றி சொல்ல வேண்டும். ஏழை குடும்பத்தைச் சேர்ந்த பருவமடைந்த வளர் இளம் பெண்கள் பள்ளிக்குச் செல்ல சரியான போக்குவரத்து இல்லாததால் 2 கி.மீ. முதல் 5 கி.மீ. தொலைவு நடந்து செல்ல வேண்டியிருந்தது. இதனால் அவர்கள் பள்ளி செல்வதையே நிறுத்தி விட்டனர். இதைபற்றிய ஒரு கணக் கெடுப்பு நடத்திய பனாஜி மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஒரு திட்டத்தை உருவாக்கினார். அதை செயல்படுத்தியதன் மூலம் 25 பள்ளிகளைச் சேர்ந்த 5 முதல் 9 ஆம் வகுப்புவரை படிக்கும் 500 மாணவிகள் பலனடைந்தனர்.



*RC பனாஜி மிட்டவுன் அளித்த புதிய சைக்கிள்களுடன் மாணவிகள்.*

சங்கத்தின் தலைவரான சித்தா சர்தேசாய் தமது பதவிக் காலத்தின் ஆண்டில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நினைத்தார். நான் ஏதாவது பெரியதாக செய்ய வேண்டும் என்று நினைத்தேன். PDG வாட்லாமணி எப்போதும் பெரிய திட்டத்தையே தொடங்கி செயல்படுத்துவார். அதுபோலவே நானும் ஒரு பெரிய திட்டத்தை கையிலெடுத்தேன். ஊரகப்பகுதிகளில் வசிக்கும் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகள் 500 பேரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சைக்கிள் வழங்குவதான் அந்த திட்டமாகும்.

இது சங்கத்தின் வெள்ளிவிழா ஆண்டு என்பதால் நிலையான, மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நினைத்தோம் என்று சர்தேசாய் தெரிவித்தார். 500 சைக்கிள் வாங்க ரூ.20 லட்சம் தேவைப்பட்டது. வியன்னார் இன்ப்ரா எல்.எல்.பி. மற்றும் மாரிகெடி ஃபுட்ஸ் ஆகிய இரு கார்ப்பொரேட் நிறுவனங்கள் தங்களது கார்ப்பொரேட் நிறுவனங்களின் CSR நிதி வழங்க ஒப்புக்கொண்டன. சைக்கிளில் பள்ளி செல்லும் மாணவிகளின் பாதுகாப்புக்காக வெஸ்ட் கோஸ்ட் மோஹித் இஸ்பாட் பவுண்டேஷன் தலைக்கவசங்களை வழங்கியது.

பள்ளிகள் மூலம் பயனாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். மேலும் எந்த ஒரு மாணவியாவது ஏதாவது ஒரு காரணத்துக்காக பள்ளியை விட்டு விலக நேரிட்டால், அந்த சைக்கிளை வேறு ஒருவருக்கு கொடுக்க வேண்டும் என்பதை உறுதி


ROTARY CLUB of PANAJI MID-TOWN
DISTRIBUTION of 500 BICYCLES
to GIRL STUDENTS





செய்து கொண்டு மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கப்பட்டது. மாணவிகள் தேர்ச்சி பெற்று வெளியில் செல்லும்போது இதே விதிகள் தான். ஏனெனில் மாணவிகளுக்கு வழங்கப்படும் சைக்கிள்கள் இந்த 25 பள்ளி களுக்குச் சொந்தமானது. எனவே அதிக எண்ணிக்கையிலான மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் பலன்பெற முடியும். மேலும் இந்த பிங்க் நிற சைக்கிளை மாணவிகள் பள்ளிக்கு வந்து செல்வதற்கு மட்டுமே பயன் படுத்த வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. மாணவியின் குடும்பத்தினர் அதை எக்காரணம் கொண்டும் வேறு வேலைகளுக்கு பயன் படுத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மொகிந்தர் அமர்நாத், DG வெங்கடேஷ் தேஷ்பாண்டே, சங்கத்தின் செயலர் சச்சின் பந்தாரே, வெள்ளிவிழா குழு தலைவர் மிலிந்த் ஷங்க்வால்கர் மற்றும் சங்கத்தின் முன்னாள் இந்நாள் தலைவர்களிடமிருந்து தங்களுக்கு அதிகாரம் அளிக்கும் இந்த சைக்கிள்களை பெறுவதில் மாணவிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாவட்ட ஆளுநர் தேஷ்பாண்டே, ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த சிறுமிகளுக்கு வசதியாக சைக்கிள் வழங்கிய திட்டத்தை வெகுவாக பாராட்டினார். மாணவிகள் சைக்கிளை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற வாழ்த்தினார். அமர்நாத் பேசுகையில், இந்த திட்டம் எனது குழந்தை பருவத்தை நினைவூட்டுகிறது. நான் உறைவிடப் பள்ளியில் தங்கி படித்தபோது, முதன் முதலாக சைக்கிளை பெற்றபோது மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன் என்றார்.

சைக்கிள்கள் பெற்ற 500 ஏழை மாணவிகள் உயர் கல்வி பெறுவதற்கு உதவுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி சர்தேசாய் கூறுகையில், நல்ல மதிப்பெண் பெறும் மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு சங்கத்தின் நீண்டகால திட்டமான சாக்ஷர்தா திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படும் என்றார். இது கல்வி உதவி வழங்கும் திட்டம். இதன் கீழ் 1-ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை படிக்கும் மாணவ, மாணவி களுக்கு உதவித் தொகை வழங்கப் படும். இத்திட்டம் 1998-இல் தொடங்கப்பட்டது. ஆனால், அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச கல்வி அளிக்கப்படுவதால் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறோம் என்றார்.

கல்வி சாரா நடவடிக்கைகளுக்கு நிதி எடுக்கப்படுவதை தவிர்ப் பதற்காக கடுமையான விதிகளை பின்பற்றி வருகிறோம். மருத்துவம், என்ஜினீயரிங் மற்றும் இதர தொழில்முறை படிப்புகளுக்கும், பட்டப்படிப்பு படிக்கும் மாணவர் களுக்கும் அவர்கள் தங்களது முதல் பருவத்தேர்வை முடித்த பின்னரே நிதியுதவி வழங்கப்படுகிறது. எனவே இது கிட்டத்தட்ட மாணவர்கள் கட்டிய பணத்தை திருப்பிச் செலுத்துவது போன்றது தான். முன்னர் மாணவர்கள் முன்னதாகவே நிதியுதவி பெற்றனர். ஆனால், படிப்பைத் தொடராமல் இருந்தனர். இதை கண்டறிந்த நாங்கள் புதிய விதிகளை ஏற்படுத்தியுள்ளோம் என்றார்.

உயர்கல்விக்குச் செல்லும் மாணவிகள் விகிதம் பற்றி அவர் கூறுகையில், சமீபத்தில் தொழில்முறை படிப்புகளில் சேர்ந்து படிக்கும் 11 பேருக்கு நிதியுதவி வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளோம். இவர்களில் 6 பேர் மாணவிகள். முன்பு மகிழ்ச்சிப் பள்ளிகளுக்கான திட்டத்தை செயல்படுத்தினோம். இப்போது மகிழ்ச்சியான மாணவர்களை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம் என்றார். ■

# ரோட்டரிக்கு கை கொடுத்தவர்!

ராஜேந்திர சாபூ

ஜோனதன் மஜியாக்பே ஒரு சிறந்த தலைவர். 2003-இல் ஜோனதன், ரோட்டரி சர்வதேச தலைவராக நியமிக்கப்பட்ட முதல் ஆப்பிரிக்கர் என்ற வரலாற்றை உருவாக்கினார். 2008-ஆம் ஆண்டு அறங்காவலர் தலைவரானார்.

1967-ஆம் ஆண்டு அவர் ரோட்டரியில் சேர்ந்தார். நைஜீரியாவில் ரோட்டரி மாவட்டம் 9125-க்கு உட்பட்ட அபுஜா மெட்ரோ ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருந்தார். கானு ரோட்டரி சங்கத்தின் கடந்தகால உறுப்பினர். அவரும் அவரது மனைவி அயோவும் ரோட்டரியின் மிகப்பெரிய நன்கொடையாளராகவும் பயனாளியாகவும் இருந்தனர். சிறந்த சேவைக்கான விருதையும், TRF பாராட்டு பத்திரத்தையும் பெற்றவர். பல்வேறு போலியோ ஒழிப்பு குழுக்களில் இடம்பெற்றிருந்த அவர், சர்வதேச அளவில் போலியோ ஒழிப்புக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றினார்.

1988–90-ஆம் ஆண்டுகளில் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராக அவர் இருந்தபோது, 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அம்பாலாவில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கலந்து கொள்ள அவர் இந்தியா வந்தார். உஷாவும் நானும், ஜோனாதன் மற்றும் அவரது மனைவி அடே இருவரையும் சண்டிகரில் சந்தித்தோம். அங்கு அமைதி, வளம், மனிதகுலத்தின் ஒற்றுமையை குறிக்கும் கொடுக்கும் கை, வாங்கும் கை என்பதை வலியுறுத்தும் கை சின்னத்தை அவர் பார்வையிட்டார். நான் RI தலைவரான போது உங்களையும் தாண்டிப் பாருங்கள் என்பதை கருப்பொருளாக கொண்டிருந்தேன். அப்போது ஜோனதன் சிரித்துக் கொண்டே எனது கருப்பொருள் கைகள்தான் என்றார். அதன் பின்னர் அவர் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரான போது எடுத்துக் கொண்ட கருப்பொருள்தான் கை கொடுங்கள் (Lend a hand) என்பது. அதாவது கொடுப்பவரும் வாங்குபவரும் சமநிலையில் கைகளை தூக்கியவாறு இருப்பது தான் அவரது கருப்பொருளாக இருந்தது.

2003-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி, RI தலைவர் என்ற முறையில் மஜியாக்பே, சண்டிகரில் உள்ள சுக்னா ஏரியில், பஞ்சாப் ஆளுநர் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகி ஓ.பி.வர்மா முன்னிலையில் அமைதி சின்னத்தை திறந்துவைத்தார். உலகில் கருத்தொற்றுமையையும் அமைதியையும் ஏற்படுத்த ரோட்டரி உறுதிபூண்டுள்ளது. வறுமை, கல்வியறிவின்மை, வேலைவாய்ப்பின்மை, நோய் இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தால்தான் இவை சாத்தியம் என்று அவர் தெரிவித்தார். பின்னர் அவர் நகரின் பல்வேறு சேரிப்பகுதிகளுக்குச் சென்று ரோட்டரி நிறைவேற்றி வரும் திட்டச் செயல்பாடுகளைப் பார்வையிட்டார்.

ரோட்டரி மூலம் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கனவு கண்டார். சுயநலமில்லா சேவையில் நம்பிக்கை கொண்டிருந்தார். 2003 ஜூன் மாதம் ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் ரோட்டரி மாநாடு நடந்து கொண்டிருந்த போது மனைவி அடே இறந்த செய்தியை கேட்டார். ரோட்டரி தலைவராக அவர் பதவியேற்பதற்கு சில நாட்கள் முன்பு தான் இந்த துயரச் சம்பவம் நடந்தது. ஆனாலும் அவர் தனது செயல்பாட்டிலிருந்து பின்வாங்கவில்லை. அவர் மிகுந்த துயரத்தில் இருந்தபோதும், பொறுப்பு மிகுந்த பதவியை ஏற்றார். அவர் அப்பழுக்கற்றவராகவும், அமைதியை விரும்புபவராகவும் கருதப்பட்டார்.

2003–04-ஆம் ஆண்டில் PRIP மார்க் மலோனி அவருக்கு உதவியாளராக இருந்தார். அந்த நேரத்தில் ஜோனதன் ரோட்டரி



*PRIP ஜோனதன் மஜியாக்பே (இடதிலிருந்து 2வது), PRIPs க்ளென் எஸ்டெஸ், ராஜேந்திர சாபூ, பில்பாய்டு, RI போலியோப்ளஸ் குழு தலைவர் ராபர்ட் ஸ்காட், PRIPs கார்ல் ஸ்டென்ஹாமர், லூயி கியே, மற்றும் பிச்சாய் ராட்டக்குள் ஆதித்யா பிர்லா மையத்தின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா அவர்களை ஒரு நிகழ்ச்சியில் கௌரவிக்கின்றனர்.*

குடும்பம் என்கிற வார்த்தைக்கு உண்மையான அர்த்தம் கொடுப்பதை அவர் கவனித்தார். நோய் அல்லது இழப்பால் பாதிக்கப்பட்ட ரோட்டேரியன்களின் குடும்பங்களுக்கு ரோட்டேரியன்கள் நட்பாகவும், ஆதரவாகவும் இருக்க வேண்டும் என்பதில் அவர் ஆர்வமாக இருந்தார்.

2007-ஆம் ஆண்டு அயோ என்ற பெண்மணியை திருமணம் செய்து கொண்டார். அவருக்கு ப்ளோரன்ஸோ என்ற மகனும் 3 பேரக்குழந்தைகளும் உள்ளனர். நானும உஷாவும் அயோ மற்றும் ஜோனதனை RI மாநாடு மற்றும் அசெம்பளி கூட்டத்தில் சந்தித்திருக்கிறோம். அயோ விரைவிலேயே ரோட்டரி குடும்பத்தில் ஒருவரானார். நாங்கள் நால்வருமே இணைபிரியாத நண்பர்களாக இருந்தோம்.

ஜோனதன் தொழில்முறையில் ஒரு வழக்குரைஞர். லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் பட்டம் பெற்றார். இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் வழக்குரைஞர்கள் சங்க உறுப்பினராக இருந்தார். ஜே.பி. மஜியாக்பே அண்ட் கோ நிறுவனத்தின் முதன்மை பங்கு தாரராக இருந்தார். சட்டத்துறையில் சிறப்பாக பணியாற்றியதற்காக நைஜீரியாவின் மூத்த வழக்குரைஞர் என்ற அங்கீகாரமும் அவருக்கு கிடைத்தது. கானு மாநிலத்தில் இடைக்கால நீதித்துறை குழுவிலும் அவர் பணியாற்றினார். மேலும் நீதிபதிகள் அமர்வுக் குழுவிலும் அவர் உறுப்பினராக இருந்தார். நைஜீரிய வழக்குரைஞர்கள் சங்கத்தின் துணைத்தலை வராகவும், சர்வதேச வழக் குரைஞர்கள் சங்கத்தின் உறுப் பினராகவும் இருந்துள்ளார்.

கானு மாநிலத்தின் ஆங்கிலிகன் மறைமாவட்டத்தின் முன்னாள் வேந்தர், நைஜீரியன் செஞ்சிலுவை சங்கத்தின் கானு கிளையின் தலைவர், கானு தொழில் வர்த்தக சபை உறுப்பினராகவும் அவர் இருந்திருக்கிறார். 2008-ஆம் ஆண்டு நைஜீரிய பெடரல் குடியரசு என்ற சிறப்பு மிக்க ஆணையும் அவருக்கு வழங்கப்பட்டது. சட்டத்துறையிலிருந்து முன் கூட்டியே ஓய்வுபெற அவருக்கு திட்டமில்லை என்றாலும், 2010-ல், மருத்துவச் சூழ்நிலை மற்றும் சிறுநீரக செயலிழப்பு காரண மாக அவர் ஓய்வெடுக்க வேண்டி யிருந்தது. வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை அவர் டயாலிஸிஸ் சிகிச்சை செய்து கொண்டார். அதன் காரணமாக அவரது பணி பாதிக்கப்பட்டது. சிறந்த மருத்துவ வசதிக்காக அவர் தனது இருப்பிடத்தை அபுஜாவுக்கு மாற்ற வேண்டியிருந்தது.



பலமுறை நான் மருத்துவக் குழுவுடன் நைஜீரியா சென்றிருக் கிறேன். 2012-ஆம் ஆண்டு டிசம்பரில் மருத்துவக்குழு நைஜீரியாவில் அபுஜாவுக்குச் சென்றது. போலியோ அறுவைச் சிகிச்சைக்கான திட்டத்தின் வழி காட்டியாக ஜோனதன் இருந்தார். PRIP கல்யாண் பானர்ஜி அங்கு மருத்துவப் பணிக்கான தன்னார்வ தொண்டராக இருந்தார்.

ரோட்டரியின் நைஜீரிய தேசிய போலியோ பிளஸ் கமிட்டியின் தலைவர் புஸுயி ஓனபோலு சரிவர செயல்படாததால் அவருக்கு பதிலாக வேறு ஒருவரை தேர்ந் தெடுக்க கல்யாண், ஜோனதன் மற்றும் நான் ஆகிய மூவரும் TRF தலைவர் வில்ஃப் வில்கின்ஸனை சர்வதேச அசெம்பிளியில் சந்தித் தோம். இதையடுத்து PDG Dr துன்ஜி ஃபுன்ஷோ 2013-இல் அதன் தலைவரானார். அதைத் தொடர்ந்து நைஜீரியா 2020 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் போலியோ இல்லாத நாடாக உருவானது. Dr துன்ஜி ஃபுன்ஷோ மற்றும் ஜோனதனின் முயற்சிக்கு நன்றி.

ஜோனதன் நேர்மைக்கும் நெறிமுறைகளுக்கும் இலக்கண மாகத் திகழ்ந்தார். அவர் எதிலும் நம்பிக்கைக்குரியவராகவும் முன் மாதிரியாகவும் இருந்தார். ரோட்டரி தனது பாதையை சிறப்பாக கடக்க உதவிய அவருக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். இறைவனின் கைகளில் துயில் கொண்டுள்ள அவருக்கு எனது வீரவணக்கம்.

எழுத்தாளர் ஒரு முன்னாள்
RI தலைவர்.

# ரோட்டரியின் முன்னாள் தலைவர் மஜியாக்பே மறைவு

கல்யாண் பானர்ஜீ

ஆப்பிரிக்காவில், நைஜீரியாவைச் சேர்ந்தவரும் ரோட்டரியின் முன்னாள் சர்வதேச தலைவருமான ஜோனதன் மஜியாக்பே, கடந்த மே 27-ஆம் தேதி, தமது 89-வது பிறந்தநாளை கொண்டாடுவதற்கு சில வாரங்கள் இருந்த நிலையில் காலமானார். அவரது மறைவு ரோட்டரி உலகத்தை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஜோனதன் மஜியாக்பே, 2003–2004-ஆம் ஆண்டுகளில் ரோட்டரியின் சர்வதேச தலைவராக இருந்தார். ரோட்டரியின் நூற்றாண்டுக்கால வரலாற்றில் ஆப்பிரிக்காவிலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட முதல் தலைவரும் அவர் தான். கடந்த 2020-ஆம் ஆண்டு ஆப்பிரிக்கா போலியோ இல்லாத கண்டமாக அறிவிக்கப்பட்டது. இதற்கு அவரது பெருமுயற்சியே காரணமாகும்.

ஒரு உண்மையான மனித நேயவாதியாகவும், சாதி, மதம், இனம் ஆகியவற்றை கடந்து அனைத்து மக்களின் அன்பை பெற்றவராகவும் அவர் திகழ்ந்தார். அவர் எப்போதும் மற்றவர்களுக்கு கை கொடுக்க தயாராக இருந்தார். அதனால் அவர் ரோட்டரியின் சர்வதேச தலைவராக இருந்த ஆண்டில் அதுவே ரோட்டரியின் கருபொருளாக இருந்தது.

அவர் தலைவராக இருந்த காலத்தில் தனது குடும்பத்தினரை ரோட்டரியில் ஈடுபடவைத்தார். அது முதல் ரோட்டரியில் குடும்பத்தினரை ஈடுபடுத்துவது இன்றுவரை தொடர்கிறது. 1989-ஆம் ஆண்டு நடந்த CoL கூட்டத்தில் ரோட்டரியில் பெண்களை சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை அவர் கொண்டுவந்தது நினைவுகூரத்தக்கது.

ஆப்பிரிக்காவில் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளில் அவருக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. மேலும் ஆப்பிரிக்க பிராந்திய போலியோ பிளஸ் குழுவின் முன்னோடித் தலைவராக இருந்தார். போலியோ இல்லாத உலகை தருவோம் என்று குழந்தைகளுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தினார்.

அதன்பிறகு பல ஆண்டுகள் சர்வதேச போலியோ பிளஸ் குழுவில் இடம்பெற்றார்.



*அமர்ந்திருப்போர் (வலதிலிருந்து) PRIP ஜோனதன் மஜியாக்பே, PRIP ராஜேந்திர சாபூ, மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் மற்றும் PRIP கல்யாண பானர்ஜி 2011 நியூ ஆர்லியன்ஸ் RI மாநாட்டில்.*

ரோட்டரியில் நமக்கு அழியாத பாரம்பரியத்தை மஜியாக்பே விட்டுச் சென்றுள்ளார். 1967-ஆம் ஆண்டு, நைஜிரியாவில் கானு ரோட்டரி சங்கத்தில் அவர் சேர்ந்தார். அந்த சங்கம் 1961-இல் சாசனம் பெற்றது. தமது சிறப்பான சேவைகள் மூலம் அவர், 1988-இல் ரோட்டரி இன்டர்நேஷனல் வாரியத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

முன்னாள் இயக்குநரான மஜியாக்பே, இந்தியாவில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் ரோட்டரி தலைவரின் பிரதிநிதியாக கலந்து கொண்டார். RID 3050-க்கு உட்பட்ட குஜராத் மாநிலம், கட்சில் உள்ள புஜ் ரோட்டரி சங்கம் ஒரு ஆரம்ப பள்ளிக்கு நிதியுதவி அளித்தது. அந்த பள்ளிக்கு அவரது மனைவி அடே மஜியாக்பே பெயரிடப்பட்டது.

தொழில்முறையில் வழக்கறிஞர் பணியை ஜோனதன் மஜியாக்பே 1967-ல் நைஜீரியாவில் தொடங்கினார், 1971-ஆம் ஆண்டு ஜே.பி.மஜியாக்பே அண்ட் கோ என்னும் சட்ட நிறுவனத்தை தொடங்கி அதன் முக்கிய பங்குதாரராக இருந்தார். ஒரு சிறந்த வழக்குரைஞராக அவர் இருந்தபோதிலும் வழக்குகளில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் நடைமுறையை கொண்டுவந்தார். வழக்குகளை நடத்தியிருந்தால் அவரது நிறுவனம் அதிக அளவில் பணம் சம்பாதித்திருக்க முடியும். ஆனாலும் சமரச முயற்சிகளையே அவர் தேர்ந்தெடுத்து செயலாற்றினார். 1980 ஆண்டில் நைஜீரியாவின் மூத்த வழக்குரைஞர் என்ற மதிப்புமிக்க பதவி அவருக்கு வழங்கப்பட்டது. வடக்கு நைஜீரியாவின் சிறந்த வழக்குரைஞராக அவர் தரம் உயர்த்தப்பட்டார்.

சட்டத்துறையில் மூத்த வழக்குரைஞர் என்ற முறையில் அவரின் பங்களிப்பையும், அவரது மனித நேயத்தையும் கௌரவிக்கும் வகையில் மஜியாக்பேக்கு நைஜீரிய குடியரசின் மிகப்பெரிய விருது அவருக்கு வழங்கப்பட்டது.

அவர் தமது சொந்த மொழியான யோரூபாவை தவிர ஹவுஸா மற்றும் இக்போ மொழியையும் சரளமாக பேசினார். அவர் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் முஸ்லிம்கள் பலர் மெக்காவுக்கு புனிதப் பயணம் மேற்கொள்ள நிதியுதவி செய்துள்ளார்.

அவரது மறைவு ரோட்டரி உலகத்திற்கு பெரும் இழப்பாகும். அவரது மறைவுக்கு ரோட்டரி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

(PDG துன்ஜி ஃபுன்ஷோ ஆதரவுடன் எழுதப்பட்டது.)

கட்டுரையாளர் முன்னாள் ரோட்டரி தலைவர்.■

# RC மெட்ராஸ் நார்த் பெண் சாதனையாளர்களை கவுரவிக்கிறது

ரோட்டரி செய்திக்குழு

RC மெட்ராஸ் நார்த் 2022–23 ரோட்டரி ஆண்டிற்கான இமேஜின் எக்ஸலன்ஸ் விருதுகளை நிறுவியது. ரோட்டரியின் 7 கவனம் செலுத்தும் துறைகளுடன் இணைந்து செயல்பட்ட பெண் சாதனையாளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப் படுகிறது.

Gender Security Project நிறுவனர் கீர்த்தி ஜெயக்குமார்; Community Health Education Society நிறுவனர் Dr மனோரமா; பத்மபிரியா, தலைமை நிர்வாகி, Sanitation First India; Dr உமையாள் முருகேசன், M.D., குமரன் மருத்துவமனைகள்; அருணா சுப்ரமணியம், நிர்வாக அறங்காவலர், பூமிகா டிரஸ்ட்; மது சரண், நிறுவனர், River NGO; மற்றும் பத்ம பிரியா, நிறுவனர், விதாய் விதைப்போம் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. PDG I S A K நாசர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.■



PDG I S A K *நாசர் இமாஜின் விருதினை* Community Health Education Society *நிறுவனர்* Dr *மனோரமாவிற்கு வழங்குகிறார்.*

# துருக்கிக்கு கதைகள் மூலம் நிதி திரட்டுதல்

கிரண் ஜெஹ்ரா

RID 3190-க்கு உட்பட்ட பெங்களூர் ஓயிட்பீல்டு சென்ட்ரல் ரோட்டரி சங்கம், சர்வதேச சேவைக்கான மாவட்டத்தின் கலாச்சார பரிமாற்ற குழு மூலம் கலாச்சார புரிதலை மேம்படுத்துவதற்கும், துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களின் அவசர தேவைகளுக்கு உதவுவதற் காகவும் துரிதமாக செயல்பட்டது. எல்லைகளைத் தாண்டி உலகளாவிய



*இங்கிலாந்தைச் சேர்ந்த கதை சொல்பவர் ஜான் ரோ.*

மொழியாக கதைசொல்லும் ஆற்றலை அங்கீகரித்து சிங்கப்பூரைச் சேர்ந்த ஏஸ் நோவேஷன் என்னும் மென்பொருள் நிறுவனம் மற்றும் பெங்களூரைச் சேர்ந்த ஸ்டார்ட் அப் இக்னிஷன் குழுவுடனும் இணைந்து பணியாற்றினோம். 195 நாடுகளைச் சேர்ந்த 195 கதைசொல்லிகளை ஒருங்கிணைக்கும் ஒரு நிகழ்வை உருவாக்க தொழில்நுட்பம் எவ்வாறு உலகளாவிய இணைப்பை ஏற்படுத்துகிறது என்பதை இந்த நிகழ்வு விளக்குகிறது என்றார் ரோட்டரி மாவட்டத்தின் கலாச்சார பரிமாற்ற குழுவின் தலைவர் மனோஜ் கப்ரே.

டர்ன் 2 டர்க்கி என்று அழைக்கப்படும் இந்த 24 மணி நேர இடைவிடாத ஆன்லைன் திட்டம் மெய்நிகர் (ஜூம் பிளாட்பார்ம்) தளத்தில் வெளிவந்தது. இது உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்கள், ரோட்டரி நண்பர்களின் பல்வேறு பார்வையாளர்களை கவரும் வகையில் இருந்தது. ஜப்பானிய கமிஷிபாய் ஓவியங்களுடன் பின்னிப் பிணைந்த கதைகள் மற்றும் தனித்துவமான இசைக் கருவிகளை உள்ளடக்கிய கதை சொல்லும் நுட்பங்களை பரந்த வரிசையை காட்சிப்படுத்தியது.



*அமெரிக்காவைச் சேர்ந்த லோரென்ஸோ அகஸ்டா காலண்டர் II.*



*க்ரீஸ் நாட்டைச் சேர்ந்த கதை சொல்லும் ஆசிரியர் டெஸ்போனா அரிஸ்டேடோ.*

ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பிரான்ஸ், மொரோக்கோ, இலங்கை, துருக்கி மற்றும் இந்தியாவைச் சேர்ந்த கதை சொல்லிகள் இந்த கலாசார திரைக் கதைக்கு பங்களிப்பு செய்துள்ளனர்.

சர்வதேச சேவை இயக்குநர்கள் சங்கர் சாஸ்திரி மற்றும் ராஷ்மி தங்கசாலி ஆதரவுடன் ஏற்பாட்டுக் குழுவினர் 195 கதை சொல்லிகளை ஒருங்கிணைத்தனர். அந்தந்த மண்டலங்களின் நேரப்படி அவர்களுக்கான அமர்வு திட்டமிடப்பட்டது. ஏஸ் நோவேஷன் நிறுவன சி.ஓ.ஓ. டாக்டர் நீனா காயத்ரி நிகழ்ச்சி களை தொகுத்து வழங்கினார். துருக்கியில் உள்ள RID 2420-ன் DGN முராட் ஆர்டாக் மற்றும் RID 3190-ன் மாவட்ட ஆளுநர் ஜீதேந்திர அனேஜா ஆகியோர் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

கிரீஸ் நாட்டைச் சேர்ந்த கதை சொல்லும் ஆசிரியர் டெஸ்போனா அரிஸ்டேடோ நிகழ்ச்சியில் தமது எண்ணங்களை பகிர்ந்து கொண்டார். அவர் கூறுகையில், நாங்கள் கேட்ட கதைகளும் சொல்லிய கதைகளும் அழகாக இருந்தன. பெரும்பாலும் அவை பல்வேறு நாடுகளின் நாட்டுப்புற கதைகளாகவே இருந்தன. நம் எல்லோரையும் இணைக்கும் ஆற்றல் கதைகளுக்கு உண்டு. நிதி திரட்டலில் உதவுவது அவர்களுக்கு நமது ஆதரவை காட்டுவதற்கு சிறந்த வழியாகும் என்று தெரிவித்துள்ளார்.

பெங்களூருவைச் சேர்ந்த கதை சொல்லியான கீதை சுப்பிரமணியன் டர்ன் 2 துருக்கிக்கான தமது ஆர்வத்தை வெளிப்படுத் தினார். இது ஒரு நல்ல நோக்கத்திற்காக நடத்தப்பட்ட அற்புதமான நிகழ்வு என்று விவரித்தார்.■

# உங்கள் திறமைகளைப் பயன்படுத்துங்கள்

ஒவ்வோராண்டும் ரோட்டரியையும் ரோட்டரி அறக்கட்டளையையும் ஆதரிக்கிற குழுக்கள் ரோட்டரியின் வியூக முதன்மைகளைச் செயலுக்குக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துகின்றன. 2024–25 ரோட்டரி ஆண்டில் ஒரு குழுவில் சேவை புரியத் தங்கள் தலைமைப் பண்புத் திறன்களைப் பயன்படுத்துவதற்குத் தகுதி உள்ள ரோட்டரியன்கள் மற்றும் ரோட்டராக்டர்களை நாங்கள் தேடுகிறோம். இந்தப் பொறுப்புகள் உங்களுடைய தொழில் சார்ந்த திறமையை மற்றும் திறன் தொகுதியைப் பகிர்ந்துகொள்ள உங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகின்றன.

பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள பகுதிகளில் திறன்களைக் கொண்ட நபர்கள் விண்ணப்பம் செய்யலாம் என்று ஊக்குவிக்கிறோம். பொறுப்புகளின் எண்ணிக்கை வரம்புக்குட்பட்டது. நீங்கள் இந்த ஆண்டு தேர்வாக விட்டால், அடுத்த ஆண்டு மீண்டும் விண்ணப்பம் செய்யலாம்.

அனைத்துக் குழுக்களும் மின்னஞ்சல், மெய்நிகர் தளங்களில் உரையாடுகின்றன, பொதுவாக, ஆண்டுக்கு ஒரு கட்டாய நேரடிச் சந்திப்பு இருக்கும். குழு உறுப்பினராகக் கருதப்படுவதற்கு **on.rotary.org/ application2023** என்ற இணையத் தளத்துக்கு வாருங்கள். விண்ணப்பம் செய்கிறவர்கள் **my.rotary.org**ல் **‘My Rotary’**யில் தங்களைப் பதிவுசெய்துகொண்டிருக்க வேண்டும். விண்ணப்பங்கள் **15** ஆகஸ்டுக்குள் வந்து சேரவேண்டும்.

## Committee openings

| Area of Expertise | Function on Committee | Prerequisites | Openings & Commitment |
|---|---|---|---|
| **Audit** | Advises leadership on audited financial reports, internal and external audits, and internal control systems | Independence, appropriate business experience, and demonstrated financial literacy in accounting, auditing, banking, insurance, investment, risk management, executive management, or audit governance. | **One position** with a four-year term |
| **Communications** | Advises leadership on Rotary’s overall public image, branding, communications, content strategy and approach | Professional background and experience in internal and external communications, marketing, public image, brand and content strategy. | **Two positions** with three-year terms |
| **Diversity, Equity and Inclusion** | Advises leadership on the implementation of a diversity, equity and inclusion action plan | Professional or educational experience related to diversity, equity and inclusion. | **Two to four positions** with terms of up to three years |
| **Finance** | Advises the RI Board on Rotary’s finances, including budgets, investment policy and sustainability measures | Professional background in a finance-related field; nonprofit experience preferred. Candidates should have experience in financial matters at the club and district levels. | **Two positions** with three-year terms |
| **Fund Development** | Provides guidance and advice to the Trustees of The Rotary Foundation on all aspects of fundraising | Significant fund development or fundraising professional experience. Committee members actively fundraise and support the Foundation. | **Three positions** with three-year terms |

| Area of Expertise | Function on Committee | Prerequisites | Openings & Commitment |
|---|---|---|---|
| **Learning** | Advises leadership with respect to creating effective learning opportunities for Rotary leaders and members | Adult learning expertise within or outside Rotary. Experience in the professional learning field including e-learning and/or with planning and implementing learning events at the member, club, district, zone and international levels. | **Two positions** with three-year terms |
| **Operations Review** | Advises leadership on the effectiveness of operations, administrative procedures, and standards of conduct. Serves as the advisory compensation committee to the Executive Committee of the RI Board. | Experience in management, leadership development, or financial management, and thorough knowledge of Rotary's operations. Appointments are limited to past RI directors and past Foundation trustees. | **One position** with a six-year term |
| **Strategic Planning** | Advises leadership on matters regarding the strategic plan | Significant experience in long-term planning, financial management, and RI and Foundation programme activities. | **Two positions** with four-year terms |
| **Technology** | Advises leadership with respect to enhancing technology practices, products, and strategy to improve the member and participant experience at Rotary | Expertise in technology development, security and data privacy, product and project management, and user/participant experience. Non-Rotarian technology experts may be appointed. | **Two positions** with three-year terms |


## ROTARY NEWS PLUS


படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல்

உள்ள Junk folder-க்கு

செல்கிறதா?






ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை **ஒவ்வொரு உறுப்பினருக்கும்** e-mail மூலம் அனுப்புகிறோம்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# உங்கள் பயணம் நிலையானதாக இருக்கட்டும்!

ப்ரீதி மெஹரா

*கோடைக்காலம் வந்துவிட்டது. சமவெளியின் வெப்பத்திலிருந்து குளிர்ச்சியான தட்பவெப்பநிலைக்கு செல்வதற்காக நாம் பெட்டி மற்றும் தோள் பை சகிதம் தயாராகிவிட்டோம். உங்கள் பயணம் பொறுப்பானதாகவும், மகிழ்ச்சியாகவும் மிக முக்கியமாக பசுமையானதாகவும் மாற்ற உதவும் பல்வேறு குறிப்புகள் இதோ:*

நீங்கள் விமானத்தில் பயணம் செய்கிறீர்கள் என்றால் பல தரையிறக்கங்கள் மற்றும் புறப்பாடுகள் கார்பன் உமிழ்வை மட்டுமே சேர்க்கும் என்பதால் புறப்பட்டால் எங்கும் நிற்காமல் இலக்கை சென்றடையும் விமானத்தை தேர்வு செய்யுங்கள். மேலும் நீங்கள் குழுவாக பயணம் செய்யவில்லை என்றால் காரில் செல்வதைவிட விமானத்தில் செல்வதுதான் பசுமையாக இருக்கும். நீங்கள் குழுவாக செல்வதாக இருந்தால் சாலை வழியாகச் செல்வதுதான் நிலையான பயன்முறையாக இருக்கும். ஏனெனில் நீங்கள் செலவழிக்கும் வளங்களை பல நபர்களிடைய பகிர்ந்து கொள்கிறீர்கள். இதனால் உங்கள் கார்பன் வழித்தடம் குறைகிறது.

சுற்றுலா ஏஜென்சியால் திட்ட மிடப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த பயணத்திற்கு நீங்கள் செல்கிறீர்கள் என்றால் முன்னதாக அந்த நிறுவனம் உண்மையிலேயே பசுமையை ஆதரிக்கிறதா அல்லது வாடிக்கையாளர் கண்துடைப்புக்காக செயல்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அதாவது எளிமையாகச் சொன்னால் அந்த நிறுவனம் சுற்றுச்சூழலில் உண்மையிலேயே ஆர்வம் காட்டுகிறதா அல்லது ஆர்வம் உள்ளது போல் நடிக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

சில நேரங்களில் “ஆர்கானிக்” மற்றும் “இயற்கை” என்னும் வார்த்தைகள் எந்த பொருளும் இல்லாமல் சேர்க்கப்படுகின்றன. மார்க்கெட்டிங் முறையால் நாம் ஏமாந்துவிடக்கூடாது என்பதற்காக நாம் முன்கூட்டியே சிலவற்றை தெரிந்து கொள்வது ஒன்றும் தவறல்ல. சுற்றுலா ஏஜென்சியின் விடுமுறை பொதிகளுக்கு



பசுமை நிறுவனங்கள் ஒப்புதல் அளித்துள்ளதா என்பதை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உள்ளூர் உதவி மற்றும் பொருள்கள் பயன்படுத்தப்படுகிறதா, மற்றும் நாம் தங்கியிருக்கும் இடங்களில் தண்ணீர் மற்றும் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகிறா என்பதை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். எல்லாவற்றையும்விட முக்கியமாக உள்ளூர் வாசிகள் மற்றும் அவர்களின் கலாசாரத்தை பற்றி ஏஜென்சி கவலைப்படுகிறதா என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

உண்மையிலேயே பசுமை விடுமுறை என்பது மக்கள் மற்றும் சுற்றுலா செல்லும் இடங்களை அரவணைத்துச் செல்கிறதா, அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுகிறதா அல்லது அவர்களின் சுற்றுச்சூழலை மேலும் கெடுக்கும் வகையில் உள்ளதா என்பதை பார்க்க வேண்டும். எனவே உங்கள் சுற்றுலா ஆப்பரேட்டர் மற்றும் நீங்கள் பயன்படுத்தும் வாகனம் மற்றும் பரிந்துரைக்கப்பட்டு தங்கியிருக்கும் இடம் பற்றிய மதிப்பீட்டை பெற வேண்டும்.



நீங்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில் மறுசுழற்சி திட்டம் இருக்கிறதா என்று சோதித்து பார்க்கலாம். அதில் சில அம்சங்களில் குறைபாடுகள் இருந்தால் அதை நீங்கள் சுட்டிக்காட்டலாம். உங்களிடம் ஏதேனும் யோசனைகள் இருந்தால் தெரிவிக்கலாம். பெரும்பாலான ஹோட்டல் நிறுவனங்கள் விருந்தினர்களிடம் கருத்துக்களை பெறுவதில் தீவிரம் காட்டுகின்றனர்.

மலைப்பகுதிகளில் விடு முறையை கழிப்பது என்பது குறுகிய நடை பயணங்கள் அல்லது நீண்ட நடை பயணங்களில் செல்வதைக் குறிக்கிறது. இங்கேயும் பசுமை உணர்வு மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

மலையேற்றத்தை திட்ட மிடுவதற்கு முன் வானம் தெளிவாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அடிக்கடி மலையேறுபவர்களிடம் கேட்டால் எது சரியான வழி என்பதைச் சொல்லுவார்கள்.

இதுபோன்று சுற்றுலா செல்லும் போது கழிவுகளை போட்டுவைக்க ஒரு இலகுரக பையை கையில் எடுத்துச் செல்லலாம். கழிவுகளை பையில் எடுத்துச் சென்று பின்னர் அவற்றை சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறையில் எங்கு போட வேண்டுமோ அங்கே போட்டுவிடலாம்.

மலையேற்றம் செல்பவர் களும், விடுமுறையை கழிக்க வெளியிடங்களுக்குச் செல் பவர்களும் இதை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். இதேபோல வனவிலங்குகளுக்கு எதையும் சாப்பிட கொடுக்காதீர்கள். நீங்கள் அவற்று உணவளித்து கேடு செய்கிறீர்கள். ஏனெனில் அவை தங்கள் உணவுக்காக மனிதர்களை சார்ந்து வாழத் தொடங்குகிறது. வனங்களில் வாழும் உயிரினங்கள் சில இரை தேடுவதை விட்டுவிட்டு உணவுக்காக சுற்றுலா பயணிகளை நம்பியிருக்கு நிலை ஏற்படுகிறது. இதனால் அவை பாதிக்கப்படுகின்றன.

பொழுதுபோக்கிற்காக விலங்கு களை பயன்படுத்தும் மோசமான நடைமுறையும் உள்ளது. யானை சவாரி, ஒட்டகச் சவாரி ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை. பெரும்பாலும் இந்த விலங்குகள் வாழ் விடத்திலிருந்து விலகி இருப்பதுடன் அதிகம் வேலை வாங்கப்படுகின்றன.

பாலைவனச் சூழலில் வாழவேண்டிய ஒட்டகங்கள் சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கிற்காக ஈரப்பதம் நிறைந்த கடற்கரை பகுதிகளுக்கு கொண்டுவரப்படுகின்றன. இது போன்ற நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

விடுமுறையை கழிக்கச் செல் பவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பிரசுரங்கள், சிறிய புத்தகங்கள் மற்றும் வரைபடங்களை சுற்றுலா அலுவலகத்தில் திருப்பிக் கொடுப்பதை வழக்கமாக கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் அவற்றை மீண்டும் பயன் படுத்தலாம்.

விடுமுறையை கழிக்கச் சென்ற இடத்தில் ஷாப்பிங் செய்வது குறித்து ஒரு வார்த்தை. பொருள்களை வாங்கும்போது வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருள்களை வாங்குவதைவிட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்குவதற்கு முன்னுரிமை கொடுங்கள். மேலும் அழிந்து வரும் தாவரங்கள், விலங்குகள் அல்லது மரங்களால் செய்யப்பட்ட பொருள்களை வாங்காதீர்கள். விலங்குகளின் தோலுக்குள் சில பொருள்களை அடைத்து பொம்மைகளாக சுற்றுலாப் பயணிகளிடம் விற்கின்றனர். இது போன்ற பொருள்களை கண்டிப்பாக வாங்காதீர்கள்.

இறுதியாக ஒன்று. விடுமுறையை கழிக்க வெளியூர்களுக்குச் செல்லும்போது மீண்டும் பயன் படுத்தக்கூடிய பாட்டில் கையில் எடுத்துச் செல்ல மறந்துவிடாதீர்கள். அதேபோல கடைகளுக்குச் சென்று பொருள்கள் வாங்க தனியாக துணிப்பை எடுத்துச் செல்லுங்கள். கடைக்காரர்கள் பிளாஸ்டிக் பைகளை தருவதற்கு ஆர்வமாக இருந்தாலும் அதை நம்பியிருக்காதீர்கள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# Subscribe NOW!




## for Rotary News Print Version & e- Version For the Rotary year 2023 – 2024

### Annual Subscription (India)

| Print version | e-Version |
|---|---|
| ₹480/- | ₹420/- |

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹40 a month.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/Tamil) against each member's name.

Payments can be made online at

**HDFC Bank, Montieth Road, Egmore, Chennai.**
**Rotary News Trust**
**SB A/c No 50100213133460**
**IFSC: HDFC0003820**

Scan here to pay

Email us the UTR Number, Club Name, President/Secretary's name, Amount and Date of Transfer.

Rotary Club of ........................................ RI District ....................

Name of the President/Secretary ........................................

Address ........................................

........................................

........................................

City .................... State .................... PIN ☐☐☐☐☐☐

STD Code .................... Phone: Off. .................... Res. ....................

Mobile .................... E-mail ....................

Cheque/DD No. .................... Dated .................... for Rs. ....................

Drawn on ........................................

in favour of "**ROTARY NEWS TRUST**" is enclosed.

Date: President/Secretary

Mail this form to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## வீடு இல்லாதோருக்கு வீடு



*DG வெங்கடேஷ் தேஷ்பாண்டே சங்கத்தினருடன் புதிய வீட்டின் முன்.*

IPDG வெங்கடேஷ் தேஷ்பாண்டே RC பைகோலிம், RID 3170, ஒரு கிராமத்தில் ஒரு ஏழைக் குடும்பத்திற்கு அமைத்து கொடுத்துள்ள புதிய வீட்டிற்கான சாவியை அக்குடும்பத்திற்கு அளித்தார். இந்த வீடு சங்கம் ஏழை மக்களுக்கு கட்டியுள்ள 21-வது வீடு ஆகும்.■

## குடல் புற்றுநோய் விழிப்புணர்வு



*PDGs P கோபாலகிருஷ்ணன் மற்றும் S ராஜேந்திரன் RC கரூர் டெக்ஸ்சிட்டி கிரிக்கெட் குழு தலைவர் C B கார்த்திக்கிடம் வெற்றி கோப்பையை வழங்குகிறார்.*

RC கரூர் யங் ஜென், RID 3000, குடல் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கப் புல்தரைக் கிரிக்கெட் போட்டி ஒன்றை நடத்தியது. BNI, JCI, Yi, YES, CNI போன்ற பல இளைஞர் அமைப்புகள், பிற ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 12 அணிகள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.■

## தையல் இயந்திரங்கள் கொடையளிக்கப்பட்டன



*மல்லினா ராமச்சந்திர ராவ் ஒரு பயனாளியுடன்.*

RC தனுக்கு, RID 3020, ரூ.3 லட்சம் மதிப்புள்ள தையல் இயந்திரங்களை 42 நலிந்த பெண்களுக்குக் கொடையளித்தது. இந்தத் திட்டத்துக்கான செலவில் 85%ஐச் சங்க உறுப்பினர் மல்லினா ராமச்சந்திர ராவ் தன்னுடைய கௌதமி சால்வன்ட்ஸ் நிறுவனத்தின் வழியாக ஆதரித்தார்.■

## கிராமப் பள்ளிக்குக் கழிப்பறைத் தொகுதி



*DG கைலாஷ் ஜெத்தானி பள்ளியில் கழிப்பறை தொகுதியை துவக்கி வைக்கிறார்.*

மகாராஷ்டிர மாநிலம் அம்பர்நாத்தில் உள்ள தியானாம்ருத் வித்யாலயா-வில் RC அம்பர்நாத் ஸ்மார்ட் சிட்டி, RID 3142, கட்டிய புதிய கழிப்பறைத் தொகுதியை DG கைலாஷ் ஜெதானி தொடங்கிவைத்தார்.■

17 தோல்வி படங்களுடன் தொடங்கிய ஷம்மி கபூரின் வாழ்க்கையை மாற்றியவர் யார்? அவரது 18வது திரைப்படம் 1957ஆம் ஆண்டு OP நய்யரின் இசையுடன் வெளிவந்த தும்சா நஹின் தேகா, இது ஷம்மிக்கு புத்துயிர் தந்தது - சுறு சுறுப்பாக மற்றும் ஸ்டைலாக, மகிழ்ச்சியுடன் பாடல்களைப் பாடி இளம் இந்தியாவை அடிமைப்படுத்தினார். ஜவானியன் யே மஸ்த் மஸ்த், தும்சா நஹின் தேகா மற்றும் சுப்னேவாலே சாம்னே ஆ ஆகியவற்றை இளைஞர்கள் ஆர்வத்துடன் முனுமுனுத்தனர். “OP நய்யர் என்னைப் பாடவும், நடனமாடவும் வைத்தார், எனக்கு புதிய வாழ்க்கையைத் தந்தார்” என ஷம்மி கபூர் கூறியுள்ளார்.

1964ஆம் ஆண்டு வெளியான காஷ்மீர் கி களி திரைப்படத்தின் மூலம் OP, ஷம்மி கபூர் இதே போன்ற ஒரு பரபரப்பை உருவாக்கினர். காஷ்மீரின் பூக்கள் மற்றும் ஏரிகளுக்கு மத்தியில் ஷர்மிளா தாகூரை ஷம்மி கபூர் காதலிப்பது போல் படமாக்கப்பட்ட தீவானா ஹுவா பாதல் என்ற அப்படத்தின் பாடல் “பாரடைஸ் செரினேட்” என்று போற்றப்பட்டது. யே சாந்த் சா ரோஷன் செஹ்ரா ரசிகர்களை மட்டும் வசீகரிக்கவில்லை, அது ஷம்மியின் பிடித்த பாடலாகும். அவரது பாடல்களின் நேரடி நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டபோது, இந்தப் பாடலை பாடினால்தான் வருவேன் என்றார் ஷம்மி! ஷங்கர்-ஜெய்கிஷேனுக்கு முன்பே ஷம்மி கபூருக்கு ஜங்கிலி என்ற பிம்பத்தை உருவாக்கியவர் நய்யர்!

அவர் இறந்து பதினாறு ஆண்டுகள் ஆகியிருந்தாலும், OP இன்றும் பெரிதும் போற்றப்படுகிறார், ஆர்வம், மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் கொண்டாட்டத்தை வழங்கிய பாடல்களுடன் தொடர்புபடுத்தப் படுகிறார். அவை காதலுடன் எரியும், நகைச் சுவையுடன் மினுமினுக்கும், காபரேவுடன் ஒளிரும் மற்றும் பாங்க்ராவுடன் துடிக்கும். எழுத்தாளர் கணேஷ் அனந்தராமன் OP “நம்பிக்கையின் இசைக்கலைஞர்” என்று அழைக்கிறார். பஞ்சாபி மக்களாகிய நாங்கள் எளியவர்கள், சாதாரணமானவர்கள், நேர்த்தியற்றவர்கள். எங்களின் இசை உச்ச குரலிலும், வீரியத்துடன், வேகமானதாக இருக்கும் என்று OP ஒருமுறை குறிப்பிட்டுள்ளார். அவரது பஞ்சாபி மற்றும் மேற்கத்திய தாளங்களின் இணைவு அவரை ரீமிக்ஸ் துறையில் மிகவும் பிடித்தவராக ஆக்கியுள்ளது.

அவர் 79 படங்களுக்கு இசையமைத்தார்; நேர்மறையான உணர்வை தவிர, அவரின் பாடல்கள் மிகையான மெல்லிசை, வசீகரிக்கும்



# OP நய்யர்: மகிழ்ச்சியின் இசையமைப்பாளர்

**SR மது**



*இசைக்கலைஞர் OP நய்யர்*

ரிதம் மற்றும் புத்திசாலிதனமான ஆர்கெஸ்ட்ரா ஆகியவற்றிற்காக அறியப்படுகின்றன. “அவர் வார்த்தைகளால் அல்ல, உணர்வு களால் இசையமைக்கிறார்” என்று கீதா தத் கூறியுள்ளார். மதுபாலா OPயின் இசையை மிகவும் விரும்பியதால் அவர் இசையமைத்த படங்களில் தனது கட்டணத்தை குறைக்க முன்வந்தார்.

அவரது மிகவும் பிரபலமான படங்கள் - ஆர் பார், சிஐடி, மிஸ்டர் மிஸஸ் 55, நயா தௌர், தும்சா நஹின் தேகா, சோனே கி சிமயா, ஹவுரா பிரிட்ஜ், ஏக் முசாஃபிர் ஏக் ஹசீனா, காஷ்மீர் கி களி, மேரே சனம், ஃபிர் வொஹி தில் லயா ஹூன், பஹரன் ஃபிர் பி ஆயெங்கி - பாலிவுட் இசையின் அடையாளங்கள். அவர் பாகிஸ்தானையும் அதிரவைத்தார், லாகூர் மக்கள் அவரை “மண்ணின் மைந்தன்” என்று பாராட்டினர்.

அவர், கால் நடனமாடும் “டோங்கா பீட்” பாடல்களை தனது முத்திரையாக ஆக்கினார். மாங் கே சாத் தும்ஹாரா (நயா தௌர்,1957), பியா பியா பியா (பாப் ரே பாப்,1957); ஏ தில் ஹை முஷ்கில் (சிஐடி,1956) மற்றும் யுன் டு ஹம்னே லக் ஹசீன் (தும்சா நஹின் தேகா,1957) போன்ற பாடல்கள் இந்தியாவின் பெருநகரங்களில் OP நேரலை நிகழ்ச்சிகளில் எப்போதும் இடம்பெறும்.



*முகமது ரஃபி, OP நய்யர் மற்றும் கீதா தத்.*

### அவரது இசையின் கண்ணோட்டம்

OP ஒரு “ரிதம் கிங்” என்று பாராட்டப்பட்டவர். ஆனால், இந்த முத்திரை நியாயமற்றது என்று சிலர் நம்புகிறார்கள், ஏனெனில் அவர் மெல்லிசையிலும் தேர்ச்சி பெற்றவர். அவரது பிரபலமான சில பாடல்கள் இங்கே.

பாபுஜி தீரே சல்னா - கீதா தத்தால் பாடப்பட்டது (ஆர் பார்,1954); அந்நேரத்தில் மிக பிரபலம், எந்நாளும் ஒரு கூட்டத்தை இழுக்கும் பாடல்.

மாங் கே சாத் தும்ஹாரா (1957) - ரஃபி மற்றும் ஆஷா, திலீப் மற்றும் வைஜயந்தி மற்றும் OP இந்த அழியாத பாடலுக்காக ஒன்றிணைந்தனர்.

யே தில் ஹை முஷ்கில் ஜீனா யாஹா - கீதா மற்றும் ரஃபி (சிஐடி,1956). ஜானி வாக்கர் மேல் படமாக்கப்பட்ட மும்பை மெரி ஜான்னின் உற்சாகமான பாடல். ஆனால் ஓ மை டார்லிங், க்ளெமெண்டைன் என்ற மேற் கத்திய காதல் பாடலிடமிருந்து OP அதன் இசையை கடன் வாங்கியிருந்தார். இந்த பாடல் 1956ஆம் ஆண்டுக்கான பினாகா கீத்மாலா தரவரிசையில் முதலிடம் பிடித்தது.

ஆயியே மெஹர்பன் — ஆஷா போஸ்லே, ஹவுரா பிரிட்ஜ், 1958. மதுபாலா மினுமினுக்க, ஆஷா பரவசமாக பாட, OP-இன் மெல்லிசை இந்த எவர்கிரீன் நைட் கிளப் பாடலால் மயக்கியது.

ஜெய்யென் ஆப் கஹான் ஜாயேங்கே (ஆஷா, மேரே சனம்,1965). லதா அப்பாடலை ஹம் செய்ய விரும்பினார் என்பதை விட என்ன சிறந்த பாராட்டு இருக்க முடியும்!

கஜ்ரா மொஹபத் வாலா - ரஃபி மற்றும் ஷம்ஷாத் (கிஸ்மத்,1968). பெண்ணாக பிஸ்வாஜித் மற்றும் ஆணாக பபிதா மீது படமாக்கப்பட்ட இந்த கால்களை நடனமாட செய்யும் டூயட் ஒரு கர்ஜிக்கும் வெற்றி பாடல்.

### அவரது வாழ்க்கை மற்றும் தொழில் பயணம்


OP 1926-இல் லாகூரில் மருத்து வர்கள், பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் குடும்பத்தில் பிறந்தார்.

ஆனால் அவரது இசை திறமை ஆரம்பத்திலேயே அங்கீகரிக்கப் பட்டது. அவருக்கு 12 வயதாகும் போது, அவர் பாடினார் மற்றும் நடித்தார். 15 வயதில் அவர் அகில இந்திய வானொலிக்காக பாடல்களை இயற்றினார்.

1947-இல் நடந்த பிரிவினை அவரது குடும்பத்தை இந்தியா விற்கு குடிபெயரச் செய்தது, ஆனால் OP லாகூரிலிருந்து வெளியேற மறுத்தார். பின்னர், ஒரு கும்பல் அவரது பக்கத்து வீட்டு முஸ்லீம் நபரை மிரட்டி அவர் மறைத்து வைத்திருந்த இளைஞனை தங்களிடம் கொடுக்குமாறு வலியுறுத்தினர். OP பின் வாயில் வழியாக தப்பித்துச் சென்றார். அவர் நவம்பர் 1947-இல் அமிர்தசரஸ் சென்றார்.

ஆஸ்மான் படத்தின் மூலம் திரைப்பட இயக்குனர்







தல்சுக் பஞ்சோலிக்க்காக இசையமைப்பாளராக அறிமுகமானார். அப்படம் தோல்வியடைந்தது, சில நல்ல பாடல்கள் இருந்தபோதிலும் குரு தத்துக்கான பாஸ் உட்பட அடுத்த இரண்டு படங்களும் தோல்வியடைந்தது.

அவரது எதிர்காலம் இருண்டதாகத் தோன்றியபோது, கீதா தத் தனது கணவரின் அடுத்த தயாரிப்பான ஆர் பார் (1954)க்கு இசையமைப்பாளராக அவரைப் பரிந்துரைத்தார். அதன் இசை இந்தியாவை அதிரவைத்தது. அதன் எட்டு பாடல்களும் ஹிட். பைஜு பாவ்ரா மற்றும் அனார்கலியின் பாரம்பரியத்தில் திளைத்த பொதுமக்களுக்கு, ஆர் பாரின் வலிமையும், தாளமும், அதன் குறும்பான, உணர்வுப்பூர்வமான பாடல்களும் புத்துணர்ச்சியூட்டும் புதுமையாக இருந்ததாக கூறப்படுகிறது.


ஆர் பார் OP-இன் வாழ்க்கையின் புகழ்பெற்ற இரண்டாம் கட்டத்தைத் தொடங்கியது. CID (1956) மாபெரும் வெற்றி பெற்றது; மீண்டும், அதன் ஆறு பாடல்களும் ஹிட் ஆனது. ஏ தில் ஹை முஷ்கில் ஜீனா யஹா (ஜானி வாக்கருக்காக ரஃபி பாடியது), மற்றும் லேகே பெஹ்லா பெஹ்லா பியார் (ரஃபி, கீதா தத் மற்றும் ஷம்ஷாத்) இசை உலகை உலுக்கியது. மதுபாலா-குரு தத் நடித்த மிஸ்டர் மிஸஸ் 55 திரைப் படமும் அமோக வெற்றி பெற்றது.

1. OP *நய்யர், இயக்குனர் ஷாஹித் லத்தீஃப், பாடலாசிரியர் அஞ்சான் சாஹப், குரு தத்.*
2. S D *பர்மனுடன்.*
3. *ரஃபி, பாடலாசிரியர் கவி ப்ரதீப் மற்றும் ஆஷா போஸ்லே ஆகியோருடன்.*
4. *நௌஷத் மற்றும் ஜெய்கிஷனுடன்.*
5. *ஷம்மி கபூருடன்.*
6. *ஆஷாவுடன்.*

திடீரென்று, OP தொட்ட தெல்லாம் பொன் ஆனது. ஜாம்ப வான்களான திலீப் மற்றும் வைஜயந்தி நடித்து 1956-ஆம் ஆண்டு வெளியான நயா தௌர், OP-இன் பல்துறைத்திறனுக்கு ஒரு சான்றாக இருந்தது. ஒரு சிறந்த கோரஸ் பாடல் (சாதி ஹாத் பதானா), ஒரு ஆற்றல் மிக்க தேசபக்தி பாடல் (யே தேஷ் ஹை வீர் ஜவனோ கா) மற்றும் மறக்க முடியாத மாங் கே சாத் தும்ஹாரா ஆகியவற்றைக் அப்படம் கொண்டிருந்தது. எல்லாவற்றிற்க்கும் மேலாக, OP நௌஷாத் போல ஒரு நேர்த்தியான ஆனா ஹை தோ ஆ என்ற பாடலை இசையமைத்தார், இது ஒரு முழுமையான பாடல் என்று கூறப்பட்டது. சிறந்த இசைக்கான பிலிம்பேர் விருதை நயா தௌர் பெற்றது.



3



4



5

நயா தௌர் பாலிவுட்டின் மிக வெற்றிகரமான கூட்டாண்மைகளில் ஒன்றான OP மற்றும் ஆஷா போஸ்லே கூட்டணிக்கு வழிவகுத்தது. அந்த கூட்டாண்மை உணர்வுபூர்வமானது மற்றும் 16 ஆண்டுகள் நீடித்தது. அக்கா லதாவின் நிழலில் இருந்து ஆஷா வெளிவந்ததற்கான பெருமை OP-யையே சேரும். அவர் ஆஷாவின் குரலை வடிவமைத்து, அவரது திறமையை மெருகேற்றியது மட்டுமல்லாமல், 1957 முதல் 1974 அவர்கள் பிரியும் வரை அவருடைய பிரத்யேக பெண் பாடகியாக ஆஷா இருந்தார். ஆஷா OP-க்காக 60 படங்களில் 167 தனிப்பாடல்கள் உட்பட 324 பாடல்களைப் பாடினார் – கீதா (62 பாடல்கள்) மற்றும் ஷம்ஷாத் (39 பாடல்கள்) இணைந்து பாடியதை விட மூன்று மடங்கு அதிகம்.

50களின் நடுப்பகுதியில் இருந்து OPஇன் தாக்கம் பொதுமக்களிடையே பெரிதும் இருந்ததால், மற்ற இசையமைப்பாளர்கள் அவரது பாணியைப் பின்பற்ற வேண்டியதாக இருந்தது. அவரை விலை உயர்ந்தவராக கண்ட தயாரிப்பாளர்கள் – நயா தௌருக்குப் பிறகு அவர் ஒரு படத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வசூலித்தார் – மற்ற இசையமைப்பாளர்களிடம் சென்றனர், ஆனால் OP பாணியில் பாடல்களை உருவாக்க அவர்களை வற்புறுத்தினார்கள். OPயால் பாதிக்கப்பட்ட இசையமைப்பாளர்களைப் பற்றிய ரவீந்திர கெல்கரின் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட ஆய்வில் ஷங்கர் ஜெய்கிஷன் மற்றும் மதன் மோகன் போன்ற சிறந்த இசையமைப்பாளர்களையும் குறிப்பிடுகிறார். முடிவு: சந்தையில் பல OP மாதிரிகள் வர அசல் பாதிக்கப்பட்டது.

1961ல் ஒரு OP படம் கூட வெளியாகவில்லை. மெல்லிசை மற்றும் பாடல்களின் தரத்தை வலுப்படுத்துவதன் மூலம் அவர் தனது இசை பாணியை புதுப்பிக்க முடிவு செய்தார். மெல்லிசையின் இனிமையை அதிகரிக்க சாரங்கியுடன் சித்தார், சரோத் மற்றும் ஷெஹ்னாய் ஆகியவற்றை பயன்படுத்தினார்.

1960கள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் கண்களைக் கவரும் இடங்களில் படமாக்கப்பட்ட காதல் படங்களின் தசாப்தங்களாகும். அவை OPயின் மறுமலர்ச்சிக்கான சிறந்த சூழ்நிலைகள். ஆப் யூன்ஹி அகர் (ரஃபி மற்றும் ஆஷா, ஏக் முசாஃபிர் ஏக் ஹசீனா,1962); பந்தா பர்வார், தாம் லோ ஜிகர் (ரஃபி), ஃபிர் வஹி தில் லயா ஹூன், 1963); தீவானா ஹுவா பாதல் (ஆஷா-ரஃபி) ஜெய்யே ஆப் கஹான் ஜாயேங்கே ஆப்கே ஹசீன் ருக் (ரஃபி, பஹாரன் ஃபிர் பி ஆயெங்கி, 1967) ஆகிய சூப்பர்ஹிட்களுடன் அந்த மறுமலர்ச்சி நடந்தேறியது

1972-இல் பிரான் ஜாயே பர் வச்சன் நா ஜாயே படத்திற்குப் பிறகு ஆஷா- OP கூட்டணி

முடிவுக்கு வந்தது. அது ஒரு கசப்பான பிரிவாக இருந்தது. அந்த படத்தில் வரும் செயின் சே ஹம் கோ கபி என்ற ஆஷாவின் அழகான பாடல் பிலிம்பேர் விருதை வென்றது. ஆனால் ஆஷா அவ்விருதை ஏற்கவில்லை.

ஆஷா வெளியேறிய பிறகு OP-யின் இசை பெரிதாக வெற்றி பெறவில்லை. அவருக்கு ஆஷாவுடன் இருந்த தொடர்பு காரணமாக அவர் தனது குடும்பத்தை விட்டும் பிரிந்திருந்தார். இசையில் இருந்து விலகி ஹோமியோபதி மற்றும் ஜோதிடம் பயின்றார் (அவர் அதை இலவசமாக வழங்கினார்). அவர் தனது கடைசி சில ஆண்டுகளை தானேவில் ஒரு ரசிகர் ஜோடியுடன் பேயிங் கெஸ்டாகக் கழித்தார், அங்கு அவர் 2007இல் இறந்தார்.

OP தனது விதிமுறைகளின்படி தன் வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் மற்றவர்கள் தனக்கு இழைத்த தவறுகள் மற்றும் அவமானங்களை மறக்கவோ அல்லது மன்னிக்கவோ இல்லை. லதா மங்கேஷ்கருடன் இணைந்து பணியாற்றாத ஒரே இசையமைப்பாளர் அவர்தான். பொதுவாக, இருவரும் தங்கள் மத்தியில் எந்தப் பிளவும் இல்லை என மறுத்தனர் (ஆனால் ஆரம்பகாலத்தில் அவர்களுக்கிடையே தவறான புரிதல் இருந்ததை பற்றிய பல பதிப்புகள் உள்ளன). OP, லதா சிறந்த பாடகி, ஆனால் அவரது மெல்லிய குரல் தனது பாடல்களுக்கு பொருந்தவில்லை என கூறினார். அவரது குரல் நூற்றில் ஒன்று என்றும், ஆஷாவின் குரல் ஆயிரத்தில் ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

1992-இல், அவர் மத்தியப் பிரதேச அரசாங்கத்தின் லதா மங்கேஷ்கர் புரஸ்கார் விருதை நிராகரித்தார். அது ரூபாய் 100,000 ரொக்கப் பரிசுடன் வந்தது. அப்பணம் அவருக்கு தேவைபட்டாலும், OP "ஒரு பாடகரின் பெயரிலான விருதை ஒரு இசையமைப்பாளர் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?" என்றார்.

நேரம் தவறாமை என்ற வெறி அவருக்கு இருந்தது. ஒருமுறை அவரது வெற்றியின் முக்கிய பங்குதாரர் மற்றும் மதிப்புமிக்க நண்பர் ரஃபி ஒரு பதிவுக்கு தாமதமாக வந்தார். ஷங்கர்-ஜெய்கிஷன் பாடல் அவரை தாமதப்படுத்தியது என்று ரஃபி சொன்ன சாக்குப்போக்கு OPயை மிகவும் வருத்தமடைய செய்தது. அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும் வகையில் OP அந்த பதிவை ரத்து செய்தார் மற்றும் ரஃபியுடன் இணைந்து பணிபுரிவதை நிறுத்தினார்.



அவர் திரைப்பட தொழில் நுட்ப வல்லுனர்களிடம் சிந்தனை யுடனும் அன்புடனும் பழகினார். அவர்களுக்கு பணம் கொடுப்பதில் காலதாமதம் செய்து, திரைப்பட தயாரிப்பாளர்களை சுற்றி ஓட வைப்பது வழக்கமாக இருந்தது. OP தனது செல்வாக்கைப் பயன் படுத்தி தொழில்நுட்ப வல்லுனர் களுக்கு அதே நாளில் ஊதியம் வழங்க செய்தார். அவரது உதவிக்கு தொழில்நுட்ப வல்லுநர்களின் சங்கங்கள் அவருக்கு மிகுந்த நன்றியை தெரிவித்தனர். இசையமைப்பாளர் கயாம் அவர்களின் கட்டணத்தை ஒரு தயாரிப்பாளர் தாமதப் படுத்தியப்போது தலையிட்டு அதை பெற்றுத்தந்தார்.

OP தனது நல்ல காலங்களில், ஒரு குதுகலிப்பான வாழ்க்கை முறையைப் பின்பற்றினர். காடிலாக் காரை ஓட்டினார், ரோலக்ஸ் வாட்ச் மற்றும் ஃபெடோரா தொப்பி அணிந் திருந்தார், YSL சிகரெட் புகைத்தார், ஜானி வாக்கர் ப்ளக் லேபிளை உட்கொண்டார், பம்பாயில் உள்ள தாஜில் அடிக் கடி உணவருந்தினார் மற்றும் தாராளமாக டிப்ஸ் வழங்கினார். ஆனால் தனது பிற்காலத்தில் எளிமையாக வாழ தன்னை சமரசம் செய்து கொண்டார். அவர்களின் பிளவுக்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ரஃபி OP-ஐ அழைத்து, மன்னிப்பு கேட்டார், இருவரும் கட்டியணைத்துக் கொண்டனர். நீங்கள் என்னை விட சிறந்த மனிதன், ஏனென்றால் நீங்கள் உங்கள் கர்வத்தை கடந்துவிட்டீர்கள், நான் அதை செய்யவில்லை" என OP கூறினார்.

எழுத்தாளர்
மூத்த பத்திரிகையாளர்
மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப்
மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/
clublocator


# District Wise TRF Contribution as on April 2023

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 61,420 | 778 | 0 | 1,184 | 63,382 |
| 2982 | 57,899 | 7,013 | 14,684 | 75,739 | 155,335 |
| 3000 | 77,512 | 5,910 | 500 | 2,441 | 86,364 |
| 3011 | 112,725 | 18,424 | 27,127 | 775,644 | 933,919 |
| 3012 | 31,500 | 1,447 | 77,335 | 430,042 | 540,324 |
| 3020 | 148,818 | 23,509 | 57,652 | 2,155 | 232,134 |
| 3030 | 132,812 | 33,957 | 10,012 | 36,806 | 213,587 |
| 3040 | 28,347 | 2,422 | 0 | 124,031 | 154,800 |
| 3053 | 90,296 | 3,636 | 10,000 | 40,757 | 144,688 |
| 3054 | 30,171 | 1,474 | 8,434 | 94,741 | 134,820 |
| 3060 | 148,235 | 5,176 | 14,183 | 164,458 | 332,052 |
| 3070 | 120,816 | 9,968 | 53,544 | 11,347 | 195,675 |
| 3080 | 42,493 | 9,563 | 0 | 101,262 | 153,318 |
| 3090 | 19,462 | 0 | 6,253 | 0 | 25,715 |
| 3100 | 92,216 | 900 | 25,012 | 20,266 | 138,394 |
| 3110 | 69,134 | 454 | 25,317 | 970,556 | 1,065,460 |
| 3120 | 43,088 | 513 | 0 | 26 | 43,627 |
| 3131 | 532,456 | 14,394 | 121,887 | 1,430,617 | 2,099,354 |
| 3132 | 53,827 | 8,006 | 50,000 | 5,602 | 117,435 |
| 3141 | 956,173 | 47,328 | 168,599 | 3,561,184 | 4,733,285 |
| 3142 | 328,449 | 5,910 | 63,535 | 280,416 | 678,310 |
| 3150 | 117,437 | 35,063 | 168,353 | 68,202 | 389,055 |
| 3160 | 34,045 | 3,453 | 0 | 3,675 | 41,173 |
| 3170 | 276,795 | 43,078 | 21,506 | 54,450 | 395,830 |
| 3181 | 156,280 | 2,661 | 25 | 9,674 | 168,640 |
| 3182 | 89,785 | 5,667 | 0 | 11,260 | 106,712 |
| 3190 | 240,297 | 19,026 | 108,411 | 435,842 | 803,575 |
| 3201 | 259,612 | 41,291 | 72,133 | 824,178 | 1,197,214 |
| 3203 | 66,653 | 18,384 | 9,293 | 139,916 | 234,246 |
| 3204 | 26,457 | 2,178 | 0 | 17,668 | 46,303 |
| 3211 | 197,194 | 7,415 | 33,845 | 17,985 | 256,438 |
| 3212 | 378,044 | 169,749 | 329 | 113,806 | 661,928 |
| 3231 | 66,084 | 23,958 | 36,278 | 15,044 | 141,364 |
| 3232 | 129,487 | 77,592 | 112,253 | 873,591 | 1,192,924 |
| 3240 | 147,311 | 20,513 | 26,000 | 3,850 | 197,674 |
| 3250 | 38,250 | 315 | 0 | 59,195 | 97,760 |
| 3261 | 33,637 | 931 | 25,366 | 5,277 | 65,211 |
| 3262 | 54,682 | 818 | 700 | 34,165 | 90,364 |
| 3291 | 106,545 | 2,798 | 65,371 | 16,546 | 191,259 |
| **India Total** | **5,596,444** | **675,670** | **1,413,938** | **10,833,599** | **18,519,651** |
| 3220 **Sri Lanka** | 84,774 | 15,537 | 5,500 | 1,420 | 107,230 |
| 3271 **Pakistan** | 132 | 35,715 | 0 | 2,025 | 37,872 |
| 3272 **Pakistan** | 6,805 | 12,687 | 0 | 6,000 | 25,492 |
| 3281 **Bangladesh** | 84,271 | 6,651 | 24,125 | 207,520 | 322,567 |
| 3282 **Bangladesh** | 53,563 | 7,001 | 2,000 | 10,320 | 72,884 |
| 3292 **Nepal** | 198,878 | 20,766 | 96,174 | 78,514 | 394,332 |
| **South Asia Total** | **6,024,867** | **774,026** | **1,541,737** | **11,139,397** | **19,480,027** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office



சந்தியா ராவ்


# ஒரு திடமான, சுவாரசியமான வாசிப்பு

*அனைவரும் ஆபிரகாம் வர்கீஸின் சமீபத்திய படைப்பை பற்றி பேசுகிறார்கள், எனவே நாமும் மற்ற விஷயங்களுடன் சேர்த்து, அதை பற்றி பேசுவோம்.*

ஓப்ரா வின்ஃப்ரே, ஆபிரகாம் வர்கீஸின் சமீபத்திய புத்தகமான ''த கோவனன்ட் ஆஃப் வாட்டர்'' பற்றி அவரிடம் பேசும் ஒரு காட்சி யூடியூப்பில் பரவி வருகிறது. டோனி மோரிசனின் புத்தகம் உட்பட தனக்கு பிடித்த முதல் மூன்று புத்தகங்களில் இதுவும் இடம்பெற்றுள்ளதாக பாராட்டுக்களை குவித்தார். ''மேலும் நான் 3 வயதி லிருந்தே படித்து வருகிறேன்'' என்று ஓப்ரா கூறினார்.

இந்த மருத்துவர் மற்றும் நான்கு புத்தகங்களை எழுதியவர், மருத்துவத்தின் கோட்பாடு மற்றும் பயிற்சியின் பேராசிரியர், இப்போது ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் கல்வியின் துணைத் தலைவராக இருக்கும் இவர் சென்னை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார். அவரது முதல் இரண்டு புத்தகங்கள் - மை ஓன் கன்ட்ரி மற்றும் தி டென்னிஸ் பார்ட்னர் - மருத்துவத்தில் அவரது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை. மூன்றாவதான, கட்டிங் ஃபார் ஸ்டோன், புத்தகத்திற்காக அவர் புனைகதை பக்கம் திரும்பினார். அதுவும் வெற்றிகரமாக. இந்த புத்தகம் நியூயார்க் டைம்ஸின் பெஸ்ட்செல்லர் பட்டியலில் இரண்டு ஆண்டுகளாக இருந்தது மற்றும் பல பாராட்டுகளை வென்றது.

வர்கீஸ் தனது மருத்துவத் தொழிலில் தீவிரம் காட்டுவது போல எழுதுவதிலும் தீவிரம் காட்டுகிறார் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், மருத்துவப் படிப்பில் இருந்து ஓய்வு எடுத்துக்கொண்டு, அயோவா பல்கலைக்கழகத்தில் அயோவா எழுத்தாளர்கள் பட்டறையில் சேர்ந்து நுண்கலைகளில் முதுகலைப் பட்டம் பெற்றார். அது உலகில் அதிகம் விரும்பப்படும் எழுத்து பட்டப்படிப்புகளில் ஒன்றாகும். ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு வெளியிடப்பட்ட மை ஓன் கண்ட்ரி, அவரது சிந்தனையின் ஆற்றலையும் அவரது எழுத்து நடையின் தெளிவையும் வெளிப் படுத்தியது. விரிவானது, ஆனாலும் ஈர்க்கக்கூடியது; ஆழமானது ஆனால் கவனத்துடன் ஆராயப் பட்டது; உலகமறையை பேசினாலும், தன் கலா சாரத்தில் வேரூன்றியது. ஓப்ராவுடனான அந்த காணொளியில், அவரைப் பொறுத்த வரை மருத்துவ சேவை எல்லா வற்றிக்கும் மேலானது என்பதை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். அவருடைய எல்லா எழுத்துக்களிலும் மருத்துவம் ஊடுருவி இருப்பதை நீங்கள் காணலாம்.




இந்த கேரளா ஸ்டோரி-தற்போது திரையில் வந்து மற்றும் பல்வேறு தளங்களில் விவாதிக்கப்படுவதில் இருந்து முற்றிலும் வேறுபட்டது- உண்மையானது மற்றும் வெளிப் படையானது, தண்ணீரால் செழுமைப்படுத்தப்பட்டது மற்றும் வளமாக்கப்பட்டது. சில கணக்குகளின் படி, கேரளாவில் சுமார் 50 ஆறுகள், 35 ஏரிகள் உள்ளன, இது தவிர பல உப்பங்கழிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களும் உள்ளன. எனவே தண்ணீருடனான உறவுகள், இயற்கையாகவே, புத்தகத்தின் கருவாக உள்ளது. இதில் கதை, கதவுகள் திறக்கப்படுவது போல், ஒன்றன் பின் ஒன்றாக வெளிப்படுகிறது. அங்கு வாழும் மக்களின் சமூக, அரசியல், கலாச்சார, மத மற்றும் தனிப்பட்ட நுணுக்கங்களுடன் ஒரு வலுவான மற்றும் இணைப்பில்லாத ஆடையை போல சீராக பின்னப்பட்டுள்ளது. சில சமயங்களில் அது சொல்லும் கதை பெருமளவில் மேற்கத்திய பார்வையாளர் களுக்காக அமைந்துள்ளது போல் தோன்றி னாலும், அந்த துணி நேர்த்தியாகவே பின்னப்பட்டுள்ளது.

1900ஆம் ஆண்டில் திருவாங்கூரில், 12 வயது சிறுமி ஒருவள் தனது தாயுடன் பாயில் படுத்துக் கொண்டிருப்பதுடன் கதை தொடங்குகிறது. அந்த சிறுமிக்கு, மனைவியை இழந்த மற்றும் ஒரு சிறிய மகனை கொண்ட 40 வயதான ஒருவருடன் காலையில் திருமணம் நடக்க உள்ளது. அங்கிருந்து சுமார் 80 வருடங்கள் மற்றும் மூன்று தலைமுறைகள் அந்த கதை முன்னேறுகிறது. அந்த சிறுமி பெண்ணாக வளர்ந்து பின்னர் பாட்டியாக மாறுவது நாவலின் மையக்கதையாக உள்ளது. பக்கங்களில் விவரங்கள் படிப்படியாக சேர்க்கப்பட்டு அந்த உலகம் மறுஉருவாக்கம் செய்யப்பட, அந்த கதாபாத்திரங்கள் உயர்வையும் தாழ்வையும் சந்திக்கின்றன. தாராவாடு, சமையலறை, ஆறு, நடைபாதைகள், மருத்துவமனை, நோயாளிகள், திருவிழாக்கள் ஆகியவற்றின் விவரணைகளில் நீங்கள் ஆழ்ந்திருக்க மெது


மெதுவாக, ரகசியங்கள் வெளிவரத் தொடங்குகின்றன மற்றும் தொடர்புகள் வெளிப்படுகின்றன.

இது ஒரு மெதுவான வாசிப்பு: டெல் மீ அவ் இட் என்ட்ஸ்: நாற்பது கேள்விகளில் ஒரு கட்டுரை, வலேரியா லூயிசெல்லியின் மற்றொரு வகையான பயணத்தின் ஒரு சிறிய ஆனால் கண்களைத் திறக்கும் படைப்பு. ஹொண்டுராஸ், குவாத்தமாலா, எல் சால்வடார் போன்ற நாடுகளில் கற்பனை செய்ய முடியாத பயங்கரங்களில் இருந்து தப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் குழந்தைகள் மெக்சிகோ வழியாக அமெரிக்காவிற்குள் நுழைய மேற்கொள்ளும் உண்மையான மற்றும் ஆபத்தான பயணத்தை பற்றியது. அவை அனைத்தும் ஒரு அடிப்படை உரிமையைத் தேடி தான்: பாதுகாப்பு. அமெரிக்காவிற்குள் நுழையும் அனைத்து அகதிகளும் ‘ஆவணமற்ற அகதிகள்’ என்று முத்திரை குத்தப்படுகிறார்கள்.

புலம்பெயர்ந்தோரை நீங்கள் அமெரிக்காவில் சாலை களை பழுதுபார்ப்பது, வீட்டு வேலைகள் செய்வது, சைவ உணவு விடுதிகளை நடத்துவது போன்ற எல்லா இடங்களிலும் பார்த்தாலும், இன்றும் கூட, அவர்களுக்கு எதிர்ப்பு அதிகரித்து தான் வருகிறது. லூயிசெல்லி இந்த பிரச்சனைக்குரிய விஷயத்தை மறுபரிசீலனை செய்கிறார். அதிக எண்ணிக்கையிலான மெக்சிகர்கள் அமெரிக்காவில் தஞ்சம் கோரினாலும், இந்த புத்தகத்தில் இருந்து நாம் அறியும் பரிதாபம் என்னவென்றால், மத்திய அமெரிக்காவில் இருந்து குடியேறுபவர்களை மெக்சிகோ அரசாங்கமே கடுமையாக நடத்துகிறது என்பது தான்.

புலம்பெயர்ந்த குழந்தைகளை அமெரிக்கா சிறைபிடித்து வைத் திருப்பது பற்றி வெளிநாட்டு உறவுகளுக்கான கவுன்சிலின் கட்டுரையின் படி, 2022 இல், குடியேற்ற அதிகாரிகள் 1,52,000க்கும் மேற்பட்ட ஆதரவற்ற சிறார்களை அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் அல்லது அதற்கு அருகில் சந்தித்து ள்ளனர், இது வரலாறு காணாத எண்ணிக்கை. “அமெரிக்கக் கனவு” மற்றும் “அமெரிக்க இனவெறி மற்றும் அச்சத்தின் யதார்த்தம்” ஆகியவற்றுக்கு இடையே சிக்கித் தவிக்கும் குழந்தைகள் எதிலிருந்து தப்பி ஓடுகிறார்கள் என்பதையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால் களையும் லூயிசெல்லி நமக்குக் காட்ட முயற்சிக்கிறார். அங்குள்ள நடத்தைகள், மனப்பான்மைகள் மற்றும் கடுமையான அரசியல்-சட்ட முறைகள் ஆகியவை அமெரிக்காவில் மட்டுமல்லாமல், இந்தியா உட்பட உலகம் முழுவதும் பல நாடுகளில் நிலவுகின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

40 கோள்விகள் என்பது அமெரிக்க குடியேற்றத்தால் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கேள்வித்தாளைக் குறிக்கின்றன. மெக்சிகன் வம்சாவளியைச் சேர்ந்த லூயிசெல்லி ஒரு நாவலாசிரியர் ஆவார், அவர் நியூயார்க் நகரத்தில் உள்ள ஃபெடரல் குடியேற்ற நீதிமன்றத்தில் தன்னார்வ மொழி பெயர்ப்பாளராகப் பணிபுரிந்தார், உட்கொள்ளும் கேள்வித் தாளைத் தொடர்ந்து குழந்தைகளை நேர்காணல் செய்து, அவர்களின் கதைகளை ஸ்பானிஷ் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார், குறிப்புகள் மற்றும் டிரான்ஸ்கிரிப்ஷன்களை வழக்கறிஞர்களை சந்தித்து விளக்கினார். ‘ஏன் எப்பொழுது வந்தாய்’ என்று தொடங்கி, ‘உன் அமெரிக்கப் பயணத்தின் போது நடந்த எதாவது உன்னைப் பயமுறுத்தியதா அல்லது காயப்படுத்தியதா’, ‘உன் பெற்றோருடன் தொடர்பில் இருந்தாயா’, பயணத்தின் திகில், சந்தித்த ஆபத்துகள், ஆங்கில மொழியின் பரிச்சயமின்மையைத் தவிர, குழந்தைகளை பேச முடியாதவர்களாக ஆக்கும் பயம்... இவை அனைத்தையும் பதிவு செய்யலாம் மற்றும் குழந்தைகளின் மனநிலையை கற்பனை செய்யலாம். அதை செய்வதற்கு முக்கியமான தேவை வழக்கறிஞர்களின் பரிவு.




நீங்கள் வீட்டிற்கு திரும்பினால் என்ன நடக்கும் என்று நினைக் கிறீர்கள்? நீங்கள் திரும்பி செல்ல பயப்படுகிறீர்களா? நீங்கள் உங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பினால் உங்களை யார் கவனித்துக் கொள்வார்கள்? போன்ற கடைசி சில கேள்விகளுக்கு வரும் போது, அந்த குழந்தைகள் எப்படி வழியில் கற்பழிக்கப்படுகிறார்கள், கொள்ளையடிக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள் என்பதை நாம் அறிகிறோம் மற்றும் மிக முக்கியமாக, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் ஏன் மீண்டும் அவர்களின் நாடுகளுக்கு திருப்பி அனுப்ப முடியாது என்பதையும் நாம் அறிகிறோம்.

‘பல வருடங்கள் கடந்து, கதை முடிந்த பின், பின்னோக்கி பார்க்குபோது மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் உள்ளன. இதற்கிடையில், கதை தொடரும் போது, அதை திரும்பத் திரும்பச் சொல்வது மட்டுமே நம்மால் முடிந்தது. அதனால்தான் இனப்படுகொலை, பிரிவினை, ட்ரேவோன் மார்ட்டின் மற்றும் ஜார்ஜ் ஃபிலாய்ட், கவுரி லங்கேஷ், சப்தர் ஹாஷ்மி, சீக்கியர்களுக்கு எதிரான கலவரம், பாபர் மசூதி, கும்பகோணம் பள்ளி தீ, பெஷாவர் பள்ளி படுகொலை, ருவாண்டா உள்நாட்டுப் போர், விவசாயிகள் போராட்டம், மல்யுத்த வீரர்களின் எதிர்ப்புகள் ஆகியவை அனைத்தும் ஒளிபரப்பப் பட்டு பகிரப்பட வேண்டும். இதன் மூலம் அந்த கதைகளை நினைவில் வைத்திருப்பது மட்டுமல்லாமல், அவை மீண்டும் செய்யப்படாமல் இருப்பது மட்டுமல்லாமல், பொய்களின் மூலம் இந்த கதைகள் மாற்றப்படாமல் இருக்கவும் உதவும்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# கோடை மற்றும் மழைக்காலங்களில் உடல் ஆரோக்கியம்

பரத் — ஷலன் சவூர்

அன்பான வாசகர்களே, தசை விறைப்பு அல்லது பிடிப்புகள் தானாகவே நீங்கும் என்ற நம்பிக்கையில் தயவு செய்து அதை புறக்கணிக்காதீர்கள். சமீபத்தில், என் கெண்டைத்தசை திடீரென்று கடினமாக இருப்பதை உணர்ந்தேன். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் ஆரோக்கியமாக இருக்கிறேன். ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று லிட்டர் தண்ணீர் குடிப்பேன். என்ன பிரச்சினையாக இருக்கலாம்? காரணம் என்னவென்றால்: வானிலை மாற்றமும் அதற்கு ஏற்றார்போல் நமது உடல் மாறுவதும் தான். எனவே, வெப்ப அலைகள், கடுமையான பருவமழைகள், நீடித்த குளிர்காலம் ஆகியவற்றைக் கொண்டு வரும் காலநிலைகளைக் கருத்தில் கொண்டு, அதற்கேற்ப ஆரோக்கியமான பாதையில் நாம் செல்ல வேண்டும்.

என் கெண்டைத்தசை விறைப்பை வானிலையுடன் இணைப்பது விசித்திரமாகத் தெரியும், ஆனால் நமது கிரகம் வெப்ப அலைகளை வெளிப்படுத்துவதால், நமது தசைகள் நீர் மற்றும் உப்புகளை விரைவாக இழந்து பிடிப்புகள் வருகின்றன. 1975-ஆம் ஆண்டிலிருந்து ஒரு தசாப்தத்திற்கு 0.15 முதல் 0.20 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரித்து வருவதாக ஆராய்ச்சி கூறுகிறது. மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, “2023 முதல் 2027 வரை இதுவரை பதிவு செய்யப்படாத அளவு வெப்பமான ஐந்தாண்டு காலப்பகுதியாக இருக்கும்.”

வெப்பச் சோர்வைத் தவிர்க்க, நாம் கவனிக்க வேண்டிய அறிகுறிகள் இவை: கடுமையான தாகம், பசியின்மை, தலைவலி, தலைச் சுற்றல், மங்கலான பார்வை, காய்ச்சல், குமட்டல், குளிர்ந்த வியர்வை, செறிவு இழப்பு அதனால் ஏற்படும் குழப்பம், பகுத்தறிவற்ற நடத்தை, பலவீனம், பிடிப்புகள், மயக்கமடைதல், பதட்டம் மற்றும் மனச்சோர்வு. நினைவில் கொள்ளுங்கள், இவை பயப்பட வேண்டிய விஷயங்கள் அல்ல, மாறிவரும் இந்த நிலைமைகளுக்கு மத்தியில் நாம் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு நாள், நம் உடல் அதற்கு ஏற்றவாறு தன்னை பலப்படுத்தி, நிலைப்படுத்தும். அந்த முன்னெச்சரிக்கைகள் இங்கே:

மதிய வேளை சூரியனை தவிர்க்கவும். உங்கள் உடல் ஏற்கனவே சூடாக இருக்க, அதன் வெப்பநிலை உயர்த்தக்கூடாது. நீங்கள் வெளியே செல்ல வேண்டியிருந்தால் ஒரு தொப்பியை அணியுங்கள் மற்றும் வாகனத்தில் செல்லுங்கள், ஏனெனில் அது காற்று உங்கள் முகத்தை குளிர்விக்க அனுமதிக்கும்.



குளிர்ந்த நீரை குடிக்கவும். எலக்ட்ரோலைட்டுகள் கொண்ட பானத்தைச் பருகவும். அதிக வியர்வை சுரப்பவர்கள் பொட்டாசியம் மற்றும் சோடியத்தை வேகமாக இழப்பார்கள் - இது பலவீனம் மற்றும் தசை பிடிப்புகளை ஏற்படுத்தலாம் அல்லது மூளையின் செயல்பாட்டைக் குறைத்து தெளிவற்ற மற்றும் குழப்பமான உணர்வை உண்டாக்கலாம். ஒரிரண்டு வாழைப்பழங்களை சாப்பிடுங்கள் உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக்

கிழங்கு, கீரைகள், பட்டாணி மற்றும் பீன்ஸ் ஆகிய வற்றை கொண்டு உங்கள் உணவை திட்டமிடுங்கள். உங்களுக்கு அதிகமாக வியர்த்தால், குறைந்த உப்பு சத்து கொண்ட உணவுமுறையை பின்பற்ற வேண்டாம். தசைகள் மற்றும் நரம்புகள் சீராக செயல்பட, திரவ சமநிலையை பராமரிக்க உடலுக்கு சோடியம் தேவைப் படுகிறது.

உங்கள் நெற்றியில் குளிர்ந்த, ஈரமான துணியை வைக்கவும் அல்லது தலை, முகம் மற்றும் கழுத்தில் ஐஸ் கட்டியை அழுத்தவும். வெதுவெதுப்பான நீருக்கு பதிலாக குளிர்ந்த நீரில் குளிக்கவும்.

நீர்ச்சத்து நிறைந்த பழங்கள் மற்றும் காய்கறிகளை சாப்பிடுங்கள் – தர்பூசணி, முலாம்பழம், ஸ்ட்ராபெர்ரி, ஆரஞ்சு, வெள்ளரி, கீரை, காலிஃபிளவர், முட்டைக்கோஸ், தக்காளி மற்றும் கேப்சிகம். புதினா இலைகளுடன் குளிர்ந்த வெள்ளரி சூப் வயிற்றை உடனடியாக குளிர்விக்கும்.

மதுபானம், காபி, காஃபினேட்டட் குளிர்பானங்களை தவிர்த்து குளிர்ந்த பால், மோர் அல்லது லஸ்ஸியுடன் மாற்றவும். இந்த பானங்களில் சப்ஜா விதைகளை சேர்க்கவும், அவை இயற்கையாகவே உடலை குளிர்விக்கும் மற்றும் மலச் சிக்கலையும் நீக்கும்.

புகைபிடிப்பதை நிறுத்த இதுவே சரியான நேரம்.

உடற்பயிற்சியை தொடரவும். இது உங்கள் நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்துகிறது. சிரமம் வேண்டாம் – இலகுவான எடைகளைப் பயன்படுத்துங்கள், குறைவான முறை செய்யுங்கள். சுட்டெரிக்கும் வெளியை விட உட்புற குளிர்ச்சியை விரும்புங்கள். விடியற்காலையில் அல்லது சாயங்காலம் மட்டும் நடக்கவும். நீச்சலும் ஒரு நல்ல வழி. உடற்பயிற்சி செய்யும் போது, நீங்கள் அசௌ கரியமாக சூட்டை உணர்ந்தால் நிறுத்தவும், எலக்ட்ரோலைட் பானத்தை குடித்துவிட்டு, குளித்து ஓய்வெடுக்கவும்.

தளர்வான, இலகுவான ஆடைகளை அணியுங்கள்.

வெப்ப அலைகளில் இருந்து, புயல் காற்றுக்கு செல்லலாம்.

திடீர் காலநிலை மாற்றம் நமது ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் பாதிக்கிறது என்பதில் சந்தேக மில்லை. வல்லுநர்கள் கூறுகையில், பருவமற்ற மழையானது காற்றின் இயக்கத்தையும், நாம் சுவாசிக்கும் காற்றின் தரத்தையும் பாதிக்கிறது– ஆக்ஸிஜனுடன், காற்றில் உள்ள மாசு பொருட்களையும் உள்ளிழுக்கிறோம்.

கடுமையாக மாறிவரும் நமது பருவமழைகளை எப்படி எதிர்கொள்வது? சில பரிந்துரைகள்:

இந்தியாவில், நாம் எப்போதும் மழையை ஒரு வரமாகவே கருதியுள்ளோம். மழையை நேசியுங்கள், அது காற்றில் இருந்து மாசுபாட்டையும், சோர்வடைந்த நம் மனதில் உள்ள தூசியையும் சுத்தப்படுத்துகிறது.

வைட்டமின் சி உட்கொள்ளலை அதிகரிக்கவும் – முளைகள், பீன்ஸ், ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை. இது நமது நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துவதன் மூலம் காய்ச்சல், தொண்டை கரகரப்பு, சளி ஆகியவற்றிலிருந்து நம்மை பாது காக்கிறது.

சுடவைத்த அல்லது வடிகட்டிய தண்ணீரைக் குடிக்கவும். மழை காலத்திலும் உடலுக்கு நீர்ச்சத்து தேவைப்படும்.

ஸ்ட்ரீட் ஃபுட்களை தவிர்க்கவும். சாலை குழிகளில் இருக்கும் நீர் கிருமிகளை அடைகாக்கும். அதன் அருகில் உள்ள உணவுகள் மூடப்படாமல் கிடந்தால் கிருமிகளால் பாதிக்கப்படும். நன்கு சமைத்த வீட்டு உணவை சாப்பிடுவது புத்திசாலித்தனம்.

அதிக ப்ரோ-பயாடிக்குகளை சாப்பிடவும். தயிர் மற்றும் மோரில் உலர்ந்த திராட்சையை சேர்த்து சாப்பிடவும். அவை குடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும். உங்கள் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டால் இன்னும் கவனமாக இருக்கவும். அது இரைப்பை குடல் பிரச்சினைகளை ஏற்படுத்தும் நோய்க்கிருமிகளை பரப்பும். மேலும், கட்டிடத்திற்குள் தண்ணீர் செல்வதால் அச்சு உருவாகலாம், இது சிறிய வித்திகளை காற்றில் வெளியிடுகிறது மற்றும் ஆஸ்துமா, இருமல் மற்றும் தொண்டை நோய்த் தொற்றுகளை அதிகரிக்கிறது. தேநீரில் இஞ்சியையும், காபியில் இலவங்கப்பட்டையையும் சேர்க்கவும். இஞ்சியில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் உள்ளன. இலவங்கப்பட்டை பாக்டீரியா எதிர்ப்பு நன்மைகளை வழங்குகிறது.

வெளியே சென்று வந்தால் கை, கால்களைக் கழுவவும்.

பாத்திரங்களை மூடவும். மேலும் எங்கும் தண்ணீர் தேங்க அனுமதிக்காதீர்கள் – இது கொசுக்களின் இனப்பெருக்க இடமாகும்.

உடற்பயிற்சி! தெருக்களில் வெள்ளம் ஏற்பட்டாலோ அல்லது பலத்த மழை பெய்தாலோ வீட்டிற் குள்ளேயே இருங்கள் மற்றும் நிலையான பைக் ஓட்டுதல், நின்ற இடத்திலே நடத்தல் அல்லது நடனம் ஆகியவற்றை செய்யுங்கள். சுவாச பயிற்சிகளை செய்யுங்கள். மேகங்கள் இருண்டு, சூரிய ஒளி இல்லாத போது, நாம் விழித்திருக்கும் நேரத்தில் உடல் மெலடோனின் என்ற தூக்க ஹார்மோனைத் தொடர்ந்து உற்பத்தி செய்து, தூக்கத்தை தூண்டுகிறது. தவிர, ‘பிங்க் நாய்ஸ்’ என்று குறிப்பிடப்படும் மழையின் தொடர்ச்சியான சத்தம் நம்மை மேலும் அமைதிப்படுத்தும். சுறுசுறுப்பாக இருக்க அறையில் உள்ள பிரகாசமான விளக்குகளை எரியவிடுங்கள். 20 விண்ட்மில்ஸ் பயிற்சியை தீவிரமாக செய்யுங்கள். புரதம் நிறைந்த உணவுகளான பருப்பு வகைகள், பன்னீர், டோஃபு, பால், பச்சை பட்டாணி ஆகியவற்றை உண்ணுங்கள். புரதம் மனதைத் தூண்டும். நூடுல்ஸ், பர்கர்கள், ஃப்ரைஸ், ஆல்கஹால் ஆகியவற்றைத் தவிர்க்கவும் – அவை சோம்பலை ஊக்குவிக்கும்.

ஒவ்வொரு காலையிலும், நன்றியுணர்வுடன் இருக்கவும்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

## RC கடலூர் கோஸ்டல் சிட்டி — RID 2981



கடலூர் அரசு மருத்துவ மனைக்கு மருத்துவ உதவி வண்டி, x-ray இயந்திரம் ஆகியவற்றை சங்கம் வழங்கியது.

## RC டெல்லி மயூர் விகார் — RID 3012

மன்டோலா ஸ்ரீ காந்தி ஸ்மாரக் அரசு இடைநிலைக் கல்லூரியில் சானிட்டரி பேட் வழங்கும் 2 இயந்திரங்கள் நிறுவப்பட்டன.



## RC மதுரை சங்கமம் — RID 3000



RCகள் மதுரை வெஸ்ட், சவுத், ஸ்டார், எலைட் இணைந்து ஏஞ்சல் தேவகி முதியோர் இல்லத்தில் சுமார் 350 மரக் கன்றுகளை நட்டனர்.

## RC விஜயவாடா மிட்-டவுன் — RID 3020

PDG மன்சூர் மஸ்ஸெ, US, கொடையளித்த ரூ.7 லட்சத்தைக் கொண்டு, மகினெனி பசவ புன்னையா விஞ்ஞான கேந்திரத்தில் பயிற்சி பெற்ற 100 பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.



## RC டெல்லி ஹெரிடேஜ் — RID 3011



சராய் காலெகான் கிராமத்தில் SDMC தொடக்கப் பள்ளியில் கை கழுவும் நிலையம் நிறுவப்பட்டது.

## RC சூரத் டாபி — RID 3060

உலகப் புத்தக நாளில், கோபால் தொண்டு அறக்கட்டளை, லோக்மங்களம் அறக்கட்டளை, கோபா உடன் இணைந்து, தரம்பூரில் நூலகம் திறக்கப்பட்டது.



# செய்திகள்

## RC மொகா ஸ்டார்ஸ் — RID 3090



RCகள் பொக்ரான், RID 3292, நேபாளம், கோல்ட் கோஸ்ட் லேக் சக்ஸஸ், RID 7266, US, ஹிக்ஸ்வில்லெ சவுத், RID 7255, US உடன் இணைந்த பன்னாட்டு நல்கை வழியாக, குடிமையியல் மருத்துவமனைக்கு மருத்துவ உதவி வண்டி கொடையளிக்கப்பட்டது.

## RC லக்னோ பராதாரி — RID 3120

தாலி கஞ்ச் பகுதியில் 400 அடி குழாய்க் கிணறு, மூழ்கும் பம்ப்புடன் கூடிய குடிநீர் அமைப்பை IPDG அனில் அகர்வால் திறந்துவைத்தார்.



## RC மொராடாபாத் — RID 3100



இந்தச் சங்கமும் RC மொராடாபாத் ஹெரிட்டேஜும் நடத்திய இளம் பிள்ளைவாத NID திட்டத்தில் இத்தாலிய ரோட்டரியன்கள் குழு ஒன்று பங்கேற்றது.

## RC புணே லோகமான்யநகர் — RID 3131

அரசுக் கல்வி அமைப்பான பால் கல்யாண் சன்ஸ்தானுக்கு, ரூ.22 லட்சம் CSR நல்கை வழியாக பேருந்து, ஃபிசியோதெரபி ஆய்வகம், பிற கருவிகள் கொடையளிக்கப்பட்டன.



## RC நைனிடால் — RID 3110



RC சரசோடா சன்ரைஸ், RID 6960, US, மற்றும் RID 3012 உடன் இணைந்து இந்தர்ஷீல் மருத்துவ மனைக்கு மருத்துவ உதவி வண்டி, மருத்துவக் கருவிகள் சங்கம் வழங்கியது.

## RC சோலாப்பூர் பிரைட் — RID 3132

நீரிழிவைத் தடுக்க நடைப் பயிற்சி உதவும் என்ற செய்தியைப் பரப்ப, 'நீரிழிவை வெல்வோம்' என்ற வாக்கத்தான் நடத்தப்பட்டது.



## RC அம்பர்நாத் — RID 3142



முன்னாள் தலைவர் ஹேமந்த் கொக்டெ எழுதிய, ரோட்டரியைப் பற்றிய மராத்தி மொழிக் கையேடு ஒன்றை, PRID அசோக் மகாஜன், RID அனிருதா ராய் சௌத்ரி வெளியிட்டார்.

## RC கோட்டா சிட்டி — RID 3182



கணவரை இழந்த பெண் ஒருவருக்கென, பந்தவ்யா என்ற உள்ளூர் NGO ஆதரவுடன் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது.

## RC அடொனி — RID 3160



பசரகொடு கிராமத்தில், ஷா பிரேம் சந்த் மனாஜி தொண்டு அறக்கட்டளை ஆதரவுடன் நடைபெற்ற கண் பரிசோதனை முகாமில் சுமார் 150 நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டனர்.

## RC கோவை — RID 3201




தெரா பந்தி மகிலா மண்டலுடன் இணைந்து, பார்வைக் குறைபாடுள்ள படித்த பெண் ஒருவருக்குப் பெட்டிக்கடை அமைத்துத்தரப்பட்டது.

## RC விடா சிட்டி — RID 3170



இந்த சங்கம் நடத்திய முகாமில் 145 பேருக்குச் செயற்கைக் கை, கால்கள் வழங்கப்பட்டன.

## RC குவில்டன் ஹெரிடேஜ் — RID 3211



இந்த சங்கம் பெண் ஒருவருக்குத் தையல் இயந்திரமும் மாற்றுத் திறனாளி ஒருவருக்குச் சக்கர நாற்காலியும் வழங்கியது.

# செய்திகள்

## RC சிவகாசி — RID 3212



சென்னை அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் பங்கேற்ற இதய முகாமில், 135 குழந்தைகள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC குவஹாத்தி சவுத் — RID 3240

Rtn பிரியம் கோஸ்வாமி, தன்னுடைய மறைந்த கணவரும் இந்த சங்கத்தின் முன்னாள் உறுப்பினர் பினோதெ கோஸ்வாமி நினைவாக ஓம் சாந்தி என்ற NGOக்கு உறைவிப்புப் பெட்டியை வழங்கினார்.



## RC வேலூர் சவுத் — RID 3231



வேலூர் வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரி ஆதரவுடன் 175 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு RYLA நடத்தப் பட்டது.

## RC ஜாம்ஷெட்பூர் வெஸ்ட் — RID 3250

பால் கல்யாண் மந்திர் பள்ளியில் IPDG சஞ்சீவ் தாகுர் குடிநீர் வச தியுள்ள கை கழுவும் நிலையத்தைத் தொடங்கி வைத்தார்.



## RC ஆலந்தூர் — RID 3232



ரோட்டராக்டர்கள் மற்றும் புனித ஜோசஃப் ஆதரவற்றோர் இல்லக் குழந்தை களுக்கு ஜவ்வாது மலையில் சங்கம் RYLA நடத்தியது.

## RC கல்கத்தா சவுத் சப்-அர்பன் — RID 3291

RCC கன்குரா மஸ்த், சவுத் 24 பர்கனாஸ் ஆதரவுடன், ரூ.94,930 செலவில் 10 தையல் இயந்திரங் களுடன் ரோட்டரி தையல் பள்ளி தொடங்கப்பட்டது.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# இழந்த வாய்ப்புகள்

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

அரை நூற்றாண்டுக்கு முன், 1971ல் குல்சார் “மேரே அப்னே” என்ற படத்தை இயக்கினார். இது 1960களின் பிற்பகுதியில் இளைஞர்கள் எதிர் கொண்ட சமூக நிலைமைகளான வேலையின்மை மற்றும் நம்பிக்கையின்மை பற்றிய கூற்றாக இருந்தது. அந்த லட்சக் கணக்கான இளைஞர்களில் நானும் ஒருவன். எம்.ஏ பட்டப்படிப்பின் பாதியில் இருக்க வாழ்க்கையில் என்ன செய்யப் போகிறேன் என்ற தெளிவான யோசனை இல்லாமல் இருந்தேன். அப்போது வேலைகளில் பல வாய்ப்புகள் இல்லை. அரசாங்கமும் பொதுத் துறையும் தான் அதிக வேலை வாய்ப்புகளை வழங்கின. தனியார்துறை ஊழியர்களால் பெரிதாக நம்பப்படவில்லை, அதேபோல் தனியார்துறையும் அவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமூக வட்டங்களில் இருந்து பரிந்துரைக்கப்படும் வரை ஊழியர்களுக்கும் வேலை வழங்கவில்லை. அதனால் தான் அந்தப் படத்தின் ஒரு பாடல் பிரபலமானது. அதன் முக்கிய வரி பிஏ கியா, எம்ஏ கியா, ஜோ குச் கியா ஐவீன் கியா. பஞ்சாபியில் ஐவீன் என்றால் அர்த்தமற்றது என்று பொருள், தமிழில் சும்மா அல்லது ஜஸ்டு. இரண்டு சொற்களும் அர்த்தமற்ற தன்மையைக் குறிக்கின்றன.

பொருளாதாரத்தில் எம்.ஏ முடித்த பிறகு என் குடும்ப பாரம்பரியத்திற்கு ஏற்றார் போல் என் தந்தை சரி, இப்போது நீ சட்டப் பட்டப்படிப்பில் சேர்ந்து சிவில் சர்வீஸ் தேர்வு எழுது என்று சொன்னார். அந்த இரண்டையும் மிகுந்த அர்ப்பணிப்பு, முயற்சி மற்றும் நம்பிக்கையுடன் செய்தேன். ஆனால் நான் இரண்டிலும் தோல்வியடைந்தேன். நான் மேலே குறிப்பிட்ட பாடலின் ட்யூனை தொடர்ந்து ஹம் செய்ய ஆரம்பித்தேன். பாடல் வரிகள் பொருத்தமாக இருந்தது மற்றும் டியூன் கவர்ச்சியாக இருந்தது மற்றும் என் சூழ்நிலையை கச்சிதமாக படம்பிடித்து காட்டியது.

நான் உண்மையில் சட்டப்படிப்பில் தோல்வி அடையவில்லை. அது மிகவும் மோசமாக கற்பிக்கப்பட்டது மற்றும் இன்னும் மோசமாக பரிசோதிக்கப்பட்டது, நான் என் தந்தையிடம் இது ஒரு ஓட்டுநர் உரிமம் தேர்வு போன்றது என்று சொல்லிவிட்டு இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு அப்படிப்பில் இருந்து வெளியேறினேன். என் வகுப்புத் தோழர்கள் பெரும்பாலும் என்னைப் போலவே முட்டாள்களாக இருந்தனர். சட்டத் தொழிலின் இழப்பு பத்திரிகை தொழிலின் லாபமானது. அந்நாட்களில் வழக்கறிஞர் தொழிலை விட பொருந்தாதவர்களை அன்புடன் வரவேற்ற ஒரே தொழில் அதுதான்.

பொதுப்பணி துறையை பொறுத்த வரை, பிரிட்டிஷ் வரலாறு மற்றும் பிரிட்டிஷ் அரசியலமைப்பு வரலாறு போன்ற விசித்திரமான பாடங்களில் நான் கடினமாக உழைத்தேன். 1952 மற்றும் 1985-க்கு இடையில் தேர்வில் தேர்ச்சி பெற்ற தோழர்களைக் கேட்டால், அவர்களில் பாதி பேர் தாங்கள் வரலாற்றுப் பட்டதாரிகளாக இல்லாவிட்டாலும் இந்தப் பாடங்களைத் தேர்ந்தெடுத்ததாகச் சொல்வார்கள். இவையெல்லாம் சீன மொழி போல ஒரு ‘ஸ்கோரிங்’ பாடங்களாக இருந்தன! மிகச் சிலரே தங்கள் பட்டப்படிப்பு பாடங்களைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் நான் அப்படி செய்த துணிச்சலான மற்றும் முட்டாளான நபர்களில் ஒருவன். எனது எம்ஏ பட்டம் டெல்லி ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் இருந்து பெறப்பட்டது, 1990களின் நடுப்பகுதி வரை, உலகின் புகழ்பெற்ற நிறுவனங்களில் ஒன்றாக இருந்தது.

நான் எழுத்துத்தேர்வில் தேர்ச்சி பெற்று நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டேன். மதிய உணவுக்கு முன் நேர்காணலுக்கு வந்த கடைசி நபர் நான் என்பதால் பத்து நிமிடம் மட்டுமே அது நீடித்தது. குறைந்தபட்சம் நான் எதிர்பார்த்தபடி நேர்காணலில் நான் நன்றாக பதிலளித்தேன். ஆனால் மே மாதம் முடிவுகள் வந்தபோது பட்டியலில் எனது பெயர் இல்லை. இது ஏமாற்றமாக இருந்தது, ஆனால் எனது உலகம் இருண்டு போகவில்லை. மதிப்பெண் பட்டியல் வெளிவர, எழுத்துத் தேர்வில் இரண்டு பொருளாதாரத் தாள்களில் 20 சதவீதத்திற்கும் குறைவாக பெற்றிருந்தேன். ஆனால் பல லட்சக்கணக்கானோர் போல கைடு புத்தகத்தை படித்து பிரிட்டிஷ் வரலாறு மற்றும் பிரிட்டிஷ் அரசியலமைப்பு வரலாற்றில் 60 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றிருந்தேன். இதை நான் என் தந்தையிடம் சொன்ன போது அவர் என்னிடம் ஒரே ஒரு கேள்வி கேட்டார்: கைடு புத்தகத்தில் இருந்து ஏன் நீ பொருளாதாரத்தை படிக்கவில்லை?என்று, நல்ல கேள்வி.■

ADVT.


SATISFACTION
100%
GUARANTEED
IDHAYAM
Mantra
GROUNDNUT OIL
मंत्रा
मूंगफली का तेल
Manasellam Mantra
SAY IDHAYAM • SPELL HEALTH
Mantra
GROUNDNUT OIL
• Unmatchable Quality and Colour
• Abundant Flavour While Cooking
• Wonderful Taste
• Endless Health Benefits
LEKHA ads/July 2023/RJ-02
IDHAYAM | www.idhayam.com | office@idhayam.com | Whatsapp : 99447 66661

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

